# விடுதலைப்புலிகள்

குரல்: 126 | புரட்டாதி – ஐப்பசி – 2005 | அன்பளிப்பு: 12/=



03 சாவிற்கு முன்னரே ஆயத்தமாகும்...
05 போர்நிறுத்த உடன்பாடு...
06 "சமாதானம்" ஓர் வரலாற்று...
07 சமாதானத்தின் உயிரிழையை...
08 போரும் அமைதியும்...


# அமைதிவழியிலான அரசியலில் விரக்தியடையும் தமிழ்மக்கள்

**மூன்றரை வருடத்திற்கு முன்னர் போர்நிறுத்த உடன்பாடு காணப்பட்டபோது போருக்கு முடிவு நெருங்கிவிட்டது! சமாதானம் தளைத்தோங்கப் போகின்றது! என்று தமிழ்மக்கள் குதூகலித்தனர்.**

**சர்வதேசத்தின் நேரடிக் கண்காணிப்பில் மூன்றாந்தரப்பு நாடொன்றின் மத்தியத்துவப் பணியின் கீழ் நடைபெறுகின்ற சமாதான முயற்சிகள் வெற்றிகரமாக முன்னேற்றம் காணும் என்று தமிழ்மக்கள் நம்பினர்.**

**ஆனால், சர்வதேச சமூகத்தையும் மதிக்காத சிங்கள அரசின் கடும்போக்கால் சமாதான முயற்சிகள் பாரிய நெருக்கடிகளைச் சந்தித்துள்ளது.**

இதே சமயம், 'தமிழருக்கு உரிமை வழங்கக்கூடாது' என்ற அரசியல் கோசத்தை முன்வைத்து சிங்களத்தின் ஆளும் கட்சி ஜனாதிபதித் தேர்தலை எதிர்கொள்ளும் அளவுக்கு தற்போதைய சமாதான முயற்சிகள் அவநம்பிக்கை தரும் வகையில் உள்ளன.

சர்வதேச மத்தியத்துவம் இலங்கைத் தீவின் சமாதான முயற்சிக்கு வலுச்சேர்க்கும் என்ற சமாதான விரும்பிகளின் எதிர்பார்ப்பு கேள்விக்குறியாகிவிட மறுபுறத்தில் போர்வெறியர்களும், பேரினவாதிகளும் ஒன்றிணைந்து பலம்பெறுகின்ற அரசியற்சூழலே சிங்களத்தில் இன்று காணப்படுகின்றது.

இனப்பிரச்சினை வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக நிகழ்ந்த போர்நிறுத்த உடன்பாட்டைச் சிங்கள அரசு ஒரு சமாதானத்தின் திறவுகோலாக இன்றுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. தொடர்ந்தும் அதை முடக்கியே வைத்திருக்கின்றது.

போர்நிறுத்த உடன்பாட்டை முறித்துக்கொண்டு புலிகளுடன் போரைத் தொடங்கும் எண்ணத்துடனேயே "வெளிநாட்டில் பேச்சுக்கள் இல்லை" என்ற அரசியல் நிலைப்பாட்டிற்கு சிங்கள அரசு வந்தது.

இவ்வாறு சர்வதேச சமூகத்தை ஏமாற்றி, திசை திருப்புவதற்காக சிங்கள அரசுகள் காலங்காலமாக சில காரணிகளை முன்வைத்து அமைதிவழி முயற்சிகளை முறியடித்து வருகின்றன.

சிங்கள அரசின் தொடர்ச்சியான இனவாத நிலைப்பாடும், ஏமாற்று அரசியலும் தமிழ்மக்களுக்கு சலிப்பையும், விரக்தியையும் ஏற்படுத்தி வருகின்றன. சிங்கள அரசு எவ்வகையான அரசியல் நாடகங்களை அரங்கேற்றி வந்தாலும் தமிழ்மக்களை ஏமாற்றமுடியாது என்பதை அவர்கள் பலவழிகளில் வெளிப்படுத்தி வருகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த பொங்குதமிழ் நிகழ்வில் பெருந்தொகையான மக்கள் ஒன்றுதிரண்டு தமது அரசியல் அபிலாசைகளைச் சிறப்பான முறையில் வெளிப்படுத்தியிருந்தனர். இதேபோன்று தமிழர் தாயகம் எங்கும் எழுச்சிப் பிரகடனங்களையும், மாநாடுகளையும் – அரசியல் பேரணிகளையும் நடாத்தி சிங்கள அரசுக்கும் – உலக சமூகத்திற்கும் தமது மன உணர்வுகளை எடுத்துக்காட்டி வருகின்றனர்.

இரண்டு தசாப்தகாலப் போரால் பெரிதும் பாதிக்கப்பட்டது தமிழ்மக்கள் தான். இந்தவகையில் தமிழ்மக்கள் போரை விரும்பவில்லை. சமாதான வழி மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல்தீர்வு காண்பதையே அவர்கள் விரும்புகின்றனர்.

ஆனால், தமிழரின் அமைதிவழி ஆர்வத்தை சிங்கள அரசு தவறாகக் கணித்து மீண்டும் போரைத் தொடங்க விரும்பினால் அதற்கு முகங்கொடுக்கவும் மக்கள் தயாராகி வருகின்றனர்.

ஆயுதப் பயிற்சிகள் பெற்று புலிகள் இயக்கத்தின் துணைப்படைக் கட்டமைப்பில் தமிழ்மக்கள் பெருமளவில் இணைந்து வருகின்றனர். ஆக்கிரமிப்புப் பகுதிகள் – விடுவிக்கப்பட்ட பிரதேசங்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமல் தமிழர் தாயக நிலப் பகுதிகள் எங்குமே இந்த துணைப்படைக் கட்டமைப்பை வலுப்படுத்தும் வகையில் இராணுவப் பயிற்சிகள் பெறுகின்றனர். தேவை ஏற்பட்டால் சிங்களப் படைகளுடன் போரிடவும் தயார் என்ற அரசியல் செய்தியை தமிழ்மக்கள் சிங்கள அரசிற்கும் தெரிவிக்க விரும்புகின்றனர்.

சிங்கள அரசு தொடர்பாகவும், சமாதான அரசியலை அது நடாத்த முனையும் வழிமுறை தொடர்பாகவும் தமிழ்மக்கள் எதிர்மறையான கருத்தையே வைத்துள்ளனர். இதை சர்வதேச சமூகமும் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

தொடர்ந்தும் சமாதானத்தை ஒரு தந்திரோபாய அரசியலாக சிங்களம் பயன்படுத்தி தமிழரின் விடுதலை உணர்வை நசுக்கிவிடலாமென்று கனவுகாண முடியாது. அத்துடன் அது தொடர்ந்தும் சர்வதேச சமூகத்தை ஏமாற்றவும் முடியாது.



பொறுத்துப் பொறுத்து வெறுத்தோம் – இனி களத்தில் புகுந்து பெறுவோம்

# ஐரோப்பிய யூனியனின் அநீதியான நிலைப்பாடு

புலிகளின் குரல்

ஐரோப்பிய நாடுகளுக்கான புலிகள் இயக்கத்தின் அரசியல் பயணங்களை தற்காலிகமாக வரவேற்பதில்லை என 27.09.2005 அன்று ஐரோப்பிய யூனியன் அறிவித்துள்ளது.

இவ் அறிவிப்பைக் கேள்வியுற்று புலிகள் இயக்கம் மிகுந்த அதிர்ச்சியும் - ஆச்சரியமும் அடைந்துள்ளது.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு எதிராக - தமிழரின் சட்டபூர்வ அரசியல் அபிலாசைகளுக்கு எதிராக சிங்களதேசத்தின் பெரும்பாலான கட்சிகள் ஒன்றிணைந்து இனவெறி அரசியலை முன்னெடுக்க மக்கள் ஆணை கேட்க முற்படும் இன்றைய அரசியற் சூழலில் தமிழரின் போராட்டச் சக்தியான புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய யூனியன் எடுத்த இத் திடீர் முடிவு தமிழ்மக்களை திகைப்பில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த மூன்றரைவருட சமாதான காலத்தில் சிங்கள அரசு உடன்பட்டவற்றை நடைமுறைப்படுத்தாது, சர்வதேச சமூகத்தின் முன்னிலையில் தமிழ்மக்களை ஏமாற்றி வந்துள்ளது.

ஆயினும் சர்வதேச சமூகத்தின் வேண்டுகோளிற்கிணங்க புலிகள் இயக்கம் பொறுமை காத்து - அமைதி வழி அரசியலிலேயே கால்பதித்து நின்றது.

இந்த நிலையில் தண்டிக்கப்படவேண்டிய சிங்கள அரசை தப்பிக்கவிட்டு, சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைத்த புலிகள் இயக்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்த ஐரோப்பிய யூனியனின் நிலைப்பாடு அநீதியானது - ஒரு பக்கச் சார்பானது என்பதே தமிழ்மக்களின் குற்றச்சாட்டாகும்.

புலிகள் இயக்கத்துடன் சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுதல் என்ற போர்வையில் சிங்கள அரசு சூழ்ச்சிகரமான சதி அரசியலையே நடாத்திவருகின்றது. தமிழ்மக்களுக்கு உரிமைகள் வழங்கக்கூடாது என்பதில் பிடிவாதமாக இருப்பதுடன் சர்வதேச நாடுகளிடம் இருந்து கிடைக்கும் மனிதாபிமான உதவிகளையும் தடுப்பதிலேயே சிங்கள அரசு குறியாக உள்ளது. இது ஐரோப்பிய யூனியனுக்கும் நன்கு தெரியும்.

சிங்கள அரசின் கடும்போக்கிற்கு எதிராக - சர்வதேச சமூகத்தை மதிக்காத அதன் ஆணவப் போக்கிற்கு எதிராக சர்வதேச சமூகம் நடவடிக்கைகள் எடுக்கப் போகின்றது என்று தமிழ்மக்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்த நேரத்தில் புலிகள் இயக்கத்திற்கு எதிராக நடவடிக்கை எடுத்து - தமிழ்மக்களைக் கண்டித்துள்ள ஐரோப்பிய யூனியனின் செயற்பாடு தமிழ்மக்களை விரக்திக்குள்ளாக்கியுள்ளது.

'போர் ஓய்வு' என்ற இராணுவ அம்சத்தைத் தவிர போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள அனைத்து அரசியல் அம்சங்களையும், சிங்கள அரசு, ஒவ்வொன்றாகக் கைவிட்டு, அந்த வரலாற்று உடன்பாட்டை வெற்றுக் காகிதமாக மாற்றியுள்ளது ஐரோப்பிய யூனியனுக்கும் நன்கு தெரியும்.

ஒப்பந்த விதிகளுக்கு முரணாக புலிகளுக்கு எதிரான தமிழ்க்குழுக்களை ஆயுதமயப்படுத்தி - சிங்களப் புலனாய்வுப் பிரிவின் வழிகாட்டலில் புலிகளுக்கு எதிரான நிழல்யுத்தத்தை சிங்கள அரசு நிகழ்த்திவருவது அனைவரும் அறிந்த உண்மை.

சிங்கள அரசின் இந்த நிழல்யுத்த முனைப்பிற்கு புலிகள் இயக்கத்தின் பல அரசியல் போராளிகள் உட்பட நூற்றிற்கும் மேற்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர்கள் பலியாகியுள்ளனர்.

இந்த நிலையில் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரின் கொலையின் பின்னணியில் புலிகள் இயக்கத்திற்கெதிராக ஐரோப்பிய யூனியன் நடவடிக்கை எடுத்திருப்பது அரசியல் வலுவற்ற பக்கச்சார்பான செயற்பாடாகவே புலிகள் இயக்கம் நோக்குகின்றது.

அமைச்சர் கதிர்காமரின் கொலைக்கும் புலிகள் இயக்கத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று புலிகள் இயக்கம் பலதடவைகள் தெரிவித்துள்ளது. கதிர்காமரின் கொலைக்கான பழியை புலிகள் மீது சுமத்தும் சிங்கள அரசின் பின்னால் ஒரு அரசியல் நோக்கம் உண்டு.

சர்வதேச ரீதியில் நற்பெயரை ஈட்டிவரும் புலிகள் இயக்கத்தை மாசுபடுத்தி - தனிமைப்படுத்தும் நோக்குடனேயே கதிர்காமரின் கொலையை சிங்கள அரசு ஒரு கருவியாகப் பயன்படுத்துகின்றது.

கதிர்காமர் கொலையுடன் புலிகள் இயக்கத்தை சம்பந்தப்படுத்த சிங்கள அரசிடம் எந்த ஆதாரமும் இல்லை. வெறும் குற்றச்சாட்டுக்களை சட்டபூர்வ ஆதாரங்களாகக்கொண்டு புலிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஐரோப்பிய யூனியன் தீர்மானித்தது எவ்வாறு! என்பது புதிராகவே உள்ளது.

தமிழருக்கு உரிமை வழங்கக்கூடாது - புலிகளுடன் பேசக்கூடாது - போர்மூலம் புலிகளை ஒடுக்க வேண்டும் என்ற இனவெறிக் கோசங்கள் சிங்களத்து அரசியலில் முனைப்புப்பெற்று வருகின்றன. இந்த நிலையில் ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கை போர்வெறியர்களை குசிப்படுத்தியுள்ளது. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு இராணு அணுகுமுறை மூலம் தீர்வு தேடவேண்டும் என்ற பேரினவாத அரசியல் நிலைப்பாட்டை, ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கை, பலப்படுத்தியுள்ளது.

சிங்கள அரசு போர்நிறுத்த உடன்பாட்டை செயற்படுத்தவில்லை. சுனாமி பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்தவில்லை. இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை ஏற்றுக்கொள்ளவில்லை. நியாயமானதொரு அரசியல் தீர்வுத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. எனினும் இதற்குப் பதிலடியாக அமைதிவழி அரசியலை நிராகரித்து புலிகள் இயக்கம் போருக்குச் செல்லவில்லை. நோர்வே அரசின் மத்தியத்துவத்தை மதித்து, சர்வதேச சமூகத்தின் சமாதான விருப்பிற்கு இசைவாகவே புலிகள் இயக்கம் நடந்து வருகின்றது.

இருந்தபோதும், தமிழ்மக்களை விரக்திகொள்ளச் செய்வதாக ஐரோப்பிய யூனியன் நடந்துகொள்வது வருத்தமளிப்பதாக உள்ளது. கடந்த மூன்றரைவருட சமாதான அரசியலில் புலிகள் காட்டிய ஈடுபாடு "விளலுக்கு இறைத்த நீர்" போல் வீணாகிவிட்டதோ! என்ற நியாயமான ஐயமும் தமிழ்மக்களுக்கு எழுந்துள்ளது. அத்துடன், மேற்கு நாடுகளின் மத்தியத்துவப் பணியும் தமிழ்மக்களால் கேள்விக்குள்ளாக்கப்படும் அவலமும் தோன்ற இடமுண்டு.

எனவே புலிகளுக்கு எதிராக ஐரோப்பிய யூனியன் விதித்துள்ள பயணத் தடையை உடனடியாக விலக்கிக் கொண்டு சமாதான முயற்சிகளில் சிங்கள அரசை செயல் முனைப்புடன் ஈடுபடுத்த அதற்கு அழுத்தங்கள் கொடுக்க வேண்டும் என்றும் ஐரோப்பிய யூனியனுக்கு புலிகள் இயக்கம் வேண்டுகோள் விடுக்கின்றது. ●

## அக்கினிக் குழந்தைகளில் எரிமலைக் குழம்புகள்




பூஜைக்கு மட்டுமே
பூக்கள் என்பது
பிடுங்கப்பட்டு
விருட்சங்களாய்
விளைவதும்
மலர்களே என்பது
புகட்டப்பட்டது

பரதமிடும்
பாதங்களிற்குள்ளும்
படை நடத்தும்
பலம்
பதுங்கிக் கிடப்பது
பறையடிக்கப்பட்டது.

மழலைகள் வளர்ப்பதே
மரபெனும் சரித்திரம்
மனதினுள் களைந்து
நெருப்பும் உள்ளே
இருக்கிறதென்பது
நிரூபிக்கப்பட்டது.

செருப்புக்களாய்
மிதிக்கப்பட்டவர்கள்
சிகரங்களில் ஏறி
மணிமுடி
தரித்தார்கள்.

வீட்டின் படிகளை
தாண்டத்
தயங்கியவர்கள்
தேசத்
திசையெங்கும்
வாசம் புரிந்தார்கள்.


தாய்மைக்காய்
தன்மை கொள்பவர்
வாய்மைக்காய்
வன்மம் கொள்தலும்
வரலாறாக்கப்பட்டது.

தலைவன்
சிந்தனைப் பொறியில்
கருவான
அக்கினிக் குழந்தைகளின்
எரிமலைக் குழம்புகள்
எதிரியையும் மடமையையும்
எரித்துக் கொண்டிருக்கிறது.

மாலதி!
தென்றல் ஒன்றை
உருவாக்கப்
புலியாகி வீழ்ந்த
உனது
மூச்சுத் தழுவிய
பல தென்றல்கள்
புயல்களாய் அணிவகுத்த
இந்தத் தேசத்தை
எந்தப் புயலும்
அணுகாது காக்கும்
அணைக்கட்டின்
அத்திவாரம் நீ

மாலதி!
நீ வீழ்ந்தாய்
உன்
நினைவுகளை நிமிர்த்திப்
பலர்
எழுந்தனர்.

வரலாறு, இயற்கை, இறைவன் என்று நாம் கூறிக்கொள்வதெல்லாம் எமது நல்வாழ்விற்கு அவசியமானவற்றினை நாமே தெரிவுசெய்ய தரப்பட்டுள்ள வாய்ப்புக்கள் என்பதே நேர்மறை சிந்தனையாளர் கருத்து. வரலாற்றினையும் இயற்கையினையும் மக்களுக்கு இலகுவில் புரியவைக்க கைக்கொள்ளப்பட்ட வழிமுறையே இறைவன் என்கிற வடிவமென்றும் இவர்கள் கருதுகின்றனர். மிகச் சரியான வேளையிலே அகப்புறச் சூழ்நிலைகள் பொருத்தமாக அமையும்போது வாய்ப்புக்கள் கிட்டும். இதனைப் புரிவதற்கு வரலாற்றின், இயற்கையின் போக்கினை அறிதல் வேண்டும். எமது தேசியத் தலைவரிடம் அவரது ஆற்றல், ஆளுமைபற்றி நாம் கேட்கும் வினாக்களுக்கு அவர் தரும் விடை வரலாற்றின் பட்டறிவு என்பதாகவிருக்கும்.



# சாவிற்கு முன்னரே ஆயத்தமாகும் கல்லறை வரிகள்

தற்போதைய சிங்கள அரசியலின் போக்கினை இப் பின்னணியிலேயே நாம் நோக்கவேண்டும். சிறிலங்காவின் சனாதிபதித் தேர்தல் அரங்க காண்பியம் இப்போது தெளிவாகிவிட்டது. வரலாற்றின் பட்டறிவினை புறம்தள்ளும் நிகழ்வின் வெளிப்பாடாகவே இது அமைகின்றது. எதனைக் காரணம் காட்டி ஜே.வி.பி, ஜே.எச்.யு போன்றவை மகிந்தவுக்கு ஆதரவுகாட்ட முனைந்தன? சிறுபான்மை மக்களென இவர்கள் கூறிக்கொள்வோரின் ஆதரவில்லாமல் பெரும்பான்மையினத்தவர் வெல்லவேண்டும். பெரும்பான்மையினத்தவர் நலன்களை மட்டும் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும். ஆனால் இப்போது நடப்பதென்ன? மகிந்தரின் வெற்றியோ அல்லது ரணிலின் வெற்றியோ தமிழ்பேசும் மக்களின் கையில்தான் இன்றுள்ளது. சிறிலங்காவின் அரசியலில் தமிழ்பேசும் மக்களும் மலையகத் தமிழ்மக்களும் தீர்க்கமான பெறுமானமான குழுமமாகிவிட்டனர். அதே வேளை மகிந்தரின் வெற்றியென்பதும் சந்திரிக்காவின் தோல்வியென்பதும் ஒன்றாகிவிட்டது. தமிழ்பேசும் மக்களுக்கு அநீதியை

- க.வே.பாலகுமாரன் -

விளைவித்த பண்டா குடும்ப வீழ்ச்சி அக் குடும்பத்தின் கட்சியாலே அதற்கு நேரப் போவதென்பது வரலாற்றின் அற்புதமான தீர்ப்பு. எம்மக்கள் சிந்திய குருதியும், கண்ணீரும் என்றும் வீணாகப்போவதில்லை என்பதே இதன் பொருள்.

பேராசிரியர் சேர்.சந்திரசேகரன் எழுதுகின்றார், "21ஆம் நூற்றாண்டு அறிவுமைய நூற்றாண்டென்றும் தகவல் மைய நூற்றாண்டென்றும் வருணிக்கப்படுகின்றது. முன்னைய நூற்றாண்டுகளில் முன்னெப்போதுமில்லாதவாறு இன்று அறிவு துரிதகதியில் பெருகிவருகின்றது. இதனை அறிவுவெள்ளம் பிரவாகம் எடுத்தோடும் காலமென்றும் கூறலாம். **தற்போதைய அறிவுத்தொகுதி 5 ஆண்டுகளில் இருமடங்காகின்றது என்றும் 20ஆம் நூற்றாண்டின் 50 ஆண்டுகளில் உருவாக்கப்பட்ட அறிவுத்தொகுதி தற்போது 5 ஆண்டுகளில் உருவாக்கப்படுமென்பது எதிர்காலவியல் அறிஞர் கருத்து**" (தினக்குரல் 02.08.2005). சிறிலங்காவைப் பொறுத்தவரையில் இதனை மாற்றியெழுத வேண்டும். "சிறிலங்காவைப் பொறுத்தவரையில் இந் நூற்றாண்டு மூடத்தனத்தினதும், மடமையினதும் நூற்றாண்டாகவே கணிக்கப்படும். முன்னெப்போதுமில்லாத அளவு பேரினவாதமும் அடக்குமுறைச் சிந்தனையும் துரிதகதியில் பெருகிவருகின்றது. இனவாத வெள்ளம் பிரவாகமெடுத்து பெருகியோடும் காலமெனலாம். 50ஆண்டுக்கான பேரினவாத செயற்பாடு இப்போது 5 ஆண்டுக்குள்ளே உருவாக்கப்படுகின்றது (பேராசிரியர் மன்னிக்க வேண்டும்). இத்தகையதொரு நிலையில் எமது நிலைப்பாடு எவ்வாறிருக்க முடியும். கலாநிதி குணசிங்கம் குறிப்பிட்டதுபோலவே "செயற்கையாகவும் தந்திரமாகவும் நிகழ்த்தப்பட்ட திருமண பந்தமொன்றுள் சிக்கிய இவ்வாராய்ச்சி தீவிர மனவதிர்ச்சியை ஏற்படுத்திய விவகாரத்தில் முற்றுப்பெறுகின்றது".

ஆகவே வரலாற்றன்னை வழங்கிய அனைத்து வாய்ப்புக்களையும் புறம்தள்ளும் சிங்கள அரசியலின் இன்றைய நிலை இவ்வாறுதானுள்ளது. வெளிறிப்போன, மலர்ச்சியில்லாத, வாடிப்போன அம்மையாரின் முகம் - அவமானத்தால் சிவந்து கன்றிப்போன மகிந்தர் முகம், எவ்வித வாய்ப்புமின்றி இருந்த தனக்கு இப்படியொரு வாய்ப்பு வந்ததே என்கிற மகிழ்ச்சியை மறைக்கமுடியாது கள்ளச் சிரிப்புக் காட்டி "போரா, சமாதானமா? எது வேண்டும் உங்களுக்கு?" என சிங்களவரிடம் பேரம் பேசும் கழுவிய நீரில் நழுவிய மீனாக ரணிலின் முகம். இம் முகங்கள் யாவற்றினையும் எம் மக்கள் வினோதத்துடனும் மனக் கிலேசத்துடனும் காண்கின்றார்கள். அம்மையாரின் இறுதி நாட்கள் எண்ணப்படுவது அவர்கள் கண்முன்னே நடக்கின்றது. அவர் புழுப்போல துடிப்பதையும் அவர்கள் காண்கின்றார்கள்.

நம்பியவர்களெல்லாம் அவரை நட்டாற்றில் கைவிடுகின்றார்கள். மூழ்கும் கப்பலிலிருந்து தப்புவோர் போலவும் "அற்ற குளத்து அறுநீர்ப் பறவை" போலவும் ஒவ்வொருவராக அவரை விட்டகல்கின்றார்கள். மிகுந்த மனக் குழப்பத்தோடும் ஆற்றாமையால் விளையும் சீற்றத்தோடும் அவர் உச்சரிக்கும் ஒவ்வொரு வார்த்தையும் பதிவாகி மக்கள்முன் வந்து சேர்கின்றன. "குடை நிழல் இருந்து குஞ்சர மூர்ந்தோர்" இறுதியில் ஓர்நாள் "நடைமெலிந்து" நடுவீதியில் நிற்பதையும் "ஆற்றங்கரை மரமும் அரசறிய வீற்றிருந்த வாழ்வும்" வீழ்ந்து படுவதையும் ஒளவையின் வார்த்தைகளில் நாம் காண்கின்றோம். வரலாறு துயரத்துடன் இவற்றினை மீண்டுமொருமுறை பதிவாக்கிக் கொள்கின்றது.

> **"சிறிலங்காவின் எதிர்காலம் எவ்வாறிருக்கும்?**
> **மகிந்தர் வென்றால்**
> **அவர் ஜே.வி.பி, ஜே.எச்.யு கையில் சிக்கி படப்போகும் பாடு –**
> **அதன் விளைவால் உருவாகப்போகும் பெரும் போர் –**
> **ரணில் வென்றால்**
> **உருவாகப்போகும் அரசியற் குழப்பம் –**
> **நாட்டின் தலைவர் ஒரு கட்சி**
> **நாடாளுமன்றம் இன்னொரு கட்சி –**
> **இறுதியில் நாடாளுமன்றக் கலைப்பு.**
> **இங்கு ஒரு ருசிகர விடயம்,**
> **அப்படியொரு நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால்**
> **அம்மையார் பிரதம மந்திரியாவாரா?**
> **எதிர்க்கட்சித் தலைவராவாரா?"**

எதிர்வரும் டிசம்பர் 22ஆம் திகதியின் பின் மாண்புமிகு, மாட்சிமை தங்கிய பேரரசி சாதாரண "பெண்ணாகிவிடுவார்" சிறகுகள் அறுக்கப்பட்ட பறவை போலிருந்த மகிந்தரைக்கூட இறுதியில் மடக்கமுடியாது அவரால் போய்விட்டது. பதினொரு வருட பரபரப்பான அதிகார ஆட்சிபீடம் படிப்படியாக அவரைக் கைவிட்டகல்கின்றது. அது ரணிலிடம் சென்றடைவதை விடவும் மகிந்தரிடம் அது சேர்வது அம்மையாருக்குத் தாங்க முடியாத அவமானமாகி விட்டது. இது எவ்விதம் நிகழ்ந்தது? இதன் படிப்பினையென்ன? **எவரொருவர் மிக உச்சமாக பிறரை ஏய்க்கின்றாரோ அவர் இறுதியில் அந்தளவிற்கு தன்னைத் தானே ஏமாற்றுகின்றார் என்பது அனுபவமொழி.**

"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க
பொய்த்த பின் தன்நெஞ்சே தன்னைச் சுடும்"

வள்ளுவன் குறள் உயிர்பெறுகின்றது.

அம்மையார் இவ்வளவு அவமானத்துடன் அகலவேண்டியிருக்குமென எவரும் எதிர்வுகூறவில்லை. மாறாக அவர் இவ்வாறு செய்வார் அவ்வாறு செய்வாரென செய்தியேடுகள் பரப்புரைகளை உருவாக்கின. இறுதியில் எல்லாமே பொய்த்துப் போகின்றன. சொந்த நாட்டில் சொந்தக் கட்சியின் வேட்பாளர் அருகிலிருப்பதும் அவருக்காக பரப்புரை செய்வதும் அவரால் தாங்கமுடியாத அவமானமாகிவிட்டது. இவரால் அவமானப்படுத்தப்பட்ட தமிழினத்தின் இனமானம் இப்போது நிம்மதி காண்கின்றது. வெவ்வேறுபட்ட முரண்பட்ட உணர்ச்சிக் கோலங்களைக் காட்டும் பகையாளிகளை அருகருகே வைத்து நிழற்படமெடுப்பதே ஒளிப்படக்காரருக்கு மிக உவப்பான பணி. இம் முகங்களில் தமிழினத்தின் இறந்த, எதிர்கால வரலாறுகளின் வரிகள் விளங்குகின்றன. வெறுப்பும், சினமும், இயலாமையும் கொண்ட முகம் - அதற்கருகில் அவமானமும் சோகமும் ஆற்றாமையும் கொண்ட இன்னொரு முகம். இம் முகங்களை எம்மக்கள் மிக அதிசயத்துடன் காண்கின்றார்கள்.

இங்குள்ள நகைமுரணென்ன? வரலாற்றின் மிக அழுத்தம் பொதிந்த வரிகளை தமிழினத்தின் எதிரிகளே பேசவேண்டிய நிலையை வரலாறு உருவாக்கிவிட்டமைதான். (ரணில் பேசும் சந்தர்ப்பவாத பேச்சுக்களைத் தவிர்த்து) சென்றமாதம் 14ஆம் திகதி நியூயோர்க்கில் ஆசிய சங்கத்தில் அம்மையாரின் பேச்சின் முக்கிய கருப்பொருள் இதுதான். "நான் பெருமையுடன் சொல்லிக்கொள்கின்றேன். அமைதி முயற்சியின் வேகத்தினை எவராலும் தடுக்கமுடியாது" அதாவது அம்மையாரின் இறுதியும் அறுதியுமான சாதனையிதுதான்? அப்படியானால் இவர் பெற்றதாகக் கூறப்படும் இராணுவ வெற்றிகள் என்னவாயிற்று? அவர் தனது குடும்ப கட்சி அரசியலின் இருபெரும் நிலைப்பாடுகள் என கூறப்படுவதென்ன? இனச் சிக்கலுக்கு இணைப்பாட்சி மூலம் தீர்வு - சுனாமி இயற்கைப் பேரழிவிற்கு பொதுக்கட்டமைப்பு மூலம் தீர்வு. அம்மையார் சென்றமாத நடுப்பகுதியில் மகிந்தருக்கு எழுதிய கடிதத்தில் இவற்றினைக் குறிப்பிட்டு இவையை மாற்றமுடியாது. அவ்வாறு மாற்றினால் கட்சி வேட்பாளரை மாற்ற நேரிடும். நாடாளுமன்றை கலைக்க நேரிடும் என்றெழுதினார்.

கடந்த செப்டெம்பர் 28ஆம் திகதியில் அமைச்சரவைக் கூட்டத்தில் நடந்தவை திரைப்பட கதைவசனம் போல வரிக்குவரி இப்போது வெளிவந்துள்ளன. அம்மையாரின் இறுதி கல்லறையிலெழுதும் வசனங்களிவை.

எமது கட்சியின் அடிப்படைக் கொள்கைகளை எமது வேட்பாளர் எவ்வாறு மாற்ற "முடியும்?" இது அம்மையார். "நான் கட்சியின் வேட்பாளன். ஆகவே என்னை என் போக்கில் செயற்பட விடுங்கள். நீங்கள் முன்னர் ஜே.வி.பியோடு உடன்பாடு செய்தபோது கட்சியின் அனுமதி கேட்கப்பட்டதா? மத்திய குழுவிற்கு அறிவிக்கப்பட்டதா?" இது மகிந்தரின் மடக்கல். "அப்போது தட்டிக்கேட்க முதுகெலும்பில்லையா?" அம்மையாரின் கேலிச் சீண்டல் இது. இச் சீண்டலுக்கு **மகிந்தர் கொடுத்த பதில் வரலாற்றின் வரிகள் "எங்களுக்கெப்படி முதுகெலும்பிருக்க முடியும்? அதுதான் ஏற்கனவே உடைக்கப்பட்டு விட்டதே. அது எங்களுக்கிருப்பதுதான் உங்களுக்குப் பொறுக்காதே".**

இவர்கள் யாவரும் சேர்ந்து எம் மக்களின் முதுகெலும்பினை உடைக்க முற்பட்டவர்களல்லவா? இக் கட்டத்தில் இன்னொருவர் ஞாபகம் வருகின்றது. வேளைக்கொரு சீருடை தரித்து ஊரெல்லாம் அலைந்து (இப்போது நீதிமன்றில் அலையும்) திரிந்த அநுருத்தர் அம்மையாரைப் பார்த்து புத்திசொல்ல, அவரைப் பார்த்து "யார் நீ?" என்றாராம். கொதித்துப்போன ரத்வத்தை "நான் யாரா? நான்தானே கட்சிக்கு உம்மை கொண்டு வந்தவன்...." என்றாராம். இவர்களெல்லாம் தமிழ்மக்களைப் பார்த்து யார் நீங்கள்? உங்களுக்கு இங்கென்ன வேலை என்றவர்களல்லவா? பச்சை சந்தர்ப்பவாதியாக மாறி ஊழலை மறைக்க பதவியைப் பயன்படுத்தி கோடி கோடியாக பணத்தினை தேர்தல் பரப்புரைக்கு வாரியிறைத்து மிகு கீழ்நிலைக்கு இறங்கிவிட்ட மகிந்தரை பரிதாபத்தோடு எம் மக்கள் காண்கின்றார்கள்.

சிறிலங்காவின் எதிர்காலம் எவ்வாறிருக்கும்? மகிந்தர் வென்றால் அவர் ஜே.வி.பி, ஜே.எச்.யு கையில் சிக்கி படப்போகும் பாடு - அதன் விளைவால் உருவாகப்போகும் பெரும் போர் - ரணில் வென்றால் உருவாகப்போகும் அரசியற் குழப்பம் - நாட்டின் தலைவர் ஒரு கட்சி நாடாளுமன்றம் இன்னொரு கட்சி - இறுதியில் நாடாளுமன்றக் கலைப்பு. இங்கு ஒரு ருசிகர விடயம், அப்படியொரு நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால் அம்மையார் பிரதம மந்திரியாவாரா? எதிர்க்கட்சித் தலைவராவாரா? இதனை ஆய்வாளர் வேலைக்கு விட்டுவிடுகின்றோம். அவ்வாறன்றி அம்மையார் சனாதிபதித் தேர்தலுக்கு முன் நாடாளுமன்றைக் கலைத்தால் அது அவர் மகிந்தருக்கு மட்டுமன்றி தனக்கும் மண்ணள்ளிப்போடும் வேலையாகப்போகும்.

முடிவற்றதும் குழப்பத்திற்கு மேல் குழப்பம் விளைவிக்கப்போகும் இச் சிங்கள அரசியற்சூழல் பற்றியும் வரலாற்றினை மறக்க முடியாமலும் இதிலிருந்து எதனையும் கற்க முடியாமல் அவதிப்படும் இவர்கள் பற்றி நாம் தொடர்ந்தெழுதுவதால் என்ன பயன்? பேராசிரியர் இந்திரபாலா அண்மையில் வெளியிட்ட "இன அடையாளத்துவத்தின் பரிணாம வளர்ச்சி" என்கிற நூலின் சமர்ப்பண வரியில் **"வரலாற்று திரிபுகளின் விளைவால் உயிரிழந்த அப்பாவிகளுக்கு சமர்ப்பணம்"** (தகவல்: பேராசிரியர் பொ.இரகுபதி) என்பதே இவர்களுக்கான கல்லறை வரிகள்.

வரலாறு தன்னை தனது இருகரம் நீட்டி தமிழ்பேசும் மக்களை அன்போடும் ஆதரவோடும் அரவணைக்க வரும் இவ்வேளையிலே எமது தேசியத் தலைமை ஒருபோதும் நெல்சன் மண்டேலா கூறிய இவ்வார்த்தைகளை (1993ஆம் ஆண்டு தனக்கும் டிகிளார்க்கிற்கும் அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டபொழுது தனது முன்னைநாள் எதிரியான கிளார்க் பற்றி கூறியவை) உச்சரிக்க, வேளை கிட்டப்போவதில்லை என்பதை மட்டும் கூறி விடைபெறுகின்றோம்.

"நிறவெறிக் கட்டமைப்பினை திணித்ததின் மூலம் எங்கள் நாட்டிற்கும் மக்களுக்கும் பெரு நாசத்தினை விளைவித்தமையை ஏற்றுக்கொள்ளும் துணிவு அவரிடமிருந்தது. அதேவேளை சகல தென்னாபிரிக்க மக்களும் சமத்துவமான முறையில் சமபங்காளராக பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றி தமது எதிர்காலத்தினை வடிவமைக்க வேண்டும் என்பதனை **ஏற்றுக்கொள்ளும் தீர்க்க தரிசனமும் அவரிடமிருந்தது.**" ●

- சென்ற இதழின் தொடர்ச்சி -

# தமிழர் தாயகத்தைத் துண்டாக்கும் சிங்கள குடியேற்றங்கள்

## திருமலை நகரக் குடியேற்றங்கள்

- மதுசங்கர் -

திருகோணமலை மாவட்டத்தினை வடபகுதி, மத்தியபகுதி ,தென்பகுதி என மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். இவற்றில் வடபகுதியாக நிலாவெளிக்கு மேற்பட்ட பகுதியினையும், தென்பகுதியாக மூதூர் பகுதியையும், மத்திய பகுதியாக திருகோணமலை நகரசபை பகுதிகளையும், பட்டணமும் சூழலும் பிரதேசசபை பகுதிகளையும் குறிப்பிடலாம்.

நகரக் குடியேற்றங்கள் என்பது இவ் மத்திய பிரதேசத்தை மையமாக வைத்தே மேற்கொள்ளப்படுகின்றன. நகரச் சூழலாக இருப்பதனால் பாரிய விவசாயத் திட்டங்களை மேற்கொள்ள முடியாது. இதனால் திட்டமிட்ட விவசாயக் குடியேற்றத் திட்டங்களல்லாத ஏனைய வழிமுறைகளினூடாகவே குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக மத்திய பிரதேசத்தில் மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான காணிகள் பல இருப்பதனால் அவைதான் குடியேற்றங்களுக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகின்றன. திருகோணமலை மாவட்ட அரசாங்க செயலக நிர்வாகம் சிங்களவர்களின் கைகளில் இருப்பதனால் குடியேற்றச் செயன்முறைகள் அவர்களுக்கு இலகுவாகி விடுகின்றன. இதற்கு வசதியாகவே சிங்களவர் ஒருவர் அரசாங்க அதிபராக தொடர்ந்தும் நியமிக்கப்பட்டு வருகின்றார். தற்போது மாகாணசபை நிர்வாக அதிகாரம் தமிழர்களின் கைகளுக்கு வந்ததினால் அவர்களின் செயற்பாடுகளுக்கு சில தடைகள் ஏற்பட்டாலும் மத்திய அரசின் அதிகாரம் ஆதிக்க நிலையில் இருப்பதனால் மாகாண சபை நிர்வாகம் தோல்விகளை தழுவிக் கொள்ள நேரிடுகின்றது. எனினும் மாகாண சபை நிர்வாகத்திற்கு அப்பால் சமாதானச் சூழலும், விடுதலைப்புலிகளின் பிரசன்னமும் தமிழர் அமைப்புகள் சுதந்திரமாகச் செயற்படக்கூடிய தன்மையும் சர்வதேச ரீதியான அழுத்தங்களும் குடியேற்ற முயற்சிகளில் சிறிய பின்னடைவுகளை ஏற்படுத்திவிடுகின்றன. போர்க்காலங்களில் நகரச் சூழலுக்கு வெளியே பாரிய குடியேற்றங்கள் மேற்கொள்ள முடியவில்லை. இதனால் போர்க்காலங்களில் நகர்ப்புறங்களிலேயே குடியேற்றங்களை மேற்கொள்வதில் அதிக கவனம் செலுத்தப்பட்டது. நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழர்கள் சற்றுச் செறிவாக வாழ்ந்ததினால் அங்கு குடியேற்றங்களை உருவாக்குவது இலகுவானதான இருக்கவில்லை. பொது மக்களின் காணிகளைத் தவிர்த்தால் அங்கு மீதமாக இருந்த காணிகள் நகரசபைக்கு சொந்தமான காணிகளும், மத்திய அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளும்தான். நகரசபை தொடர்ச்சியாகவே தமிழர்களின் கைகளில் இருந்ததினால் அதனை கைப்பற்ற முடியவில்லை. இதைவிட நகரசபைக்குரிய காணிகள் நகரசபையின் தேவைகளுக்கே போதுமானதாக இருக்கவில்லை. அப்படியிருந்தும் கூட சில காணிகள் பறிக்கப்பட்டன. இதற்கு உதாரணம் திருமலை முற்றவெளிப் பகுதி காணி கைப்பற்றப்பட்டமையாகும். திருகோணமலை பத்திரகாளி கோவில் சுவாமி தீர்த்தமாகும் இடமே அப்பிரதேசமாகும். அவ்விடத்தினை ஆக்கிரமித்து குடியிருப்புக்களை உருவாக்கியதுமல்லாமல் 'சமுத்திரகம' என அப்பிரதேசத்திற்கு அவாகள் பெயர் ஒன்றினையும் சூட்டியிருக்கிறார்கள். ஜே.வி.பியினரின் செயற்பாடுகளுக்கு அடிதடித் தொண்டர்கள் இங்கிருந்துதான் பெறப்படுகின்றார்கள். திருகோணமலை மாவட்டத்தில் இனநெருக்கடி அதிகமாக இருப்பதனால் கனவான் அரசியல்வாதிகளினால் இதற்கு முகம் கொடுக்க முடியாது. இதனால்தான் யூ.என்.பி. அரசியலும் எஸ்.எல்.எவ்.பி அரசியலும் சிங்கள மக்களின் மத்தியில் தோல்வியுற ஜே.வி.பியின் திருமலை அரசியல் வெற்றிநடைபோடுகின்றது. தமிழ்த் தரப்பிலும்கூட இவைதான் நடைபெற்றது. கூட்டணியினர் கனவான்களாக இருந்தமையினால் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க அவர்களால் முடியவில்லை. விடுதலைப்போராட்டம் வளரத் தொடங்கியதன் பின்னர்தான் சிறியளவிற்காவது முகம் கொடுக்க முடிந்தது.



நகரசபை எல்லைக்குட்பட்ட காணிகளின் வியாபாரக் குடியேற்றங்களையும் மத ரீதியான குடியேற்றங்களையும் நகரசபையினால் தடுக்க முடியவில்லை. நகரின் மீன் சந்தை மரக்கறிச் சந்தை என்பன தற்போதும் சிங்களவர்களின் ஆதிக்கத்திலேயே இருக்கின்றது. மரக்கறிச் சந்தை ஏலத்திற்கு விட்டபோது தமிழர் ஒருவர் கூடுதலான விலை கொடுத்து குத்தகையை வாங்க முற்பட்டபோதும், நகரசபையினால் அதனைக் கைமாற்ற முடியவில்லை. கைமாற்ற மறுத்தபோது அதனை பலவந்தமாக மேற்கொள்ள பொலிசார் உதவியிருக்க முடியுமாயினும்கூட பொலிஸ்துறை அவ்வாறு செய்ய முன்வரவில்லை. இறுதியில் நகரசபை பல லட்சம் ரூபா செலவிட்டு தமிழ்ப் பகுதியில் புதிய சந்தையினை உருவாக்கியபோதும் புதிய சந்தையைத் திறக்க பழைய சந்தையில் ஆதிக்கம் பெற்ற சிங்களவர்கள் விடவில்லை. படையினரைக் கொண்டு அதனை அவர்கள் தடுத்தனர்.

இச்சந்தையை ஒட்டித்தான் சிங்களவர்கள் அத்துமீறி அமைத்துக்கொண்ட கடைகளும் இருக்கின்றன. பஸ்நிலையமும் இவ்விடத்தில்தான் இருக்கின்றது. தூரப் போக்குவரத்துக்கான பஸ்சேவையும் சிங்களவர்களின் கட்டுப்பாட்டில்தான் இருக்கின்றது. தூர சேவையை தமிழர்கள் நடாத்த முடியாது. அவ்வாறு நடாத்தினால் சிங்களப் பிரதேசங்களுக்கூடாகச் செல்லும்போது அவை தாக்கப்படும். திருகோணமலையிலிருந்தான வெளிவர்த்தகம்கூட சிங்களவர்களின் கைகளில்தான்.

இவ்வாறு சந்தை, பஸ் நிலையம் அத்துமீறிய கடைகள் என்பனவற்றை மையமாக வைத்து சிங்களவர்களுக்கான ஒரு பாதுகாப்பு வலயமே நகரத்தில் உருவாக்கப்பட்டுள்ளது. அப்பகுதியின் சிங்கள அடையாளத்திற்காகத்தான் பஸ்நிலையத்தில் புத்தர் சிலையும் வைக்கப்பட்டது. அருகே வடபகுதியில் இருக்கின்ற சிறிமாபுர, விஜிதபுர குடியேற்றங்களும் கிழக்குப் பகுதியில் இருக்கின்ற 'சமுத்திரகம' குடியேற்றமும் இப் பாதுகாப்புவலயப் பகுதியான மணிக்கூண்டுக் கோபுரப் பகுதியிலேயே நடாத்தப்படுகின்றது. இவர்களுடைய செயற்பாடுகளுக்கு படையினரின் ஒத்துழைப்பு தாராளமாகவே கிடைக்கின்றது. சிங்கள அரசியல் தலைவர்களின் ஒத்துழைப்பு முன்னர் அவர்களுக்கு பெரிதாகக் கிடைத்தது எனக் கூறமுடியாது. சிங்கள வியாபாரிகளும் பௌத்த பிக்குகளும் இணைந்து படையினரின் உதவியுடனேயே செயற்பாடுகளை முன்னெடுத்தனர். தற்போது ஜே.வி.பியினரின் பிரசன்னம் அவர்களுக்கு ஒரு அரசியல் தலைமையினையும் கொடுத்துள்ளது. அதுவும் அடிதடியில் பெயர்போன ஜெயந்த விஜயசேகரா பாராளுமன்ற உறுப்பினராகக் கிடைத்தமை அவர்களைப் பொறுத்தவரை ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருக்கின்றது. தற்போது ஜே.வி.பி.யின் வழிகாட்டலில் ஜே.வி.பி, பௌத்த பிக்குகள், படையினர் என கூட்டு முயற்சியாகவே செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.




திருகோணமலை நகரத்தைப் பொறுத்தவரை கடற்படையினரின் ஆதிக்கமே அதிகம். மிகப்பெரிய நிலப்பரப்பில் ஆசியாவிலேயே தலைசிறந்த கடற்படை முகாம் நகரப் பகுதியில் இருக்கின்றது. பிரித்தானியர் உருவாக்கிய கடற்படை முகாம் சுதந்திரத்தின் பின்னர் முன்னைய வளங்களுடன் இலங்கை கடற்படையினரிடம் கைமாறியிருக்கின்றது. இவர்களால் எதிர்காலத்தில் ஆபத்துவரலாம் என்பதனால்தான் கடற்படைத் தளத்தினை பிரித்தானியர் கையளிக்கும்போது தமிழரசுக் கட்சியினர் எதிர்த்திருந்தனர். ஆனாலும் கையளிக்கப்பட்டது.



நகர குடியேற்றச் செயற்பாடுகள் எல்லாவற்றுக்கும் கடற்படையினரே உறுதுணையாக இருந்திருக்கின்றனர். ஜே.வி.பியினருக்கு கடற்படைக்குள் வலிமையான செல்வாக்குத் தளம் இருப்பதனால் படையினரின் ஒத்துழைப்பு தற்போது முன்னரைவிட அதிகரித்த நிலையில் காணப்படுகின்றது. அண்மைய புத்தர்சிலை விவகாரம் முழுக்க முழுக்க கடற்படையினரின் பிரசன்னத்துடன் நடந்த ஒன்றாகும். சுருக்கமாகக் கூறினால் ஜே.வி.பியினரின் வருகை குடியேற்றங்கள் அரசியல்ரீதியாக பலப்படுத்தியதோடு சமாதான காலத்திலும் புதிய குடியேற்றங்களுக்கான செயற்பாட்டுப் பாதையினை அரசியல் பலத்துடன் திறந்திருக்கின்றது.

நகரசபைக் காணிகளுக்குள் நடைபெறுகின்ற அடுத்த குடியேற்றம் பௌத்த மதக் குடியேற்றங்கள் ஆகும். நகரசபை எல்லைக்குள் வெற்றுக் காணிகள் குறைவாக இருப்பதனால் பெரிய விகாரைகளை கட்ட முடியாது. இதனால் சிறிய புத்தர் சிலைகளைக் கொண்டுவந்து வைத்துவிட்டு அதனைச் சுற்றி வேலி அமைப்பதன்மூலம் அக் காணிகளைக் கைப்பற்றும் செயற்பாடு நடைபெறுகின்றது. அந்தச் சிலைகள்கூட பாதுகாப்பான நிலையில் சந்தைப்பகுதி, படையினரின் முகாம்கள், பொலிஸ் நிலையங்கள் என்பவற்றிற்கு அருகில்தான் வைக்கப்படுகின்றது. பேரினவாதிகளைப் பொறுத்தவரை இன்று இலகுவான நில ஆக்கிரமிப்புக் கருவி புத்தர் சிலைகளே ஆகும். இதற்கு உதாரணமாகத்தான் கோணேசர் கோபுரத்தையே மறைக்கக்கூடியளவிற்கு கோட்டைக்குள் இருக்கும் புத்தர்சிலை வியாபித்து நிற்கின்றது. எதிர்காலத்தில் கோணேசர் கோவிலைச் சுற்றியுள்ள கோட்டைப் பிரதேசம் சைவ புனித பிரதேசமாக மாறிவிடலாம் என்ற அச்சம்தான் இந்த வானளாவிய புத்தர்சிலையின் தோற்றத்திற்குக் காரணம். இந்த புனித பிரதேசப் பிரச்சினையை ஒட்டி தமிழரசுக்கட்சி அமைச்சரான மு.திருச்செல்வம் அமைச்சர் பதவியினை இராஜினாமா செய்தார் என்பது பழைய வரலாறு. புனித பிரதேச நிர்மாணத்தை முன்னர் ஏற்றுக்கொண்ட டட்லி அரசாங்கம் பின்னர் பௌத்த பிக்குகளின் எதிர்ப்பினை ஒட்டி மறுதலித்தமையே இராஜினாமாவுக்குக் காரணம்.

நகரசபை எல்லைக்குள் இருக்கும் மத்திய அரசாங்கத்தின் காணிகளைப் பொறுத்தவரை வெற்றுக்காணிகள் மிகக் குறைவு. மாவட்டத்தின் தலைநகர் என்ற வகையில் அனைத்து திணைக்களங்களும் இங்குதான் இருக்கின்றன. திணைக்கள கட்டடங்களுக்கே காணிகள் பற்றாக்குறையாக இருக்கும்போது குடியேற்றங்களை மேற்கொள்வது இலகுவான ஒன்றாக இருக்கவில்லை. ஆனால் புறநகர்பகுதியான பட்டினமும் சூழலும் பிரதேசத்தில் இவ்வாறான காணிகள் பல ஆக்கிரமிக்கப்பட்டன. அவ்விபரங்களை பின்னர் பார்ப்போம்.

நகரசபை எல்லைக்குள் கோவில் காணிகள் பல ஆக்கிரமிக்கப்பட்டன. மடத்தடி கிருஸ்ணன் கோவிலுக்கு பின்புறமாக இருக்கும் பிள்ளையார் கோவில் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டவை இதற்கு சிறந்த உதாரணமாகும். இக்காணிகளை ஆக்கிரமித்த சிங்களவர்களுக்கு சட்டபூர்வமாக வழங்க 2002ஆம் ஆண்டு மீன்பிடி அமைச்சர் முயற்சி செய்தார். காணி முழுவதையும் மீன்பிடி அமைச்சுக்கென சுவீகரித்துவிட்டு பின்னர் ஆக்கிரமித்தவர்களுக்கு வழங்குவதே அமைச்சரின் நோக்கமாக இருந்தது. ஆனால் ஆக்கிரமித்தவர்களிடம் எந்தவித ஆவணமும் இல்லாததால் இம்முயற்சி இன்னமும் நிறைவேறவில்லை.



நகரத்தின் முற்றவெளிப் பக்கத்தில் கடற்கரையை ஒட்டியிருந்த 'சமுத்திரகம' காணிகளையும் பத்திரகாளி கோவிலுக்கு சொந்தமான காணியாகவே கொள்ளவேண்டும்.

பட்டணமும் சூழலும் பிரதேச எல்லைக்குள் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களை பின்னர் பார்ப்போம். ●

# போர்நிறுத்த உடன்பாடு! கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிவிட்ட கதை



போர்நிறுத்த உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்டிருந்த அனைத்து அரசியல் அம்சங்களும் ஒன்றன்பின் ஒன்றாக மடிந்துவருகின்றன.

தமிழ் - சிங்கள இனங்களுக்கிடையே சமாதானச் சூழலை உருவாக்கி பரஸ்பரம் நம்பிக்கைகளைக் கட்டியெழுப்பி நாளடைவில் ஒரு அரசியல் தீர்வொன்றைக் காண்பதே போர்நிறுத்த உடன்பாட்டின் இறுதி இலக்காக இருந்தது.

போரால் அழிந்த தமிழர் தாயகத்தை சர்வதேச நிதியுதவியுடன் மீளக் கட்டியெழுப்பும் இலக்குடன் வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனர்நிர்மாண வேலைகளுக்கு போர்நிறுத்த உடன்பாடு முக்கிய இடம் வழங்கியிருந்தது.

இந்த விடயத்தை சரிவரச் செய்யும் நோக்குடன் பொது இடங்கள் - பாடசாலைகள் - ஆலயங்கள் மற்றும் தனியாரின் வீடுகள் என்பவற்றில் நிலை கொண்டுள்ள சிங்களப்படைகள் அகற்றப்பட்டு மீண்டும் அவை உரியவர்களிடம் கையளிக்கப்பட்டு ஒரு சிவில் வாழ்க்கை தமிழ்மக்கள் மத்தியில் தோற்றம் பெற வேண்டும் என்றும் ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

இந்த வேலையைத் துரித கதியில் செயற்படுத்தி முடிக்கவேண்டிய அவசர தேவை இருந்ததால் மூன்றுமாத காலத்திற்குள் இவை முடிக்கப்பட வேண்டும் என்று காலவரையறையும் காணப்பட்டிருந்தது.

ஆனால் போர்நிறுத்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இவை நடைமுறைப் படுத்தப்படவில்லை. இங்கொன்றும் - அங்கொன்றுமாக படைமுகாம்களை மூடிவிட்டு "படை விலகல்" என்ற ஒப்பந்தச் சரத்தை சிங்கள அரசு முழுமையாகக் கைவிட்டது.

இதனால் தமிழர் தாயகத்தில் புனர்வாழ்வு - புனர்நிர்மாண வேலைத் திட்டங்களும் கைவிடப்பட்டன.

அரசியல் தீர்விற்கான பேச்சுவார்த்தைகள் முன்னேற்றம் காணும் போது புனர்வாழ்வு வேலைகள் தானாகவே அமுலுக்கு வரும் என்று சிங்கள அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

பேச்சுவார்த்தைகள் தொடங்கின. ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும், ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் நோக்குடன், பல தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. இதைச் செயற்படுத்த உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன.

ஆனால், எந்த ஒரு உபகுழுவும் செயற்படாமலே செத்துப்போனது. அரசியல் பேச்சுக்களும் நிறுத்தப்பட்டன. இதன்மூலம் போர்நிறுத்த உடன்படிக்கையின் முதன்மை இலக்கு சிங்கள அரசால் கைவிடப்பட்டது.

இதைத் தொடர்ந்து சமாதானச் சூழலையும் சிங்கள அரசு இல்லாதொழிக்கச் செயற்பட்டது.

அரச ஆதரவுடன் இயங்கும் தமிழ் ஆயுதக்குழுக்கள் சமாதான காலத்தில் அச்சுறுத்தலாகவும் - சமாதானத்தைச் சிதைக்கும் சக்திகளாகவும் விளங்கியதால் இந்த ஆயுதக்குழுக்கள் வடக்கு - கிழக்கைவிட்டு அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்றும் உடன்பாட்டில் இணக்கம் காணப்பட்டிருந்தது.

ஆனால், சிங்கள அரசோ புதிதாக ஆயுதக் குழுக்களை உருவாக்குவதிலும் - அவற்றிற்கு ஆயுதங்களையும், பாதுகாப்பையும் வழங்கி தமிழர் தாயகப் பகுதியிலேயே செயற்படவும் இடமளித்தது. பல உயிர்களை காவுகொள்ளவும் வைத்தது. இந்த ஆயுதக் குழுக்களின் போர்வையில் சிங்களப் படைகளும் கொலைகளை செய்யத் தொடங்கியது. புலிப் போராளிகளும் - தமிழ்த் தேசபக்தர்களும் இக் கொலைத்தாக்குதலுக்கு இலக்காகினர்.

போர்நிறுத்த உடன்பாட்டிலுள்ள போர் ஓய்வு என்ற இராணுவ அம்சத்தையும் இல்லாதொழித்து போரை மீண்டும் தொடங்கும் எண்ணத்துடன் புலிகளுக்கு எதிரான ஒரு நிழல் யுத்தத்தை கிழக்கு மாகாணத்தில் தொடங்கியது.

தமிழர் தாயகப் பகுதியிலுள்ள இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் புலிகள் அரசியல்வேலை செய்வதற்கு ஒப்பந்தம் இடமளித்திருந்தது. அந்தப் பகுதிகளுக்கு சென்றுவருவதற்கான பயணப் பாதுகாப்பை சிங்களப் படைகளே வழங்க வேண்டும் என்றும் உடன்பாடு காணப்பட்டிருந்தது.

ஆனால், பாதுகாப்புத் தருவதாக அழைத்துச் சென்று புலிவீரர்களை நயவஞ்சகமாகப் படுகொலை செய்யும் அளவுக்கு சிங்களப் படைகள் சென்றன.

மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் லெப்.கேணல் கௌசல்யன் படுகொலைச் சம்பவமும் - ஐம்பது போராளிகளை ஏற்றிச்சென்ற பேருந்து மீது நடாத்தப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலும் சிங்கள அரசின் உச்சக்கட்ட சதி நடவடிக்கைகளாக இருந்தன. மட்டக்களப்பு - அம்பாறை - திருகோணமலை மாவட்டங்களில் இருந்த புலிகளின் அரசியல் அலுவலகங்கள் தொடர்ச்சியாகத் தாக்கப்பட்டன. புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் உள்நுழைந்த படையினரும் - ஆயுதக் குழுக்களும் போராளிகள் மீது பதுங்கித் தாக்குதல்களை நடாத்தி - பலரைக் கொன்றனர்.

இவற்றை நிறுத்துமாறு அரசுக்கு பலதடவைகள் எடுத்துக் கூறியும் உருப்படியாக எதுவும் நடைபெறவில்லை. கண்காணிப்புக் குழுவினரது முயற்சிகளும் இந்த விடயத்தில் பலன்தரவில்லை. போராளிகள் கொல்லப்படுவதும் - கைது செய்யப்படுவதும் - தாக்கப்படுவதும் தொடர்ந்தன.

இதனால் கிழக்கு மாகாணத்திற்கான போராளிகளின் பிரயாணம் பாதுகாப்புக் கருதி நிறுத்தப்பட்டது. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து அரசியல் போராளிகள் வெளியேறினர்.

போராளிகள் மீளத் திரும்புவதற்கேதுவாக அவர்களின் பாதுகாப்பான பயணத்திற்கு ஆவண செய்யவோ - அரசியல் போராளிகள் தங்களது பணிகளைச் செய்வதற்கோ அரசு எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் பொதுமக்களின் பயணப் பாதைகளிலும் படையினர் கட்டுப்பாடுகளைக் கெண்டுவந்தனர். அந்தப் பாதைகள் வழியே பொருட்கள் எடுத்துச்செல்லவும் படையினர் கட்டுப்பாடுகளை விதித்தனர்.

ஒப்பந்தத்தின் பிரகாரம் இருந்த போக்குவரத்துத் தடை நீக்கம் - பொருளாதாரத் தடைநீக்கம் என்பன படையினரால் நிறுத்தப்பட்டன.

**அவசரகாலச் சட்டத்தை சிங்கள அரசு பிரகடனப் படுத்தியபோதே அது போர்நிறுத்த உடன்பாட்டையும் நிராகரித்துவிட்டது என்பதே உண்மையாகும்.**

இவ்விதம் கிழக்கு மாகாணத் தில் போர்நிறுத்த உடன்பாட்டின் விதிகள் முற்றுமுழுதாகவே செயலிழந்துவிட்டன.

கிழக்கில் சிங்களப் படைகள் நடாத்திவருகின்ற நிழல் யுத்தத்தை வடக்கிற்கும் விரிவுபடுத்த சிங்கள அரசு திட்டமிட்டது. அதற்கேதுவாக அவசரகாலச் சட்டத்தையும் மீண்டும் பிரகடனப் படுத்தியது.

**போர்நிறுத்த உடன்பாடும் – அவசரகாலச் சட்டமும் இரு துருவங்களைப் போன்றவை. போர்நிறுத்த உடன்பாடு சகஜ நிலையை ஏற்படுத்தி – அமைதிச்சூழலை தோற்றுவிக்கும் பண்பைக் கொண்டது. அவசரகாலச் சட்டமோ ஆயுதப்படைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி தமிழர்களை விரும்பியவாறு கொல்லவும் – கைதுசெய்யவும் – சித்திரவதை செய்யவும் அனுமதி வழங்கும் இனவெறி நோக்கம் கொண்டது.**

போர்நிறுத்த உடன்பாடும் - அவசரகாலச் சட்டமும் இரு துருவங்களைப் போன்றவை. போர்நிறுத்த உடன்பாடு சகஜ நிலையை ஏற்படுத்தி - அமைதிச் சூழலை தோற்றுவிக்கும் பண்பைக் கொண்டது. அவசரகாலச் சட்டமோ ஆயுதப்படைகளுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கி தமிழர்களை விரும்பியவாறு கொல்லவும் - கைது செய்யவும் - சித்திரவதை செய்யவும் அனுமதி வழங்கும் இனவெறி நோக்கம் கொண்டது.

அவசரகாலச் சட்டத்தைச் சிங்கள அரசு பிரகடனப்படுத்தியபோதே அது போர்நிறுத்த உடன்பாட்டையும் நிராகரித்து விட்டது என்பதே உண்மையாகும். வடக்கிலும் புலிவீரர்களை கொல்லவும் - கைதுசெய்யவும் சிங்கள அரசு ஆயத்தமாகி விட்டது.

சிங்கள அரசின் சதி அரசியலைப் புரிந்துகொண்டு வடக்கிலும் புலிகள் இயக்கம் தனது போராளிகளை மீள அழைத்தது.

இப்போது தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கில் போர்நிறுத்த உடன்பாட்டின் எந்த ஒரு சரத்தும் (போர் ஓய்வைத் தவிர) பூரணமாக அமுலில் இல்லை என்ற அரசியல் யதார்த்தமே காணப்படுகின்றது.

தமிழ்மக்கள் மத்தியில் பாரிய நம்பிக்கையை வெளிப்படுத்திய போர்நிறுத்த உடன்பாடு இப்போது தமிழர்களைப் பொறுத்தளவில் கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதைபோலாகி வருகின்றது.

போர்நிறுத்த உடன்பாட்டு விதிகளுள் எஞ்சியுள்ள ஒரேயொரு அம்சமான "மோதல் தவிர்ப்பு" என்ற இராணுவ விடயமும் மிகவிரைவில் காலாவதியாகிவிடும் போலுள்ளது.

"நவம்பர் (2005) மாதமளவில் புதியவகை ஆயுதங்கள் எமக்கு வந்து சேர்ந்துவிடும்" என்று சிங்களத்தின் தரைப்படைத் தளபதி மட்டக்களப்பில் கூறியுள்ளார். "வான்படையும் போரை எதிர்பார்த்துத் தயாராக உள்ளது" என்று சிங்கள வான்படைத் தளபதி கொழும்பில் அறிவித்துள்ளார். "கடற்பரப்பில் ஏற்கனவே கண்காணிப்பு வேலைகளை நாங்கள் ஆரம்பித்துவிட்டோம்" என சிங்கள கடற்படைத் தளபதியும் கூறியுள்ளார்.

போரை முன்னெடுப்பதற்குத் தயாராக சிங்களத்தில் ஒரு அரசியல் கூட்டணியும் தயாராகிவிட்டது.

சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ச அவர்கள் ஜே.வி.பியுடனும் ஹெல உறுமயவுடனும் தேர்தல் கூட்டணி அமைத்துள்ளார். தமிழர் மீது போர் தொடுத்து - அவர்களை இராணுவ ரீதியில் தோற்கடித்து தமிழரின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காண்பதுதான் இந்த அரசியல் கூட்டணியின் முக்கிய வேலைத்திட்டமாகும்.

பிறக்கப்போகும் புத்தாண்டு ஒரு போர் ஆண்டாகவே இருக்கப்போகின்றது. சர்வதேசத்தின் அனைத்துவகை அழுத்தங்களையும் புறந்தள்ளிவிட்டு சிங்கள அரசு போருக்கு ஆயத்தம் செய்கின்றது. இந்த அரசியல் யதார்த்தத்தை தமிழீழ மக்கள் புரிந்துகொண்டு - செயற்பட வேண்டிய வேளை வந்துவிட்டது.

*- எல்லாளன் -*

# "சமாதானம்"

# ஒரு வரலாற்று நிர்ப்பந்தமும், தேர்தல் கோசமும்;

# சமாதானத்தின் எதிரி சிங்கள அரசுதான்

– சாரணன் –

சிங்களக் காடையர்களது கத்திகளின் ருசியை தமிழர் அனுவிக்கட்டும் என்று 1958ஆம் ஆண்டு கூறியவர்களின் பரம்பரையும், தமிழரின் தோலில் செருப்பு தைத்துப் போடுவேன் என்று கூறியவர்களின் பரம்பரையும், போர் என்றால் போர் என்று கூறியவர்களின் பரம்பரையும் இன்று அரசியல் சூதில் "சமாதானம்" பற்றிப் பேசுகின்றன.

பண்டாரநாயக்காக்கள், கே.எம்.பி.இராஜத்தினக்கள், ஜெயவர்த்தனாக்கள், விஜேவீரக்கள் எல்லோருமே தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு சூரனின் பல தலைகள்தான்.

ஒற்றையாட்சியும் சமாதானமும் ஒன்றுக்கொன்று எதிரானவை என்பது ஒருபுறமிருக்க ஒற்றையாட்சி முறையின் கீழ் "சமாதானத் தீர்வு" காணப்போவதாக சு.க ஜனாதிபதி வேட்பாளர் திரு. மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார். அதற்கு ஜே.வி.பி விஜேவீரக்கள் யாளரா வாசிக்கின்றனர்.


நாட்டை பிளவுபடவிடாது தடுப்பதற்கு "சமாதானத் தீர்வு" காணப்போவதாக ஐ.தே.க ஜனாதி

## ஐரோப்பிய ஒன்றியத்தின் தடையால் சர்வதேச நெறிகள் மீது தமிழருக்கு அவநம்பிக்கை

பதி வேட்பாளர் திரு.ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார்.

சமக்ஷ்டி முறையின்கீழ் "சமாதானத் தீர்வு" காண்பதே சு.கவின் கொள்கை என்று ராஜபக்ஷவுடன் உட்கட்சி ஆதிக்கப் போட்டியின் பொருட்டு மல்லுக் கட்டிக் கொண்டிருக்கும் ஜனாதிபதி சந்திரிக்கா கூறுகிறார்.

இளம் புலிகளை கிழட்டுச் சிங்கங்களினால் தோற்கடிக்க முடியாது. இளம் சிங்கங்களாகிய தங்களால்தான் முடியுமென 1980களில்



றோகண விஜேவீர முழங்கினார். ஆனால் அந்த வீஜேவீரக்கள் தொடர்ந்தும் அந்த சுதிப்பெட்டியில் தான் தம் கரங்களைப் பதித்துள்ளனராயினும் தற்போதைய ஜனாதிபதித் தேர்தல் களத்தில் சண்டையில்லாத "சமாதானத் தீர்வு" என்ற ஒரு பாசாங்கான குரலை எழுப்புகின்றனர்.

அதாவது சமாதானம் பற்றிப் பேசாமல் தற்போது தேர்தற் களத்தில் நிற்கமுடியாது என்பது தான் இன்றைய அரசியல் யதார்த்தம்.

அப்படியென்றால் மேற்படி அத்தனை யுத்த விரும்பிகளையும் சமாதானம் பற்றிப் பேசவைத்தது யார்? என்ற கேள்வி இங்கு பிரதானமானது.

இதற்கான பதில் மிகவும் இலகுவானது. அதாவது அர்ப்பணிப்பு நிறைந்த தமிழீழ விடுதலைப் போராட்டம்தான் இவர்களை சமாதானம் பற்றிப் பேசவைத்துள்ளது.

கத்தி, வாள், துப்பாக்கிகளின் ருசியை தமிழர் அனுபவிக்கட்டும் என்று கூறிய சிங்களத் தலைவர்கள் இப்போது யுத்தத்தின் கசப்பை அனுபவிக்கும் காலமாய் வரலாறு மாறிவிட்டது. இத்தகைய மாற்றம் ஒரு விபத்தல்ல. தன் கையில் மந்திரக்கோல் இருப்பதாக 1950களில் பண்டாரநாயக்கா கூறிவந்த மாயாஜால மந்திர வித்தையுமல்ல. இது இரத்தமும் தசையுமான, கண்ணீரும் துன்பமுமான, அர்ப்பணமும் தியாகமுமான போராட்டத்தின் விளைவாகும். எத்தகைய தர்ம உபதேசங்களுக்கும் எட்டாத உண்மை போர்க் குரலுக்கு மட்டும் எட்டியிருக்கின்றது. எல்லாத் தர்மங்களும் தோல்வி அடைந்தபோது போரே தர்மமான போது எதிரி "சமாதானம்" பற்றிப் பேசுகின்றான்.

யுத்தத்தைத் தமிழரின் தலைகள்மீது திணித்தவர்களின் தலையணைகள் வெடிகுண்டாக மாறியுள்ள காலமிது. அவர்களின் வார்த்தையிற் சொல்வதானால் சிங்கள மக்கள் யுத்தத் துயரை ருசிக்கும் காலமிது. ஆதலால் சிங்கள மக்கள் யுத்தத்தை வெறுக்கின்றனர். ஆதலினால் அவர்கள் யுத்தம் பேசிக் கொண்டு தேர்தலுக்குச் செல்லமுடியாது. இது வரலாற்றின் தவிர்க்கமுடியாத் தர்க்கபூர்வ வளர்ச்சி நிலை.

ஆட்சி அதிகாரப் போட்டியின் நிமித்தமும், உட்கட்சி அதிகாரப் போட்டியின் நிமித்தமும் "சமாதானம்" பற்றிப் பேசவேண்டிய நிர்ப்பந்தத்திற்குச் சிங்களத் தலைவர்கள் தள்ளப்பட்டுள்ளனர் என்பது ஒரு நல்ல விடயம்தான். ஆனால் இதில் இவர்கள் எவ்வளவு தூரம் உண்மையானவர்கள் காரியசித்தி மிக்கவர்கள் என்பதே கேள்வி.

"விசுவாசம் இரட்சிக்கப்படும்" என்று கிறிஸ்து கூறினார். ஆனால் இங்கு மேற்கூறப்பட்ட எவரிடமும் விசுவாசம் இல்லை என்பது தான் இமாலய உண்மையாகும்.

தமிழ் பேசும் மக்கள் இலவுகாத்த கிளியாக முடியாது. இவர்கள் பேசும் சமாதானமும் துப்பாக்கிகள், பீரங்கிகள் போல தமிழ் பேசும் மக்களுக்கு எதிரான ஓர் ஆயுதம்தான். இவர்கள் அனைவரும் "சமாதானத்தை" தொடர் கற்பழிப்புக்குள்ளாக்கி அதனையே ஒரு பீரங்கியாக வடிவமைக்கின்றார்கள்.

இங்கு இன்றைய கால கட்டச் செய்தி மிகத் தெளிவானது. அதாவது வரலாற்று நிர்ப்பந்தம் சமாதானம் பற்றிப் பேசுகின்றது. ஆனால் சமாதானம் பற்றிப் பேசுவோரோ அதனை ஒரு தந்திரமாக்கி விட்டனர். ஆதலால் சமாதானம் தொலைதூரத்திற்தான் இருக்கின்றது.

சிங்களத் தலைவர்கள் தாங்களே உருவாக்கிய அரசியற் சகதிக்குள் தாங்களே சிக்குண்டுள்ளனர். கறுப்பு யூலையை உடனடுத்து அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா கூறிய வார்த்தை ஒன்றை இங்கு நினைவு கூரலாம். தான் "சூழலின் கைதியாக உள்ளேன்" என்பதே அந்த வார்த்தை. இப்போது அனைத்து சிங்களத் தலைவர்களும் அவர்களால் உருவேற்றி வளர்க்கப்பட்ட சூழலின் கைதிகளாகவே உள்ளனர். உண்மையில் இன்றைய அரசியல் யதார்த்தத்தில் இவர்களால் எதனையும் விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாமல் உள்ளனர். இவர்கள் உருவாக்கிய அரசியல் சித்தாந்தங்களும், சட்டங்களும், யாப்புக்களும், சம்பிரதாயங்களும், வரலாற்றின் வளர்ச்சி நிலைகளும் இவர்களை விழுங்கவும் முடியாமல் கக்கவும் முடியாமல் செய்துள்ளன. ஆதலால் இத்தகைய நிர்ப்பந்தங்களின் பின்னணியில் இவர்கள் எவரிடமிருந்தும் தமிழ்பேசும் மக்கள் எதனையும் எதிர்பார்க்க முடியாது என்பதே உண்மையாகும்.

சமாதானத்தின் பொருட்டு விடுதலைப்புலிகள் சிங்கள அரசிடம் ஒரு வாய்ப்பை அளித்தனர். வரலாற்று நிர்ப்பந்தத்தின் நிமித்தம் அவர்கள் ஓர் அரைகுறை யுத்த நிறுத்தத்திற்குத் தயாரானார்களே தவிர சமாதான நடவடிக்கைகளுக்குத் தயாராகவில்லை.

**இத்தகைய அரசியல் வரலாற்றுப் பின்னணியில் சமாதானத் தீர்விற்கு சிங்கள அரசு தயாரில்லை என்பது வெளிப்படையாக இருக்கையில் தீர்வுக்குத் தயாரில்லாத சிங்கள அரசை நிர்ப்பந்திப்பதற்குப் பதிலாய் விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் சில தடை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமையானது சர்வதேச சட்டங்கள் மீதும், சர்வதேச நெறிமுறைகள் மீதும் தமிழீழ மக்கள் நம்பிக்கையிழக்கும் நிலை ஏற்பட வழிவகுக்கும்.**

சமாதானத் தீர்விற்குத் தயாரென பாசாங்காகக் கூறி மேசையிலமர்ந்திருந்து தீர்விற்கு மாறாக குதர்க்கம் பேசுவதும் தீர்வைத் தட்டிக்கழித்துவிட்டு பின்பு புலிகளின் மீது பழி போடுவதும் சிங்கள ஆட்சியாளர்களின் கைவந்த கலை.

தீர்விற்கு எதிராக சிங்களக் கட்சிகள் ஒன்றை ஒன்று எதிர்ப்பதும், அல்லது ஒரு கட்சிக்குள்ளேயே இரண்டுபட்டு ஒன்றையொன்று எதிர்ப்பதுமாக சமாதான நாடகம் தோல்வியில் முடிவடைந்து விடும். ஆனால் அவ்வாறு தம் மத்தியிலான பிரச்சினையின் நிமித்தம் சமாதானத்தை முறிக்கும் சிங்களத் தலைவர்கள் பின்பு விசமத்தனமாக அத் தோல்விக்கான காரணத்தை தமிழர்மீது அல்லது புலிகள்மீது சுமத்துவர்.

ஐ.தே.க.ஜனாதிபதி வேட்பாளர் திரு.ரணில் விக்கிரம சிங்க இம்முறைத் தேர்தலில் ஒரு புதிய ஒப்புதல் வாக்குமூலம் அளித்துள்ளார். அதாவது இருபெரும் சிங்களக் கட்சிகளான ஐ.தே.க விற்கும், சு.க விற்கும் இடையே சமாதானத்



தீர்வு பற்றிய ஒரு பொது உடன்பாடு ஏற்பட்ட பின்பே புலிகளுடன் சமாதானம் பற்றிப் பேசுவதென்பது. அதாவது இதுவரை காலம் நிகழ்ந்த சமாதானப் பேச்சுவார்த்தைகளின் தோல்விக்கு சிங்களக் கட்சிகளிடையேயான முரண்பாடுதான் பிரதான காரணம் என்ற ஒப்புதல் வாக்குமூலத்தை இது அளிக்கின்றது. ஆனால் இனியும் இருக்கக் கூடிய பிரச்சினை அப்படி ஓர் ஒருமைப்பாடான தீர்விற்கு சிங்களக் கட்சிகள் வரமுடியாது என்பது தான்.

ராஜபக்ஷ பதவிக்கு வந்தால் அவர் தனது சகாக்களான ஜே.வி.பி, ஹெல உறுமய என்பனவற்றைக் காரணங்காட்டி தீர்வைத் தட்டிக்கழித்துவிடுவார். ரணில் பதவிக்கு வந்தால் அவர் பலம் பொருந்திய எதிரணியினரை காரணங்காட்டி வாழாதிருந்து விடுவார். இதற்கப்பால் தமிழருக்கெதிரான சட்ட ஏற்பாடுகளும், யாப்பு விதிகளும் நீதித்துறையும் ஜனநாயகத்தின் பெயராலும், இறைமை, தன்னாதிக்கம் என்பவற்றின் பெயராலும் துணைக்கு இழுக்கப்பட்டு எல்லாமே இழக்கப்பட்டுவிடும். இவ்வாறு குழம்பிய நிலையில் பதவியில் இருக்கும் எந்தொரு அரசாங்கமும் பழியைப் புலிகளின் தலையில் போட்டு தமிழருக்கு எதிரான தமது ஒடுக்குமுறைகளை தொடர முற்படும்.

இத்தகைய அரசியல் வரலாற்றுப் பின்னணியில் சமாதானத் தீர்விற்கு சிங்கள அரசு தயாரில்லை என்பது வெளிப்படையாக இருக்கையில் தீர்வுக்குத் தயாரில்லாத சிங்கள அரசை நிர்ப்பந்திப்பதற்குப் பதிலாய் விடுதலைப் புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் சில தடை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளமையானது சர்வதேச சட்டங்கள் மீதும், சர்வதேச நெறிமுறைகள் மீதும் தமிழீழ மக்கள் நம்பிக்கையிழக்கும் நிலை ஏற்பட வழிவகுக்கும்.

நடவடிக்கைகள் நீதியாக இருக்குமிடத்திற்தான் நீதியின் மீது நம்பிக்கை இருக்கும். தமிழ் மக்களை சர்வதேச நெறிமுறைகள் மீது நம்பிக்கையற்றவர்களாக்க வல்ல செயலாய் ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை நடவடிக்கைகள் பார்க்கப்படுகின்றன.

சிங்களச் சிறைச்சாலைகளில் தமிழ் போராளிக் கைதிகளுக்குப் பாதுகாப்பில்லை என்பதை கறுப்பு யூலை வெலிக்கடை சிறைப் படுகொலைகளும், "புனர்வாழ்வு" என்பதன் பெயரில் பிந்துனுவேவ சிறைமுகாமில் தமிழ் இளைஞர்கள் கொடூரமாய் படுகொலை செய்யப்பட்டமையும் நிரூபித்து நிற்கின்றன. இப்பின்னணியில் சிங்கள கட்டுப்பாட்டுப் பகுதிகளில் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் புலிகளுக்குப் பாதுகாப்பில்லை என்ற நியாயம் சிறிதும் தட்டிக்கழிக்கப்பட முடியாதது. உண்மையில் பேச்சுவார்த்தையை தட்டிக் கழிப்பதற்காகத்தான் சந்திரிக்கா அரசாங்கம் அதுவரை இருந்துவந்த நடைமுறைகளை மீறி வெளிநாடுகளில் பேசுவதற்குப் பதிலாக கொழும்பில் பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்தது. இத்தகைய உண்மைகளை எல்லாம் ஐரோப்பிய ஒன்றியம் கருத்திலெடுக்கத் தவறியுள்ளதென்ற விசனம் தமிழ்மக்கள் மனங்களில் வளர ஆரம்பித்துள்ளது.

ஆதலால் இனிமேலும் சமாதானத் தீர்விற்கு சிங்கள அரசு, அல்லது எந்தச் சிங்கள அரசாங்கமும் தயாரில்லை என்ற யதார்த்தத்திலிருந்தே சமாதானம் பற்றிக் கதைக்கலாம் என்பதும், அதன் பொருட்டு சிங்கள அரசைத்தான் நிர்ப்பந்திக்க வேண்டும் என்பதுமே உண்மை நிலையாகும்.

# சமாதானத்தின் உயிரிழையை EU பொருட்படுத்தவில்லையா!

**இன்றும் சமாதானம் தமிழர்களிடம் சரணாகதியைத்தான் கோருமென்றால் எல்லாவித இராஜதந்திர பாடவிதானங்களுக்கும், பகுப்பாய்வுகளுக்கும் அப்பால் வீழ்ச்சியே வரினும் தமிழரின் தலைமைத்துவம் நிமிர்வான யுத்தத்தை எதிர்கொள்ளுமேயன்றி இழிவான சரணடைதலை அல்ல.**

**ஐரோப்பிய யூனியன்** பயணத்தடை விதித்து விடுதலைப்புலிகளுக்கு அழுத்தத்தை விளைவிக்கவில்லை. மாறாக தமிழ்மக்கள் மீதான ஒடுக்குமுறையாளருடன் ஒத்துழைத்துச் செயற்படுகிறது என்ற அச்சம் எழுந்திருக்கின்றது.

ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்த வரை தமது இறைமைக்குக் கிடைக்கக்கூடிய அங்கீகாரத்தைப் பொறுத்தே வன்முறை தவிர்ந்த இன்னொரு பயணம் பற்றிச் சிந்திக்க முடியும். ஐரோப்பிய யூனியனின் நடவடிக்கை மூலம் தமிழ்மக்கள் தமது வரலாற்றில் வழமை



போலவே சொந்த இராணுவப் பலம்மீதே நம்பிக்கை வைக்க நிர்ப்பந்திக்கப்படுகின்றார்களா என்ற கேள்வி எழுகின்றது.

சிங்களத் தலைவர்களோடு தமிழர்கள் சமாதானம் செய்த அனுபவம் சாதாரணமானதல்ல. அடிப்படையில் அவர்கள் இத்தீவில் சிங்கள பௌத்தரைத் தவிர இன்னொரு அடையாளம் இருப்பதையே வெறுக்கிறார்கள். அருவருக்கின்றார்கள். அவ்வப்போது எழும் உள்நாட்டு, பிராந்திய, சர்வதேச அரசியல் நிலமைகளுக்கு ஏற்ப அவர்களது வாய்பந்தல் மாறலாம். அவர்களது மனம் மாறுவதில்லை. இந்த யதார்த்தத்தைத் தமிழர்கள் தமது இரண்டு, மூன்று தலைமுறைகளுக்கு ஊடாக பட்டுணர்ந்து வந்திருக்கின்றார்கள்.

முதற் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா தமிழர் தாயகத்தைத் துண்டாடி சிங்களக் குடியேற்றங்களைச் செய்யும் கொள்கை முதற் கொண்டு, இலங்கையில் இறுதியாக இப்போதிருக்கும் சனாதிபதி சந்திரிக்கா தென்னாபிரிக்காவில் தமிழர்களுக்கு இங்கு தாயகம் இல்லை, அவர்கள் வந்தேறு குடிகள் என்று விளக்கமளித்தது வரை இலங்கையின் எல்லாத் தலைவர்களினதும் மன ஓட்டம் ஒரே மாதிரியானவையே. அவ் வப்போதைய இராஜீகத் தேவைகளுக்காக அவர்கள் பல நாக்குகளால் பேசும் வழக்கமுள்ளவர்களேயன்றி வேறொன்றுமல்ல.

இப்போதோ சர்வதேச சூழல் பெரிதும் மாறிவிட்டது. உலகநாடுகள் ஒரு இலக்கை நோக்கி புதிய உலக ஒழுங்கை ஸ்தாபித்து அல்லது ஸ்திரப்படுத்தி வருகின்றன. இதனால் சர்வதேச சமூகத்தின் இலங்கை பற்றிய ஈடுபாடு அதிகரித்து வருகின்றது. எனவே இலங்கையின் அமைதியைக் குலைத்து கொந்தளித்து நிற்கும் இன முரண்பாட்டிலும் அவை அக்கறை கொண்டுள்ளன.

மேற்குமயப்பட்ட சர்வதேச சமூகத்தின் இந்த ஈடுபாட்டை, அக்கறையை சனநாயக விழுமியங்களுக்கூடான உறவுப் பரிமாற்றம், புரிந்துணர்வு மூலம் தமது தாயகத்தில் தமது கூட்டுரிமையையும், பாதுகாப்பையும் சுதந்திரத்தையும் உறுதிப்படுத்திக்கொள்ள முடியுமா என்ற எத்தனிப்பே தமிழர்கள் இந்த சமாதானத்தில் உற்சாகமாக ஈடுபடுவதற்கான காரணம். அல்லாமல், சிங்களத் தலைவர்கள் தமிழரின் உரிமை குறித்து ஒரு கொள்கை மாற்றத்திற்கு வந்துவிட்டனர் என்று தமிழர் நம்பிவிட்டனரென்றல்ல.

தமிழீழத் தேசியத் தலைவர் சென்ற மாவீரர்நாள் உரையில் சிங்களக் கட்சிகளிடம் ஒரு வேண்டுகோளை முன்வைத்திருந்தார். "தமிழ்மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாக பகிரங்கப்படுத்துங்கள்.'' என்று.

ஜனாதிபதித் தேர்தலில் இப்போது போட்டியிட நிற்கும் பொ.ஜ.முன்னணியின் வேட்பாளர் மேற்குறித்த வேண்டுகோளுக்குப் பதிலளிப்பதாக ஒற்றையாட்சித் தீர்வு, தமிழர் தாயகம் என்று ஒன்றில்லை, சுனாமி பொதுக் கட்டமைப்பைக் கைவிடல் போன்ற பல விடயங்களில் உடன்பட்டு ஜே.வி.பி, ஹெல உறுமய ஆகியவற்றுடன் ஒப்பந்தம் செய்துள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க நேரடிப் பதிலிறுக்காமல் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் தமக்குமிடையில் தீர்வு குறித்த ஒத்த உடன்பாடு உண்டு என்கிறார். 21ஆம் நூற்றாண்டுக்கேற்ற வகையில் இராணுவத்தை நவீனமயப்படுத்துவேன் என்கின்றார். இலங்கையில் இராணுவம் என்பது அந்நியநாட்டு இராணுவத்திற்கு எதிரானது அல்ல. அது உள்நாட்டில் தமிழர்களுக்கு எதிரானது. எனவே இதன்மூலம் வெற்றியை உறுதிசெய்யக்கூடிய தீவிர யுத்தத்தை அவர் கோடி காட்டுகிறார்.

இவை சமாதானத்திற்கு யோக்கியமான பதில்கள் அல்ல.

நான்குவருட சமாதானம் தமிழர்களுக்கு எதையும் தரவில்லை. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தில் தொண்ணூறு நாட்களில் அமுலுக்கு வரும் வகையில் உடன்பட்ட பல விடயங்கள் இன்றுவரை அமுலாக்கப்படவில்லை. இக்காலத்தில் இரண்டு அரசாங்கங்களும் ஆட்சியில் இருந்துவிட்டன. இடம் பெயர்ந்த தமிழர்கள் தமது சொந்த நிலங்களுக்குத் திரும்புதல் என்ற வாழ்வாதாரப் பிரச்சினைகூட இந்த மூன்றுவருடத்தில் ஒப்பேறவில்லை.



**தமிழ்மக்கள் அமைதி, பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைக் கண்டடைவதற்கான உத்தரவாதம் அளிக்கக்கூடிய இராஜீக மார்க்கங்களை மூடிவிடுவதனால் அல்லது அத்தகைய மார்க்கத்தில் துர்க்குறிகளை ஏற்படுத்துவதனால் அவர்கள் தமது சொந்த இராணுவப் பலத்தில் நம்பிக்கைகொண்டு பயணப்படவே நிர்ப்பந்திக்கப்படுவர்.**

புலிகளினால் முன்வைக்கப்பட்ட சுனாமிப் பொதுக்கட்டமைப்பு அரசாங்கத்தினால் நிராகரிக்கப்பட்டபோதும் நோர்வேயினால் முன்வைக்கப்பட்ட கட்டமைப்புக்கும், பின்னர் அதில் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட திருத்தத்திற்கும்கூட புலிகள் உடன்பட்டிருந்தும் பொதுக்கட்டமைப்பால் அமுலுக்கு வரமுடியவில்லை.

கௌசல்யன், டிக்கான் உட்பட புலிகளின் பல முக்கிய உறுப்பினர்கள் உள்ளடங்க நூற்றுக்கணக்கான புலியுறுப்பினர்களும் பொதுமக்களும் கொல்லப்பட்டதினால் எழுந்த பதட்ட சூழ்நிலையிலும் தொண்ணூறு நாட்களில் நடைமுறைப்படுத்துவதாக ஒப்புக்கொண்ட ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்படவில்லை. இப்போது புலிகளால் தமது போராளிகளை கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்குள் மீள அழைத்ததன் மூலமே படுகொலைகளை தவிர்க்க முடிந்திருக்கிறது.

இவையெல்லாம் ஒருங்குசேர்ந்து முழு விசையுடன் யுத்தநிறுத்த உடன்பாட்டை யுத்தத்தைநோக்கி இழுத்தன. மறுமுனையில் தமிழ்மக்களின் இறைமையை அனுசரித்து ஆதரவுகாட்டி நடக்கும் அக்கறையுள்ள சர்வதேச சமூகத்தின் ஈடுபாடு யுத்தநிறுத்த உடன்பாட்டை எதிர்முனையில் விசைகொண்டிழுத்தது. இந்த இரண்டிற்குமிடையில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஊசலாடிக்கொண்டிருப்பதே நடப்பு யதார்த்தமாக இருந்தது.

ஐரோப்பிய யூனியன் விடுதலைப் புலிகளுக்கான பயணத்தடையை விதித்ததன் மூலம் தமிழர்கள் ஒடுக்குமுறையிலிருந்து விடுபடுவதற்கான உணர்வையும், அதற்காக முப்பது வருடங்கள் புரிந்த தியாகத்தையும் கொச்சைப்படுத்தியிருப்பதானது யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை சமாதானம் நோக்கி இழுத்து நின்ற விசையின் கனத்த இழையொன்று அறுந்துபோய்விட வழிசெய்துவிட்டது. இதனால் விரும்பத்தகாததான யுத்தமுனையின் இழுவிசை வலுப்பெற்றிருக்கிறது.

ஒடுக்கப்படும் மக்கள் தமது வாழ்வாதாரங்கள் சிதையும்போது எப்போதும் எதிர்த்தெழுவது இயல்பு. இந்த எதிர்ப்பு வன்முறைகளற்ற மார்க்கங்களையே முதலில் தேர்ந்தெடுக்கும். உரிமையை வென்றெடுக்க அந்த மார்க்கங்கள் வழிவிட மறுக்கும்பொழுது வன்முறையை நாடும் யதார்த்தம் எழுகின்றது. எல்லா தேசிய விடுதலைப் போராட்டத்தினதும் வரலாற்று யதார்த்தம் இதுவே. இத்தகைய ஒரு நிலைக்கு தமிழர்கள் தள்ளப்பட்டு சில தசாப்தங்கள் ஆகிவிட்டன.

எனினும் இப்போது ஏற்பட்டிருக்கும் சர்வதேச சூழலில் தமிழ்மக்கள் வன்முறை விடுத்த வேறு மார்க்கங்களில் பயணிக்க நம்பிக்கையுடன் எத்தனிக்கும்போது வாசல்களைத் திறந்துவிடவேண்டியது சமாதானத்தில் ஈடுபாடு காட்டும் அனைவரினதும் கடப் பாடு. குறிப்பாக தமிழ்மக்கள் நம்பிக்கை கொண்டிருப்பது சிங்கள அரசாங்கங்களின் மீதல்ல. புதிய சூழலில் சர்வதேச சமூகத்தின் கரிசனை மீதே என்பதுதான் கவனத்திற்குரியது.

தமிழ்மக்கள் அமைதி, பாதுகாப்பு, சுதந்திரம் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றைக் கண்டடைவதற்கான உத்தரவாதம் அளிக்கக்கூடிய இராஜீக மார்க்கங்களை மூடிவிடுவதனால் அல்லது அத்தகைய மார்க்கத்தில் துர்க்குறிகளை ஏற்படுத்துவதனால் அவர்கள் தமது சொந்த இராணுவப் பலத்தில் நம்பிக்கைகொண்டு பயணப்படவே நிர்ப்பந்திக்கப்படுவர்.

இதற்கு முன்பிருந்த ஒரு சர்வதேச சூழலில் இன முரண்பாட்டின் தீர்வுக்கான பிராந்திய அளவிலான மூன்றாந்தரப்பின் பாத்திரம் தமிழர்களை வன்முறைப் பாதைக்குள் மீண்டும் தள்ளிவிட்டமை நினைவு கொள்ளத் தக்கது. தமிழர்களின் இறைமை மாற்றுத் தரப்புக்களால் பங்குபோடப்பட்டதே இதன் உள்ளார்ந்த பிரச்சினையாகவும் இருந்தது. இராஜீக மார்க்கத்திற்கோ அகிம்சை மார்க்கத்திற்கோ கூட இடமின்றிப்போக வேறு தெரிவுகளின்றித் தள்ளப்பட்டவர்கள் இலட்சிய வெறியோடும் பற்றுறுதியோடும் தியாகங்கள் புரிந்து ஆயுதப்போரை தொடர்ந்தார்கள். இன்று புதிய சூழலைப் படைத்தார்கள்.

இன்றும் சமாதானம் தமிழர்களி டம் சரணாகதியைத்தான் கோருமென்றால் எல்லாவித இராஜதந்திர பாடவிதானங்களுக்கும், பகுப்பாய்வுகளுக்கும் அப்பால் வீழ்ச்சியே வரினும் தமிழரின் தலைமைத்துவம் நிமிர்வான யுத்தத்தை எதிர்கொள்ளுமேயன்றி இழிவான சரணடைதலை அல்ல.

இப்போதும் ஒரு கொந்தளிப்பான காலம் நிலவுகின்றது. தம்மீதான ஒடுக்குமுறைக்கு ஒத்துழைக்கும் தரப்பிடமிருந்து சமாதானத்தில் ஒரு நற்பாத்திரத்தை எதிர்பார்க்க முடியுமா என்ற அச்சம் அவர்களைச் சூழ்ந்துகொண்டிருக்கிறது. தமது சமாதான மனத்திலிருந்து மக்கள் விடுபட்டு வருகின்றனர். யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை யுத்தம்நோக்கி இழுத்துவரும் விசை இழைகள் அறுந்தும் அதன் எதிர்முனை விசையிழைகள் இணைந்தும் போகுமாறான செயல்கள் முன்னெடுக்கப்படாவிட்டால் யுத்தம் வரும். ஜனாதிபதித் தேர்தலை அடுத்துவரும் நாட்கள் நிர்ணயகரமான நாட்களாக இருக்கும்.

பிரபத்திரன்



> "எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிற்பதால் மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்துகொடாமல் எம்மால் தலைநிமிர்ந்து நிற்கமுடிகின்றது."
>
> - தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் -

# போரும் அமைதியும்

*- கலாநிதி க.சோமாஸ்கந்தன் -*

எமது விடுதலை வரலாற்றில் போரும் அமைதியும் மாறிமாறி வருகின்றன. இந்தச் சுழற்சியை நிறுத்த எடுத்த முயற்சிகள் இதுவரை தோல்வி கண்டுள்ளன. அமைதி நிச்சயமற்றதாகவும் நம்பிக்கை தராததாகவும் அமைகின்றது. அமைதியை நிலைநாட்ட வந்த அயல்நாட்டுப் படை கடும்போர் நடத்திவிட்டுச் சென்றுள்ளது. அமைதி ஒரு போருக்கு முந்திய இடைவெளி என்ற கருத்து எம்மத்தியில் நிலவுகின்றது. அமைதி வேண்டின் போருக்குத் தயாராகுக என்ற கோட்பாடு மேலைத் தேயங்களில் வழக்கில் உள்ளது. எம்மைப் பொறுத்தளவில் இக்கோட்பாடு மிகவும் பொருத்தமாக இருக்கிறது.

பிணக்குகளுக்குத் தீர்வாகப்போகும் அமைதியை முன்னெடுக்கும் இராஜதந்திரமும் இடம்பெறுகின்றன. அமைதிவழியில் தீர்க்க முடியாத பிணக்கை போர்மூலம் தீர்க்க முடியும். அமைதியாகப் பேசித் தீர்க்க முடியுமானால் போரின் தேவை இருக்காது. அமைதிப் பேச்சுக்கள் நடக்கும்போதே படை பலத்தை வெளிக்காட்டும் நடைமுறை உலக அரங்கில் உண்டு. பலமான நிலையில் பேசுவதற்குத்தான் நாடுகளும், நாடுகளுக்கு நிகரான விடுதலை அமைப்புக்களும் விரும்பு கின்றன. பலமற்றவர்களின் பேச்சுக்குரல் தணிந்தே இருக்கும். பேச்சில் ஈடுபடும் பகுதியினரை மிரட்டிப் பணியவைக்கும் உபாயம் நடைமுறையில் உண்டு. வெ[illegible] நாடுகளுடன் இராணுவ ஒப்பந்தங்கள் செய்வ[illegible] அல்லது ஆயுதக் கொள்வனவு செய்வ[illegible] கூட்டு இராணுவப் பயிற்சிகளில் ஈடுபடுவ[illegible] மிரட்டலின் வடிவங்களாக அமைகின்றன[illegible] இவை அனைத்தும் நாம் கண்டுணர்ந்[illegible] அனுவபவங்களாகும்.

போர் மனித வரலாற்றுடன் நெருக்[illegible] மாக இணைந்துள்ளது. போரை மனி[illegible] வரலாற்றிலிருந்து நிரந்தரமாகத் தள்[illegible] வைக்கும் ஒரு முயற்சி 1927 - 1928 கால[illegible] பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. கெலொ[illegible] - பிறாயன்ற் உடன்படிக்கை (KELLO[illegible] BRIAND PACT) அமெரிக்க இராஜங்க[illegible] செயலர் பிறாங்க் பீ கெலொக், பிரெஞ்[illegible] வெளிவிவகார அமைச்சர் அரிஸ்ரை[illegible] பிறாயன்ற் ஆகியோரின் கூட்டு முயற்சியி[illegible] பயனாய் 1928இல் நிறைவேறியது. போரை[illegible] கைவிடுவதாக உத்தரவாதம் வழங்கிய 6[illegible] நாடுகள் உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட[illegible] 1929ஆம் ஆண்டிற்கான அமைதி நோபல் பரிசு கெலொக்கிற்கு வழங்கப்பட்டது. உடன்படிக்கையை மீறி போருக்குச் செல்லும் நாடுகளைத் தண்டிக்கும் நடைமுறை அதில் கூறப்படவில்லை. "இந்த உடன்படிக்கை மூலம் கிடைக்கும் அனுகூலங்களை உடன் படிக்கையை மீறுவோருக்கு வழங்குவதில்லை" என்ற அர்த்தமற்ற வாசகம் அதில் உண்டு. 1931இல் மன்சூரியா மீது ஜப்பானும், 1935இல் எதியோப்பியா மீது இத்தாலியும் போர் தொடுத்தன. அத்தோடு உடன்படிக்கை முடிவுக்கு வந்தது. 1939இல் இரண்டாம் உலகப்போர் தொடங்கியது.

> *அமைதி ஒரு போருக்கு முந்திய இடைவெளி என்ற கருத்து எம்மத்தியில் நிலவுகின்றது. அமைதி வேண்டின் போருக்குத் தயாராகுக என்ற கோட்பாடு மேலைத்தேயங்களில் வழக்கில் உள்ளது. எம்மைப் பொறுத்தளவில் இக்கோட்பாடு மிகவும் பொருத்தமாக இருக்கிறது.*

உடன்படிக்கைகள் தோல்வி காண்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. முக்கியமாக அவை அமுலாக்குவதற்கு நடைமுறைச் சாத்தியமற்றவையாகவும் உலக நடப்பிற்கு மாறானவையாகவும் உள்ளன. அடுத்ததாக அதில் கைச்சாத்திடுவோர் கூறப்பட்டவற்றை நிறைவேற்றும் நேர்மையான நோக்குடன் ஒப்பமிடுவதில்லை. உடன்படிக் கைகளின் எழுத்திற்கும் உள்நோக்கத்திற்கும் இடையில் பெரிய இடைவெளி இருப்பது அவற்றின் தோல்விக்கு அதிமுக்கிய காரணமாக அமைகிறது. இதற்கு உதாரணமாக 'அமைதியையும் இயல்பு நிலையையும் உருவாக்குவதற்காக' இந்திய - இலங்கை அரசுத் தலைவர்கள் ஜூலை 29,1987இல் கைச்சாத்திட்ட இந்தோ - சிறிலங்கா உடன் படிக்கையைக் குறிப்பிடலாம். சிங்கள - தமிழ் இனங்களுக்கிடையிலான பாரம்பரிய முரண் பாடுகளை தீர்த்துவைப்பதாகக் கூறிக்கொண்டு அயல்நாடான இந்தியா மேற்கொண்ட தலையீடு இராணுவ நடவடிக்கையாக அமைந்தது. மேற் கூறிய இராஜதந்திர ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்ட அதேவேளையில் இந்திய இராணுவத்தின் உள்நுழைவு ஆரம்பித்துவிட்டது. ஈழத் தமிழர் களின் தேசியத்தை அழிக்கும் நோக்கை அது கொண்டிருந்தது. தனது தேசிய நலனைப் பெறுவதற்காகவே இந்தியா இராணுவத் தலையீட்டை மேற்கொண்டது.

தமிழ்ப் போராளிகளுக்குப் பயிற்சி வழங்கி சிங்களப் படைகளுடன் மோதவைத்த இந்தியாவைக் கொண்டே அதே தமிழ்ப் போராளிகளை அழிக்கவேண்டும் என்ற மிகவும் நுட்பமான இராஜதந்திரத்தை சிறிலங்கா ஜனாதிபதி ஜெயவர்த்தனா மேற்கொண்டார்.



இது இந்திய அரசுக்கு ஏற்புடையதாக இருந்தது. இதன் காரணமாக அமைதிப்படை என்ற பெயரில் ஒரு இந்திய ஆக்கிரமிப்புப் படை தமிழர் பகுதிகளில் புகுத்தப்பட்டது. மொறீன் செனவிரத்தின என்ற சிங்கள எழுத்தாளர் இவ்வருடம் வெளியிட்ட தனது நூலில் இந்தியப் படையின் வருகையை 'அழைக்கப்பட்ட ஆக்கிரமிப்பு' (INVASION BY INVITATION) என்று சாடியுள்ளார். பேசித் தீர்க்கக்கூடிய பிரச்சினையை மோசமாக்கியதற் காகவும் அவர் ஜெயவர்த்தனா அரசுமீது குற்றம் சுமத்தியுள்ளார். (JOURNAL OF THE END TIME - EXTRACTS FROM A DIARY: MAUREEN SENEVIRATNE .2004) இந்தியப் படைகள் தமிழர் பகுதியில் புரிந்த பாலியல் வன்முறைகளையும் அவர் தனது நூலில் பட்டியலிட்டுள்ளார். யாழ்.நகரின் ஐ.பி.கே.எவ் கட்டளைத் தளபதி பிரிகேடியர் காகொலன் ஒரு பத்திரிகையாளரின் கேள்விக்கு "இந்திய இராணுவம் தேவதூதர்களின் இராணுவம் அல்ல. அதே சமயத்தில் நாங்கள் சாத்தான் படையும் அல்ல. நாங்கள் மனிதர்கள்தான். மேற்கு நாட்டு இராணுவங்கள் பாலியல் வன்முறைகளைச் செய்யவில்லையா?" என்று பதிலளித்தார். படை நடவடிக்கையின் ஒரு திட்டமிட்ட அங்கமாக இந்தியப் படைகளால் பாலியல் வன்முறைகள் முன்னெடுக்கப் பட்டன. ஈழத் தமிழினத்திற்குத் தலைகுனிவை ஏற்படுத்துவதற்காக இந்தியப் படைகள் பெண்களைக் குறிவைத்துத் தாக்குதல் நடத்தி னர்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்பே இந்திய ஆக்கிரமிப்புத் தொடங்கி விட்டதாக பேராசிரியர் றொகான் குணரத்னா தனது நூலில் சுட்டிக்காட்டுகிறார். (WAR AND PEACE IN SRILANKA: ROHAN GUNARATNA. SRILANKA INSTITUTE OF FUNDAMENTAL STUDIES, KANDY. 1987) 1983வரையில் இந்தியாவின் அரசியல் மற்றும் இராணுவ ஆக்கிரமிப்பு ஆரம்பித்து விட்டதாகவும் றோ எனப்படும் இந்திய வெளிநாட்டு உளவமைப்பின் பிரசன்னம் தலைநகர் கொழும்பில் பெருமளவில் காணப்பட்டதாகவும் றொகான் குணரத்னா தெரிவித்தார். 1987க்கு முன்பே இலங்கை மீதான படையெடுப்புக்கான திட்டங்கள் இந்தியத் தரப்பினரால் தீட்டப்பட்டதாகவும், இலங்கையைக் கைப்பற்றுவதற்கான வ்சேட படைகள் திருவனந்தபுரம் போன்ற பகுதிகளில் நிறுத்தப்பட்டதாகவும் அவர் தனது நூல்மூலம் அறியத்தருகிறார். இந்திய உளவுத்துறை மற்றும் அமைச்சரவை ஆவணங்கள் அம்பல மாகியபோது இந்திய அரசின் திட்டங்கள் வெளியுலகை எட்டின.

அமைதியைக் காரணம் காட்டி இந்தியப் படைகள் நிகழ்த்திய உள்நுழைவு ஒரு தலைசிறந்த இராஜதந்திர வெற்றியாகக் கணிப்பிடப்படுகிறது. ஒரு லட்சத்திற்கும் மேலான முப்படையினர் கனரக ஆயுதம் சகிதமாக அயல் நாடொன்றுக்குள் உலக நாடுகளின் ஆட்சேபனை யாதுமின்றி நுழைவ தென்றால் சாதாரண விடயமல்ல. ஆனால் ஈழத்தமிழர் வரலாற்றில் அது நடந்தேறி விட்டது. தமிழர் தாயகத்தில் இந்திய இராணுவம் புரிந்த மனித உரிமை மீறல்கள் பற்றியும் ஒருவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. சிறிலங்கா வானொலியும், அச்சு ஊடகங்களும் இந்தியாவுக்குச் சார் பாகவே இயங்கின. இந்தியர்கள் நடாத்திய படுகொலைகள் வெளியுலகை எட்டாமல் தணிக்கை, ஊரடங்கு உத்தரவு போன்றவை மூலமாகத் தடுக்கப்பட்டன. இதுபற்றிய விரிவான ஆய்வுகளை மேற்கொண்ட இந்திய ரான சுமந்திராபோஸ் தனது நூலில் பின் வருமாறு கூறுகிறார். "பிரச்சினையை சுமூக மாகத் தீர்க்க விரும்பியிருந்தால் இந்தியா மத்தியட்சம் வகித்து அமைதிக்கு உத்தர வாதம் வழங்கியிருக்கலாம். மாறாக தானே பங்காளியாகவும், தலையீட்டாளனாகவும் தோன்றியது பல கேள்விகளை எழுப்பு கின்றன." (STATES, NATIONS, SOVER-EIGNTY: SRILANKA, INDIA AND THE TAMIL EELAM MOVEMENT. SUMANTRA BOSE. SAGE PUBLISHERS, NEW DELHI.1994) காலம் போகப்போக தமிழர் பகுதிகளில் இந்தியப் படையினர் பிரசன்னம் அச்சொட்டான இராணுவ ஆக்கிர மிப்பாக மாறிவிட்டது என்கிறார் போஸ். இன்று காஷ்மீரில் நடத்தும் படுகொலைகளிலும் பார்க்க கூடுதலானவற்றை தமிழீழத்தில் இந்தியப் படைகள் புரிந்தன.

தமிழர் பகுதிகளில் இந்திய - சிறி லங்கா உடன்படிக்கையின்படி இந்திய இராணுவம் தமிழ்ப் பொதுமக்கள் மீதும், விடுதலைப்புலிகள் மீதும் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்த அதேவேளையில் சிங்கள அரசு தனது பங்கிற்குரிய உத்தரவாதங்களை நிறைவேற்றாது காலம் கடத்தியதை அண்மை யில் வெளிவந்த இந்திய நூல் ஒப்புக் கொள்கின்றது. (THE TRIUMPH OF TRUTH: THE RAJIV GANDHI ASSASINATION - THE INVESTIGATION. D.R.KARTHIKEYAN AND RADHA VINOD RAJU. NEW DAWN PRESS.2004) 1989ஆம் ஆண்டில் ஐ.பி.கே.எவ் - எல்.ரி.ரி.ஈ [illegible]ார் மிகத் தீவிரமாக நடந்த காலத்தில் [illegible]ந்திய மத்திய அமைச்சின் செயலர் சேஷன் [illegible]ண்மை நிலவரத்தை அறியும் நோக்கில் [illegible]ாலிஸ்துறை அதிகாரி கார்த்திகேயனை [illegible]லங்கைக்கு அனுப்பிவைத்தார். இதே [illegible]ர்த்திகேயன் பிற்காலத்தில் ராஜீவ்காந்தி [illegible]டுகொலை சம்பந்தமான தலைமை [illegible]சாரணை அதிகாரியாகவும் பதவிவகித்தார். [illegible]சாரணைகள் சம்பந்தமான மேற்கூறிய [illegible]லை அவரும் அவருடைய உதவியாளர் [illegible]ஜூவும் பிரசுரித்துள்ளனர்.

இலங்கைத் தலைநகர் உட்பட [illegible]த்தீவின் எல்லாப் பகுதியையும் 1989இல் [illegible]ர்த்திகேயன் சுற்றிப் பார்த்து அபிப்பிராயம் [illegible]ரட்டினார். சிங்களவர்கள் தமிழர்களென [illegible]ரை அவர் நேர்காணல் செய்தார். இதன் [illegible]னாய் அவர் ஜூன், 1989இல் ஒரு 45 [illegible]க ஆய்வறிக்கையை இந்திய அமைச்சுச் [illegible]யலர் சேஷனிடம் கையளித்தார். இந்திய [illegible]சிறிலங்கா ஒப்பந்தம் செயலிழந்துவிட்டது. ஒரு சுத்தமான ஆக்கிரமிப்புப் படையாக இந்தியப்படை மாறிவிட்டது, தமிழர்களின் எதிர்ப்பை அது சம்பாதித்துவிட்டது என்பது அறிக்கையின் முதல் பகுதி. சிறிலங்கா அரசியல் சாசனத்திற்குச் செய்யப்பட்ட 13ஆம் திருத்தத்தின் கீழ் சிறிலங்கா அரசு வடக்கு - கிழக்கு நிர்வாக அலகிற்கு யாதொரு அதிகாரப் பங்கீட்டையும் செய்யவில்லை என்பதையும் கார்த்திகேயன் தனது அறிக்கை யில் சுட்டிக்காட்டியுள்ளார். காலம் காலமாகச் செய்த இழுத்தடிப்பை இப்போதும் செய்தபடி இருந்தனர்.

இந்தியப் படைகளின் தாக்குதலில் எல்.ரி.ரி.ஈ தோற்கடிக்கப்பட்டால் அதிகாரப் பங்கீடு தேவைப்படாது என்பது ஜெயவர்த்தனா அரசின் நிலைப்பாடு. இதற்காக அவர்கள் தம்மாலியன்ற ஒத்துழைப்பை ஐ.பி.கே.எவ் ற்கு வழங்கிவந்தனர். ஜெயவர்த்தனா அரசு அதிகாரப் பங்கீடு செய்யாமல் காலம் கடத்திய தற்கு ஐ.பி.கே.எவ் இன் தாக்குதல் திறனில் அதற்கு இருந்த நம்பிக்கை காரணமாகும். யாவற்றையும் நன்கு பரிசீலனை செய்த கார்த்திகேயன் செய்த பரிந்துரை மிகவும் சுருக்கமானது. இந்தியப் படைகள் இலங் கையைவிட்டு முற்றாக உடனடியாக வெளியேறவேண்டும். ஏதேனும் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த காரணத்திற்காக இந்தியப்படை அங்கு தங்கவேண்டுமாயின் அதற்காக எல்.ரி.ரி.ஈயுடன் உடனடிப் பேச்சு வார்த்தைகளை இந்திய அரசு தொடங்க வேண்டும்.


➡

கார்த்திகேயனின் 45பக்க அறிக்கையும் அதிலடங்கிய பரிந்துரையும் செயலர் சேஷனை கடும் குழப்பத்திற்கு உள்ளாக்கியது. ஆனால் அவரால் முடிவெடுக்க முடியவில்லை. சிறிலங்கா விவகாரங்களுக்குப் பொறுப்பான இந்திய வெளிவிவகார அமைச்சக அதிகாரி குல்டிப் சகாதேவ் என்பவர்தான் பொறுப்புவாய்ந்த அதிகாரி. இவர் அறிக்கையில் கூறப்பட்டவற்றை ஏற்றுக் கொண்டார். ஆனால், உடனடியாக இந்தியப் படைகளை திருப்பி அழைப்பதற்கோ, எல்.ரி.ரி.ஈயுடன் பேசுவதற்கோ சம்மதம் தர மறுத்துவிட்டார். இந்த வரலாற்று நிகழ்ச்சிகள் பற்றிய விரிவான விளக்கத்தை கார்த்திகேயனின் நூலில் பார்க்கலாம். போர் 1990வரை தொடர்ந்தது. கார்த்திகேயனின் நூலை மதிப்பீடு செய்து கட்டுரை வரைந்த இந்துஸ்தான் ரைம்ஸ் பத்திரிகை நிருபர் பி.கே.பாலச்சந்திரன் 'கார்த்திகேயனின் பரிந்துரை ஏற்கப்பட்டிருந்தால் ராஜீவ்காந்தியின் உயிரிழப்பைத் தவிர்த்திருக்கலாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்திய இராணுவத் தலையீடு மிகப் பெரிய தவறென பத்திரிகையாளர் அனிதா பிரதாப் தனது குருதித் தீவு என்ற நூலில் கூறுகிறார். (ISLAND OF BLOOD: ANITA PRATAP. PENGUIN INDIA. 2001) எஞ்சியிருந்த 2000 படையினர் திருகோணமலைத் துறைமுகம் ஊடாக வெளியேறிய சோக வரலாற்றை அவர் இந்த நூலில் தருகிறார். இந்தியப் படைகள் வந்திறங்கிய போது பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் மாலையும் கையுமாக வரவேற்றார்கள். வெளியேறியபோது ஒருவரும் வரவில்லை. அரசு தரப்பில் ரஞ்சன் விஜயரத்தினா மாத்திரம் வந்திருந்தார். அமைதியை நிலைநாட்ட வந்தவர்கள் தமிழர் வாழ்வில் இரத்தம் தோய்ந்த வரலாற்றை விட்டுச் சென்றனர். இந்தியப் படைகளின் உள்நுழைவு ஒரு இராஜதந்திர வெற்றி என்றால் வெளியேற்றம் ஒரு இராஜதந்திரப் படுதோல்வியாக அமைகிறது. ஜெயவர்த்தனாவின் இராஜதந்திரத்திற்கு இந்தியர்கள் இரையானார்கள். இந்தியாவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும் என்பது சிறிலங்கா ஜனாதிபதியின் இலக்கு. இதை அவர் MANAGING INDIA என்று அழைத்தார். இன்றுவரை சிங்கள அரசுகள் ஜெயவர்த்தனாவின் அடிச்சுவட்டைப் பின்பற்றுகின்றன. வாவென்றால் வா, போவென்றால் போ என்று சிங்கள அரசின் கட்டளைக்கு அடிபணிந்த கசப்பான அனுபவம் என்றென்றும் இந்தியாவுக்கு உண்டு.

பூட்டான், சிக்கிம் நாடுகள்போல் இந்தியாவின் அங்கமாக சிறிலங்கா வரக்கூடாது என்பதில் சிங்களத் தலைமை மிகவும் விழிப்பாக இருக்கிறது. அதே சமயத்தில் தமிழ்த் தேசியத்தையும் அதை முன்னெடுக்கும் புலிகளையும் அழிப்பதற்கு இந்தியாவைப் பயன்படுத்தும் திட்டம் அவர்கள் வசம் உள்ளது. இந்தியாவை அவர்கள் எப்போதும் சந்தேகக் கண்ணுடன் பார்ப்பார்கள். சீனா, பாகிஸ்தான், அமெரிக்கா, இஸ்ரேல் போன்ற நாடுகள்தான் சிங்களத் தலைமையின் உண்மையான நண்பர்கள். சிங்களப் பேரினவாதச் சிந்தனையை வெளிப்படுத்தும் ஆங்கில நாளேடு 'த ஜலண்ட்' தனது ஜூலை 31, 2002ஆம் நாள் ஆசிரியர் தலையங்கத்தில் பாகிஸ்தான் தலைவர் ஜென்.முஷாரப்பின் கொழும்பு வருகை பற்றி "இன்று சிறிலங்கா வரும் ஜெனரல் முஷாரப் சிறிலங்காவின் உண்மையான நண்பர் மாத்திரமல்ல, சிறிலங்காவின் இருண்ட காலப்பகுதியில் உதவிக்கு வந்தவருமாவார்" என்கிறது. ஏப்பிரல் 2000இல் ஆனையிறவு வீழ்ந்தபின் பல்குழல் எறிகணை செலுத்திகளையும் அவற்றை இயக்கும் பாகிஸ்தான் படையினரையும் அவர் தந்துதவினார் என்று அதே தலையங்கம் நன்றி தெரிவிக்கிறது. இன்றும் பாகிஸ்தான் ஆயுதம் வழங்கிக்கொண்டேயிருக்கிறது. யார் குற்றியும் அரிசி ஆகட்டும், புலிகள் அழிந்தால் போதும் என்பது இந்திய நிலைப்பாடு போலும்.

உலக இராஜதந்திரத்தின் முக்கிய குறிக்கோளாக அமைதி உருவாக்கம் அடையாளம் காணப்படுகின்றது. அமைதி உருவாக்கத்திற்கு பேச்சுவார்த்தைகள் சிறந்த வழிமுறையாக அமைகின்றன. தமிழர் - சிங்களவர் முரண்பாடுகளுக்குத் தீர்வாக குறைந்த பட்சம் எட்டுப் பேச்சுக்கள் வெவ்வேறு காலப்பகுதியில் நடத்தப்பட்டுள்ளன. அவை இலக்கை எட்டாமல் கைவிடப்பட்டுள்ளன. இந்தியப் படைகளின் வெளியேற்றத்துடன் ஆரம்பமாகிய ஜனாதிபதி பிரேமதாசா அரசும் எல்.ரி.ரி.ஈயும் நடத்திய 1989 - 1990 பேச்சுக்கள் இரு தரப்பினரின் அணுகுமுறையை ஆய்வுசெய்ய உதவுகின்றன. எல்.ரி.ரி.ஈ கூடுதல் அதிகாரப் பங்கீட்டையும் நிரந்தர வடக்குக் கிழக்கு இணைப்பையும் கோரியது. அதிகாரப் பங்கீடு செய்யும் யோசனை யாதொன்றும் பிரேமதாசாவிடம் இருக்கவில்லை. இந்த நாட்டில் யாவரும் ஒற்றுமை (CONSENSUS), சமாதானம் (CONCILIATION), விட்டுக்கொடுப்பு (COMPROMISE) என்ற அடிப்படையில் அமைதி காண வேண்டும் என்று அவர் திரும்பத் திரும்பச் சொன்னார். புலிகளின் கோரிக்கையை மிகவும் இலாவகமாகத் தட்டிக் கழித்தார். பேச்சுக்களை அவர் ஒரு இழுத்தடிப்பு உபாயமாகப் பயன்படுத்தியதோடு புலிகளுக்குக் குழிபறிக்கும் நடவடிக்கையையும் மேற்கொண்டார். பேச்சுக்களின் இறுதிக் காலத்தில் புலிப் போராளிகளுக்கு எதிரான சில பாரதூரமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அவர் இராணுவத்திற்கு அனுமதி வழங்கினார். புலிகளை போருக்குச் செல்ல வைப்பது அவருடைய அடிப்படை நோக்கமாக இருந்தது. இலங்கை அமைச்சக ஆலோசகர் பிறாட்மன் வீரக்கோன் இதுபற்றிக் கூறியதை அன்ரன் பாலசிங்கத்தின் போரும் அமைதியும் என்ற நூலில் பார்க்கலாம். "ஐ.பி.கே.எவ் வெளியேறியவுடன் நன்றாக ஓய்வெடுத்து புத்துயிர் பெற்ற சிறிலங்காப் படைகளைக் கொண்டு போராடிக் களைத்த எல்.ரி.ரி.ஈ மீது தாக்குதல் தொடுக்க அவர் திட்டமிட்டார். எல்.ரி.ரி.ஈயை முற்றாக அழித்து, பிரபாகரனை ஒழித்துக்கட்டி வடகிழக்கில் சட்டம் ஒழுங்கு மற்றும் நல்லாட்சியை நிறுவ அவர் திட்டமிட்டார்" (WAR AND PEACE. ANTON BALASINGHAM, FAIRMAX PRESS.UK 2004)



பிரேமதாசாவின் அந்தரங்க நண்பரும் அமைச்சருமான சிறிசேன குரே "பிரேமதாசாவும் நானும்" என்று தலைப்பிட்ட வாழ்க்கை நூலில் தனது நண்பன் இழுத்தடிப்புச் செய்ததற்கு தகுந்த காரணமுண்டு என்கிறார். "பேச்சுக்கள் தொடரட்டும், தமிழ் மக்களை என்பக்கம் இழுப்பதோடு, இராணுவ நடவடிக்கை மூலம் எல்.ரி.ரி.ஈயைத் தனிமைப்படுத்தி அழிக்கமுடியும்" என்று பிரேமதாசா சொல்லியதாக குரே சொல்கிறார். (PREMADASA AND I, OUR STORY. SRISENA COORAY. 2002) அவருடைய திட்டம் வெற்றியளித்தபடியால்தான் அவரைக் கொல்வதற்குப் புலிகள் நிர்ப்பந்திக்கப்பட்டார்கள் என்றும் குரே கூறுகிறார். மிகக் கொடூரமான பொருளாதாரத் தடையையும் யாழ்.குடாவிற்கான போக்குவரத்துத் தடையையும் அமுலாக்கிய பிரேமதாசா அரசு தமிழ்மக்களை எவ்வாறு தம்பக்கம் இழுக்க இயலுமென்று தெரியவில்லை. புலிப்படை என்பது ஈழத் தமிழரின் தேசியப்படை என்பதைச் சிங்கள அரசு எப்போது உணருமோ தெரியவில்லை.

ஜனாதிபதி சந்திரிக்காவின் பொது ஜன ஐக்கிய முன்னணி அரசும் எல்.ரி.ரி.ஈயும் யாழ்ப்பாணத்தில் நடத்திய 1994 - 1995 பேச்சுக்கள் பிரேமதாசாவுடன் நடத்திய பேச்சுக்களின் மறுவடிவமாக இடம்பெற்றன. முதலாவதாக அரசு இழுத்தடிப்பில் முனைப்பாக இருந்தது. அடுத்ததாக எல்.ரி.ரி.ஈயை அவமதிக்கும் விதத்தில் அதிகாரபூர்வமாகப் பேசும் திறணற்ற கடைநிலை அதிகாரிகளைப் பேச்சு மேசைக்கு அனுப்பியது. இயல்பு வாழ்க்கைக்கான நடவடிக்கைகளையும் பொருளாதாரத்தடை நீக்கத்தையும் கொண்டு வரும்படி புலிகள் கேட்டபோது முதலில் அரசியல்தீர்வு பற்றிப் பேசுவோம் என்று அரசு கூறியது. கேட்டதைத் தரமுடியாது என்று சொல்வதற்குப் பதிலாக அரசியல்தீர்வு பற்றி முதலில் பேசுவோம் என்று அரசு அடம் பிடித்தது. யாழ்.குடாநாட்டின் மீது வரலாறு காணாத மிகப்பெரிய இராணுவத் தாக்குதலுக்கு வேண்டிய தயார்படுத்தல்களைச் செய்தபடி சிங்கள அரசு புலிகளுடன் பேச்சு நடத்தியது. எதைக் கேட்டாலும் கொழும்புக்குப் போய் விடை அனுப்புகிறோம் என்ற தீர்மானம் எடுக்கும் திறணற்றோருடன் பேசுவதில் என்ன பயன். அத்தோடு 'சேலைகட்டிய பிரேமதாசா' என்று வர்ணிக்கப்பட்ட சந்திரிக்கா தனது மாமன் ரத்வத்தை தலைமையில் 40,000 பேரைக்கொண்ட ஒரு பெரும் படையை பலாலித் தளத்தில் நிறுத்தியிருந்தார். கடிதப் பரிமாற்றம் என்ற வினோதமான இராஜதந்திர நடைமுறை 1994 பேச்சுக்களில் முன்னெடுக்கப்பட்டது. லக்ஷ்மன் கதிர்காமர் என்பவர் அப்போது வெளிவிவகார அமைச்சராகவும் சந்திரிக்காவின் ஆலோசகராகவும் பதவி வகித்தார். அவருடைய போதனைப்படி வெளிநாட்டு நிதி உதவிகளையும், ஆயுதங்களையும் இலகுவாகப் பெறும் ஒரு உபாயமாகவே இப்பேச்சுவார்த்தைகள் பயன்படுத்தப்பட்டன. பேச்சுக்களின் ஒரு கட்டத்தில் தீர்வுப்பொதி ஒன்றை ஒருதலைப் பட்சமாக சந்திரிக்கா முன்வைத்தார். புலிகள் அதை நிராகரிப்பார்கள் என்று அவருக்கும் அவருடைய ஆலோசகருக்கும் தெரியும். புலிகளை ஏற்கும்படி நிர்ப்பந்திப்பதற்காக உலகம் முன்பு கேள்விப்படாத 'சமாதானத்திற்கான போரை' அவர் தொடங்கினார். 1989இல் நடந்த பேச்சுக்களைப்போல் 1994 பேச்சுக்களும் போருக்கு முன்னோடியாக அமைந்தன.

அமைதிக்கான இப்போதைய முயற்சி நோர்வே நாட்டின் அனுசரணையுடன் பெப்பிரவரி 22. 2002இல் தொடங்கியது. மூன்றுவருடமும் ஆறுசுற்றுப் பேச்சுக்களும் முடிவுற்ற நிலையில் நாம் பெற்ற பயன் பூச்சியமாக இருக்கிறது. வழக்கம்போல் 'புலிகள் பலமடைகிறார்கள், போருக்குத் தயாராகிறார்கள்' என்ற குரல் தெற்கில் இருந்து கேட்கிறது. போராளிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. அரசியல்பணி செய்யும் போராளிகள் மீதும் அவர்களுடைய பணிமனைகள் மீதும் சீருடை தரித்தோர் தாக்குதல் நடத்துகின்றனர். இதனால் அரசியல் போராளிகள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து விலகிவிட்டனர். புலிகளின் இடைக்கால நிர்வாக அலகு யோசனைகள் தீண்டுவாரற்றுக் கிடக்கின்றன. சமாதானம் பின்நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளது. மக்களுக்கு இயல்பு வாழ்வைத்தரும் நோக்குடன் உருவாக்கப்பட்ட 2002ஆம் ஆண்டின் அமைதியுடன் இயல்பு வாழ்வை உருவாக்குவதற்கு முயற்சி மேற்கொள்ளவில்லை. 190 சதுர கிலோமீற்றர் பரப்பளவை யாழ்.தீபகற்பத்தில் நிலைகொண்டுள்ள சிங்கள இராணும் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தனது பிடியில் வைத்திருக்கிறது. யாழ். தீபகற்பத்தின் முழுத் தரைப்பரப்பில் இது 15% என்று மதிப்பிடப்படுகிறது. யாழ். தீபகற்பத்தில் இன்று 19 அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் காணப்படுகின்றன. பலாலி, காங்கேசன்துறை, மைலிட்டி, தெல்லிப்பளை, கீரிமலை ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நலன்புரி நிலையங்களிலும் பிற வாழ்விடங்களிலும் வாழ்கின்றனர். பயிர்ச் செய்கைக்கு மிகவும் உகந்த செம்மண் நிலங்கள் மேற்கூறிய வலிகாமம் - வடக்குக் கிராமங்களில் காணப்படுகின்றன.

இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்களால் 320 ஹெக்ரேயர் நெற்செய்கை நிலங்களும், 1007 ஹெக்ரேயர் உபபயிர்களுக்கான நிலங்களும், 196 ஹெக்ரேயர் பனை நிலங்களும், 20 ஹெக்ரேயர் தென்னந் தோட்டங்களும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. தென்மராட்சி, சாவகச்சேரி பிரதேசத்தில் 2500 ஹெக்ரேயர் நெற்செய்கை நிலங்கள் இராணுவ உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அகப்பட்டுள்ளது. கண்ணிவெடி அகற்றப்படாத காரணத்தால் இன்னுமொரு 300 ஹெக்ரேயர் நிலம் நெற்செய்கைக்கு உட்படாமல் கிடக்கிறது. கைதடியில் பயிர்ச்செய்கைக்கு 1000 ஹெக்ரேயர் நிலத்தை இராணுவம் விட்டுக் கொடுத்தது. ஆனால் இதில் மூன்றிலொரு பங்கு நிலம் கண்ணிவெடி அகற்றப்படாமல் கிடக்கிறது. பெருமளவான பள்ளிக்கூடங்களும், தொழிற்சாலைகளும் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் முடங்கிக் கிடக்கின்றன. மீன்பிடியை கடற்படையும் இராணுவமும் கூட்டாக தடுத்தும் பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்தும் முடக்கியுள்ளன. குழு மோதல்களையும், சமுதாயச் சீர்கேடுகளையும் படையினர் ஊக்குவிக்கின்றனர்.

ஆயுதப்போர் நடத்தாமல் எதிரியை வீழ்த்தும் தந்திரோபாயங்களை சன்சூவின் போர்க்கலை நூல் விவரிக்கின்றது. எதிரியின் மனோதிடத்தை உடைப்பது மூலம் பெரும் வெற்றியைக் காணலாம். இதற்கு எதிரி பற்றிய பல அவதூறுகளை இடைவிடாமல் மக்கள் மத்தியில் பரப்பவேண்டும். சிறிலங்கா அரசு தனது தேசிய வானொலியின் ஒரு பகுதியை புலிகளை மிகவும் கீழ்த்தரமாக விமர்சிப்பதற்காக ஒதுக்கியுள்ளது. இது அப்பட்டமான யுத்தநிறுத்த மீறல் மாத்திரமல்ல, புலிகளோடு போரிடாமல் புலிகளை நலிவுறச்செய்யும் பெருந்தந்திரத்தின் அங்கமாகவும் அமைகிறது. இந்த நோக்கில் குழு மோதல்களையும் அரசு ஊக்குவிக்கின்றது. 'நேரடியாகத் தாக்குவதைவிட, அறிவுபூர்வமாக எதிரியைப் பலவீனப்படுத்துவதுதான் உண்மையான வெற்றி' என்று கௌடில்யரின் அர்த்த சாஸ்த்திரம் கூறுகிறது. எதிரிகளை அழிக்க எந்த வழிமுறைகளையும் கையாளலாம் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது. இக் கண்ணோட்டத்தில் பார்த்தால் போர் பிரகடனம் செய்யப்படாவிட்டாலும் எம்மீதான போரை சிறிலங்கா அரசு ஏற்கனவே தொடுத்துவிட்டது என்பதுதான் உண்மை. ●

*வழக்கம்போல 'புலிகள் பலமடைகிறார்கள், போருக்குத் தயாராகிறார்கள்' என்ற குரல் தெற்கில் இருந்து கேட்கிறது. போராளிகளுக்கு எதிரான தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளன. அரசியல்பணி செய்யும் போராளிகள் மீதும் அவர்களுடைய பணிமனைகள் மீதும் சீருடை தரித்தோர் தாக்குதல் நடத்துகின்றனர். இதனால் அரசியல் போராளிகள் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இருந்து விலகிவிட்டனர். புலிகளின் இடைக்கால நிர்வாக அலகு யோசனைகள் தீண்டுவாரற்றுக் கிடக்கின்றன. சமாதானம் பின்நோக்கிச் செல்ல ஆரம்பித்துள்ளது.*



# உயிர் துடிக்கும் கணங்கள்

**யாழ்** குடாநாடு பகைவனால் ஆக்கிரமிக்கப்பட்டுவிட்டது. திறந்தவெளிச் சிறைச்சாலையாக சில நூறாயிரம் மக்கள் பலவாயிரம் இராணுவத்தினரால் முற்றுகையிடப்பட்டுள்ளனர். சிறைச்சாலையின் தடுப்புச் சுவர்கள்போல் உருவாக்கப்பட்டுள்ள தொடர் காவலரண்களினாலும் மண் அணைகளினாலும் அப்பிரதேசம் துண்டாடப்பட்டுள்ளது. பொட்டல் வெளிகளில் காணப்படும் சிறு பற்றைக்காடுகளையும், சதுப்பு நிலங்களில் வளரும் கண்டல் தாவரங்களையும் வெட்டைவெளி முடிவில் அடர்ந்திருக்கும் பனை வடலிகளையும், மறைவிடங்களாக்கி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் புலிவீரர்கள். தமிழர் தலைநிமிர்விற்கு ஏதுவாக இருந்த பூமி, ஏளனத் திமிருடன் பகை உலாவரும் இடமானது. பகைவன் நித்திரையைக் குலைக்கவும் நிம்மதியைச் சிதைக்கவும் வல்ல தாக்குதல்களைப் புலிகள் நடத்துகின்றனர்.

1996ஆம் ஆண்டு மாவீரர் தினம் அண்மித்துக்கொண்டிருந்தது. பகைசூழ்ந்த பிரதேசமொன்றினுள் போராளிகள் அணியொன்று தங்கியுள்ளது. அதனால் அது ஒப்பீட்டளவில் பாதுகாப்பான இடத்திற்கு வரவேண்டும். அவ்வேளை சில காவலரண்களை தாக்கியழிக்கத் திட்டமிடப்படுகின்றது. அவர்கள் தாக்குதல் திறனை அதிகரிக்க இன்னோர் அணியினர் உள்நுழைந்து இணையவேண்டியுள்ளது. வெளியிருந்து போலித்தாக்குதல் நடாத்தப்பட்டு பகைவன் திசை திருப்பப்படுவான். அவ்வேளை உட்புறமிருந்து காவலரண்களின் பின்புறமாக அதிரடித்தாக்குதல் நடாத்தப்படும். பகை கொன்று ஆயுதங்களைக் கைப்பற்றி, காவலரண்களை அழித்து வெளியேறி வெளிநிற்கும் அணியுடன் இணைந்து பின்வாங்குதல் வேண்டும். பல மைல் தொலைவில் இருந்து தீட்டப்பட்ட திட்டம் உள்நிற்கும் அணிக்கும் உரியமுறையில் தெரியப்படுத்தப்படுவிட்டது. இப்பொழுது உள்நுழையும் அணியுடன் போராளி மருத்துவன் மலரவன் இணைந்துகொள்கின்றான். இரவிரவாக நகர்ந்தவர்கள் பகற்பொழுதில் வெட்டையொன்றின் சிறு பற்றைக்குள் உருமறைத்துக் கொள்கிறார்கள். ஏதேட்சையாக அங்குவந்த இராணுவத்தினரால் அப்பகுதி மேலெழுந்தவாரியான தேடுதலுக்கு உட்படுத்தப்படுகின்றது. உருமறைந்திருந்தவர்கள் நீரும் உணவும் தவிர்த்து சிறு அசைவும் காட்டாமல் தற்காத்துக் கொள்கின்றார்கள். தகுந்த நேரம் வந்தவுடன் வெளிவந்து முட்கம்பி வேலியும் மண் அரணும் கடந்து குறித்த அணியினருடன் இணைந்துகொள்கின்றார்கள்.

திட்டமிட்டவாறு தாக்குதல் நடத்தி மீண்டும் வெளியேறவேண்டும்.

மீண்டும் பகைவன் காவலரண்கள் நோக்கி பின்புறமாக நகர்கின்றார்கள். மருத்துவர் மலரவன் முட்கம்பி வேலியொட்டி நிற்கும் மரமொன்றில் நிலையெடுத்துக் கொள்கின்றான். முற்குறித்தவாறு சக அணியினர் முன்பக்கமாக தாக்குதல் தொடங்கவேண்டும். துரதிஸ்டவசமாக அவர்கள் வந்துசேர முன்னரே தாக்குதல் ஆரம்பித்துவிட்டது. அப்பொழுது மலரவனின் இடது தோள்பட்டையை ரவையொன்று பதம் பார்க்கின்றது. சில அடிகள் பின்னால் தூக்கி எறியப்பட்டான். எழுந்து மறுகையால் தடவிப்பார்க்கின்றான். குபுகுபுவென இரத்தம் பாய்கிறது. வலதுகையால் இடதுகை நாடித்துடிப்பை உறுதிப்படுத்திக் கொள்கிறான். கையின் இருப்பை அச்சுறுத்தும் காயம் இல்லை என்பதால் திருத்திப்பட்டுக் கொள்கிறான். இவனால் இரத்தப் பெருக்கை நிறுத்த கட்டுப்போட முடியாது. தளபதிக்கு நிலைமையை அறிவிக்கின்றான். பின்னர் மருத்துவப் பையையும் தூக்கிக்கொண்டு நகர்கின்றான். தணலாய் பாயும் ரவைகளையும் சிறு பீரங்கித் துண்டுகளையும் அலட்சியம் செய்தவண்ணம், முட்கம்பியூடு புகுந்து மண் அரண் ஏறி மறுபக்கம் இறங்குகிறான். தலை சுற்றுவதுபோல் இருக்கின்றது. காவலரண்களுக்கு இடைப்பட்ட மண் அரணின்கீழ் இருக்க முயற்சிக்கின்றான். காலில் ஏதோ தட்டுப்பட தடவிப் பார்க்கின்றான். அது RPG எறிகணை செலுத்தியென அடையாளம் காண்கின்றான். இவ்விடத்தில் இருப்பதோ, மயங்குவதோ உசிதமானதல்ல என முடிவெடுக்கின்றான். மெல்ல RPGயையும் எடுத்துக்கொண்டு, உள்ள பலமெல்லாம் திரட்டி முன்னோக்கி நகர்கின்றான்.



**குருதியிழப்புக்கு திரவ ஊடகம் மட்டுமே மாற்றீடாக ஏற்றப்பட்டு சிகிச்சை தொடர்கின்றது. வெட்டுக்காயத்தில் இருந்து வெளியேறும் குருதி தனது பாகுநிலைத் தன்மையை இழந்து திரவத்தன்மையை அதிகம் வெளிக்காட்டுகின்றது. இதுவொரு ஆபத்தான நிலை. குருதி அமுக்கம் அளக்க வசதியில்லை. நாடித்துடிப்பையும் உணர முயவில்லையென மலரவன் குறிப்பிடுகின்றான். அமுதனும் முரளியும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர்.**

– தூயவன் –

முதலில் தாக்குதல் நடாத்தவேண்டிய அணியினருடன் தொடர்பெடுத்து இணைந்துகொள்கிறான். அவ்வணியில் வந்த போராளி மருத்துவன் அமுதனால் முதலுதவி செய்யப்படுகின்றது. தாக்குதல் முடிவிற்கு வருகையில் இருவர் வீரச்சாவடைந்துவிட்டனர். பதினெட்டுப் போராளிகள் பாரிய, சிறிய காயங்களுக்கு உள்ளாகியிருந்தனர். பொழுது விடிந்தால் சுற்றிவளைக்கும் பகைவனால் பலர் அழிக்கப்படுவர். அதனால் இரவோடு இரவாகவே பலமைல்கள் பின்வாங்குகின்றார்கள்.

காயமடைந்தவர்களை வன்னித்தளம் அனுப்பவேண்டும். சில நாட்களிற்கு அது சாத்தியமற்றது. உள்ளே வைத்து சிகிச்சையளிப்பது என முடிவெடுக்கப்படுகின்றது. அவசர தேவைக்கென சதுப்புநில கண்டல் மரங்களுக்கு இடையில் அமைக்கப்பட்ட பரண்களில் ஒளிந்துகொள்கின்றார்கள். கீழே சதுப்புநிலம் மேலே சில அடிகள் உயரத்திற்கு கண்டல் பற்றை மரங்கள். ஆள் நிமிர்ந்து நிற்கமுடியாத அளவு பதிவான கொட்டில், துருப்பிடித்த தகரத்திலே தளம் அமைக்கப்பட்டுள்ளது. முதலுதவிச் சிகிச்சை மட்டும் அளிக்கப்பட்ட காயக்காரர்கள் சூழ்ந்திருக்கின்றார்கள். காயமடைந்த மலரவனுடன் அமுதனும் முரளியும் என்ன செய்வதென ஆலோசனை கலக்கின்றனர். ஒரு போராளிக்கு வயிற்றில் ஊடுருவல் காயம். உள்ளே குருதி பெருகுவதற்கான அறிகுறி தென்படுகின்றது. அவனுக்கு வயிற்றைத் திறந்து (laprotomy) சத்திரசிகிச்சை செய்யவேண்டும். அது இவ்விடத்தில் சாத்தியமற்றது. எனவே மரபுரீதியான சிகிச்சையை (concervative mangment) வன்னிக்கு அனுப்பும்வரை செய்யவேண்டியதுதான். இன்னொருவனுக்கு முழங்கால் சிதைந்துவிட்டது. அவனுக்கு தொடையுடன் காலை வெட்டியகற்றினால்தான் உயிர் தக்கவைக்கலாம். ஆனால் குருதிப்பிரிவு சோதிக்கும் கருவிகள் குருதி அமுக்கம் அளக்கும் கருவிகள் எதுவும் கைவசம் இல்லை. சத்திரசிகிச்சைக்கான ஏனைய உபகரணங்கள் வெளியில் பதுக்கிவைத்திருந்த இடங்களிலிருந்து எடுத்துவர ஆட்கள் சென்றிருந்தனர். மலரவனுக்கு மயக்கமருந்து கொடுத்து சிகிச்சை செய்தால் அவனது பணி தடைப்பட்டுப் போய்விடும். ஆகவே அதனைக் கைவிட்டு மூவரும் இணைந்து ஏனையவர்களுக்கு சிகிச்சையைத் தொடர முடிவெடுக்கின்றனர்.

சிதைந்த காலை வெட்டியகற்றும் சத்திரசிகிச்சையைத்தான் முதலில் செய்யவேண்டும். மிகமிகக் குறைந்த இரத்த இழப்புடன் சத்திரசிகிச்சையினை முடிக்கவேண்டும். அப்பொழுதுதான் அப்போராளி உயிர் தப்புவதற்குச் சாத்தியங்கள் அதிகமாகும். மலரவன் ஒருகையால் மயக்கமருந்து கொடுக்கிறான். ஏனைய இருவரும் சிதைந்த காலை அகற்றத் தொடங்குகின்றனர். அப்பொழுது வயிற்றுக்காயப் போராளி மூச்சு விடமுடியாமல் திணறிக் கத்துகின்றான். நிலைமையை அவதானித்த முரளி அவனருகில் சென்று பரிசோதிக்கின்றான். பிறகு 50ml 'சிறிஞ்சை' எடுத்து அவன் வயிற்றில் குத்தி உட்பெருகியிருந்த குருதியை எடுத்து வெளியில் விடுகின்றான். அவ்வாறு சிலமுறை செய்ய அவனுக்கு மூச்சுவிடுவதில் சிரமம் குறைகின்றது. மீண்டும் வந்து கால் சத்திரசிகிச்சையை அமுதனுடன் சேர்ந்து தொடர்கின்றான். குருதியிழப்புக்கு திரவ ஊடகம் மட்டுமே மாற்றீடாக ஏற்றப்பட்டு சிகிச்சை தொடர்கின்றது. வெட்டுக்காயத்தில் இருந்து வெளியேறும் குருதி தனது பாகுநிலைத் தன்மையை இழந்து திரவத்தன்மையை அதிகம் வெளிக்காட்டுகின்றது. இதுவொரு ஆபத்தான நிலை. குருதி அமுக்கம் அளக்க வசதியில்லை. நாடித்துடிப்பையும் உணர முயவில்லையென மலரவன் குறிப்பிடுகின்றான். அமுதனும் முரளியும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர்.

யோசிப்பதற்கு எதுவும் இல்லை. ஒருங்கூட்டல் பரிசோதனை செய்யாமலே குருதி மாற்றீட்டை ஒருமுறை செய்வது என முடிவெடுக்கின்றனர். அமுதனிடம் இருந்து குருதி பெறப்பட்டு சத்திரசிகிச்சை செய்யப்பட்டவனுக்கு ஏற்றப்படுகின்றது. அவனது உடல் நிலையில் முன்னேற்றம் தென்படுகின்றது. அப்பொழுது வயிற்றுக்காயப் போராளி முரளியை அழைத்து தனது வயிற்றினுள் நிரம்பும் குருதியை மீண்டும் குத்தி வெளியில் விடச்சொல்கின்றான். இவனும் மீண்டும் அவ்வாறே செய்ய அவனுக்கும் சுகமாக இருக்கின்றது. காலிற்கான சத்திரசிகிச்சையை முடிவுக்குக் கொண்டுவர முயற்சிக்கின்றனர். அப்பொழுது தலையில் காயப்பட்ட போராளி ஒருவனின் மனநிலை குழம்பிவிட்டது. அவன் அங்கும் இங்கும் ஓடித்திரிய ஆரம்பித்துவிட்டான். ஏனையவர்களுக்கு ஏறிக்கொண்டிருந்த திரவ ஊடக 'ரியூப்களை' இழுத்து தொல்லை கொடுக்கின்றான். தொங்குபறியில் சதுப்பு நிலத்தில் நிற்கும் அவர்களின் கொட்டிலும் ஆடத்தொடங்கிவிட்டது. உடனடியாக அவனுக்கு தளர்விக்கும் ஊசிமருந்து ஏற்றப்படுகின்றது. பின்பு மற்றையவனுக்கு கால் துண்டிக்கப்படும் சத்திரசிகிச்சை வெற்றிகரமாக செய்து முடிக்கப்படுகின்றது. இரண்டாம் நாள் அனைத்துக் காயக்காரர்களும் கட்டுமரங்களின் உதவியுடன் வன்னிக்கு நகர்த்தப்படுகின்றார்கள். மருத்துவப் பலம் குறையாது இருப்பதற்காக மலரவன் தொடர்ந்தும் உள்ளே நின்று பணி தொடர்வதென முடிவெடுக்கப்படுகின்றது.

நெருக்கடியான அந்த களமருத்துவப்பணி முடிந்த திருப்தியுடன் ஏனைய மருத்துவப் போராளிகள் அணியினருடன் தளம் திரும்புகின்றனர். •

**24.09.2005** அன்றைய நாளின் காலைப்பொழுது. லெப்.கேணல் நவம் அறிவுக் கூடத்தில் தேசியக்கொடி அரைக்கம்பத்தில் பறந்துகொண்டிருந்தது. மனதில் தயக்கம். யாருக்கு என்ன நடந்தது? போராளிகளின் முகங்கள் இருண்டு கிடந்தன. சுட்டா அப்பா வீரச்சாவாம். அந்த வார்த்தைகள் உள்நுழையும் முன்னரே அடுத்து எதுவும் செய்யத் தோன்றவில்லை. அப்பாவைப் பிரிந்த பிள்ளைகளைப்போல எல்லோரும் தவித்துப்போனோம். ஏனென்றால் எங்களுக்கெல்லாம் அப்பாவாகவே அவன் இருந்தான். அந்த நினைவுகளைத்தான் இந்தக் குறிப்பு சொல்ல முனைகின்றது.

சுட்டாவின் ஆரம்பகால வாழ்க்கையே சோகமானது. திருகோணமலை சாம்பல்தீவிலே அவனது குடும்பம் வாழ்ந்துவந்தது. அது சிங்களம் எங்கள் பிரதேசங்களை ஆக்கிரமித்த காலம். இராணுவத்தால் தமிழ் உயிர்கள் காரணமில்லாமல் சித்திரவதை செய்து பறிக்கப்பட்ட காலம். இந்த கொடூரத்திற்குள் சுட்டாவின் மூத்த சகோதரனும் பலியாக நேர்ந்தது. சுட்டாவிற்கு மூன்று பெண் சகோதரிகளும் ஒரு தம்பியும் இருந்தனர். தந்தையின் உழைப்பில் இயங்கியது குடும்பம். கொஞ்ச நாளில் தந்தையும் வாகன விபத்தொன்றில் காயமடைந்து வேலைசெய்ய முடியாமற்போக குடும்பத்தைத் தாங்கும் பொறுப்பு சுட்டாவிற்கு. சின்ன வயதிலேயே தச்சுத்தொழில் பழகி குடும்பத்தை பராமரித்தான் சுட்டா.

# அவன் ஒரு புதுமையான மனிதன்



## லெப்.கேணல் பிறையாளன் / சுட்டா

**கயசின் போல் சில்வஸ்ரார்**
**சாம்பல்தீவு, திருகோணமலை**

**தாயின் மடியில் 12.09.1969**
**தாயக மண்ணில் 24.09.2005**

**- ச.புரட்சிமாறன் -**

இந்த நாட்களில்தான் சுட்டா திருகோணமலையிலிருந்து வேலையின் நிமிர்த்தம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தான். அவனுக்கு தையல் வேலையிலும் நாட்டமிருந்தது. இதனால் இம்ரான் பாண்டியன் படையணியின் தையல் பகுதியில் அவனுக்கு வேலை செய்ய சந்தர்ப்பம் கிடைக்க அதை ஏற்றுக்கொண்டு ஒரு தையலாளனாகச் செயற்பட்டான். இந்த வேலையின் போது சுட்டாவிற்கு பல போராளிகளின் அறிமுகம் கிடைத்தது. நாளடைவில் இந்தத் தேசவிடுதலைப் போராட்டத்தில் தானும் ஒரு போராளியாக வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு 1992இல் இயக்கத்தில் தன்னை இணைத்துக்கொண்டான் சுட்டா.

சரத்பாபு–7 என்ற பயிற்சி அணியில் பயிற்சி பெற்ற சுட்டா ஒரு விடுதலைப்போராளி ஆகியபோது தையல்பணியில் அவனிற்கிருந்த திறமையின் நிமித்தம் இம்ரான் பாண்டியன் தையல்கூடப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான். இயக்கத்தின் கட்டளையை ஏற்றுச் செயற்பட்ட சுட்டா, பயிற்சிபெற்ற பின்பும் ஏனைய போராளிகளைப்போல் சண்டைக்களம் காண வேண்டும் என்ற ஆவல் ஏற்பட்டு படையணியில் சிறப்புத் தளபதியின் அனுமதியுடன் சண்டைக் களங்களுக்கு புறப்பட்டான்.

1993இல் தவளை நடவடிக்கை, 1995இல் புலிப்பாய்ச்சல், 1996இல் ஓயாத அலைகள் – 01 நடவடிக்கை, அளம்பிலில் தரையிறங்கிய இராணுவத்துக்கெதிரான நடவடிக்கை, சத்ஜெய இராணுவ நடவடிக்கைக்கெதிரான தாக்குதல் என படிப்படியாக பல களங்களையும் கண்டு சண்டைகளிலும் ஒரு தேர்ச்சியாளனாக சுட்டா மாறியிருந்தான். இதற்குச் சாட்சிகளாக பல விழுப்புண்களை தன் உடலில் தாங்கியிருந்தான். அதன் தழும்புகள் அவன் உடலெங்கும் இருந்தன.

இந்த காலகட்டத்தில்தான் சிங்களதேசம் எங்கள் பிரதேசத்தின் மீது பாரிய படை நகர்வுக்கு தயார்ப்படுத்திக் கொண்டிருந்தது. இந்தப் படைநகர்விற்கு கவசப் படைக்கலங்களையே பெரிதும் நம்பி திட்டம் வகுக்கப்பட்டுக் கொண்டிருந்தது. சமகாலத்தில் சிங்களத்தின் இந்த சூழ்ச்சிகரமான திட்டங்களை முறியடிக்க எமது தலைவரும் போராளிகளைத் தயார்ப்படுத்தினார். சிங்களம் பெரிதும் நம்பிய கவசங்களை தகர்த்தழிக்கவென புதிய படையணி ஒன்றை உருவாக்கி அதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டன. பயிற்சிகள் மிகக் கடுமையானவையாக இருந்தன. ஆயுதங்களுடன் நீண்டதூர ஓட்டம், தடை தாண்டும் பயிற்சிகள், மதியவேளையில் கொழுத்தும் வெயிலில் உடற்பயிற்சி என எல்லா கடின பயிற்சிகளையும் சுட்டா மேற்கொண்டான். ஏற்கனவே சண்டைக் களங்களில் விழும்புண் தாங்கிய உடல். இதனால் பயிற்சிகளைச் செய்ய சிரமமாக இருந்தபோதும் இனிவரும் சமர்களில் தானும் ஆயுதமேந்தி சமர்புரியவேண்டும் என்ற உந்துதல் அவன் இந்தப் பயிற்சிகளில் சித்தியடையக் காரணமாய் இருந்தது.

எல்லாப் பயிற்சிகளும் முடிந்து லெப்.கேணல் விக்ரர் சிறப்புக் கவச எதிர்ப்பு அணி என்ற பெயரில் எதிரியின் கவசப்படையை எதிர்கொள்ளும் அணி தயாராகவிருந்தது. வவுனியா, ஓமந்தைப் பகுதிகளில் அமைந்திருந்த எங்களின் தடுப்பரண் பகுதிகளுக்குச் சென்று அணிகள் நிலைகொண்டன. இவற்றில் ஒரு அணிக்குப் பொறுப்பாக சுட்டாவும் களமிறங்கினான். எதிரியின் வருகைக்காகக் காத்திருந்ததோடு எதிரியின் முன்னரங்க நிலைகள் அவதானிக்கப்பட்டு எதிரியின் காவலரண் ஒன்றை R.P.G எறிகணைமூலம் தாக்கி அழிப்பதென முடிவு செய்யப்பட்டது.

*08.03.1997* அன்றைய நாளின் பகற்பொழுதில், சுட்டாவின் தலைமையிலான அணி வேவு வீரரின் வழிகாட்டலுடன் எதிரியின் காவலரணை அண்மித்து நிலைகொள்கிறது. R.P.G எறிகணைகள் அனலைக் கக்கியபடி எதிரியின் காப்பரணை நோக்கிச்சென்று மோதி வெடிக்கிறது. அடுத்தடுத்த இரு எறிகணைகள் வெடித்துச்சிதறி அடங்க, அந்தக் காப்பரண் முற்றாக அழிந்துபோய்க் கிடந்தது. போராளிகள் அவ்விடத்திலிருந்து பின்வாங்கினர். ஏழு இராணுவத்தினர் பலியாகியும் சில இராணுவத்தினர் காயமடைந்ததுமான இத்தாக்குதலில் எமது தரப்பில் சேதம் எதுவுமிருக்கவில்லை. புதிய அணியின் உருவாக்கத்தின் முதலாவது தாக்குதல் சுட்டாவின் தலைமையில் வெற்றிகரமாக நடந்தேறியது.

*13.05.1997* அன்று எதிர்பார்த்தபடி "ஜெய சிக்குறு" என்ற பெயரில் பாரிய படைநகர்வை ஆரம்பித்தது சிங்கள இராணுவம். பெரும் மோதல் வெடித்தது. அந்த ஊரெங்கும் போர்ச்சத்தம் கேட்டுக்கொண்டிருந்தது. இராணுவம் முன்னேற முன்னேற போராளிகள் புதிய புதிய வியூகங்களில் எதிரியை எதிர்கொண்டு சண்டையிட்டனர். முன்னேறிவந்த கவசவாகனங்கள் விசேட அணியால் தாக்கி அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் இருந்தன. சண்டை நீண்ட நாட்களாகத் தொடர்ந்தது. ஓமந்தை, தாண்டிக்குளம், இறம்பைக்குளம், பெரியமடு, புளியங்குளம் என சமர்க்களம் விரிந்துகொண்டு சென்றது. இந்த நீண்ட சமர்களுக்குள் போராளிகளுக்கு ஓய்வு கிடைப்பதென்பது மிகக் குறைவாகவே இருந்தது. கிடைக்கும் ஓய்விலும் எதைச்செய்வது? சுட்டாவைப் பொறுத்தவரை போராளிகள் எப்போதும் சந்தோஷமாகவே இருக்கவேண்டும். அவர்களின் மகிழ்ச்சிக்காக எதைச் செய்யவும் அவன் தயாராகவே இருப்பான். கிடைக்கும் நேரங்களில் தனது அணியிலுள்ள போராளிகளுக்குக் கதை சொல்லுவான். பழைய சண்டைகளை எடுத்துச்சொல்லி போராளிகளுக்கு அறிவூட்டுவான். போராளிகளுக்கு கிடைப்பவற்றைக் கொண்டு ஏதாவது சாப்பிடச் செய்துகொடுக்க முடியுமானால் அதையும் தானே நின்று செய்துகொடுப்பான். அவன் எதைக் கதைத்தாலும் அதில் நகைச்சுவை இருக்கும், நல்ல அறிவுரையிருக்கும். அதுமட்டுமல்ல போராளிகளுக்கு எதையாவது பெற்றுக்கொடுக்க வேண்டியிருந்தால் யாருடனாவது கதைத்து அவற்றை பெற்றுக்கொடுப்பான். சுட்டாவுடன் இருந்தால் தாங்கள் சண்டைக்களத்தில் நிற்கிறோம் என்ற உணர்வு கொஞ்சநேரம் மறந்துபோகும். அவன் வார்த்தைகள் உடலுக்கும் மனதுக்கும் உற்சாகமூட்டுபவையாக இருக்கும். இதனால் சுட்டா இருக்கும் காப்பரண் தேடி போராளிகள் ஒன்றுகூடுவார்கள்.

**அவன் முகாமில் நிற்கும் நாட்களில்கூட அப்படித்தான். சுட்டாவின் விடுதி எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். பக்கத்து விடுதியில் உள்ள போராளிகள்கூட அவனுடன் இருப்பார்கள்.**
**சுட்டாவின் இந்தத் திறமையை யாராலும் மிஞ்சிவிட முடியாது.**
**அது அவனுக்கே உரியது. இனி போராளிகளுக்கு சுவையான சாப்பாடு செய்து கொடுப்பதில் சுட்டா முன்னணியில் நிற்பான். இவற்றோடு மற்றப் போராளிகள் எடுக்கும் அத்தனை பயிற்சிக்கும் தானும் செல்வான்.**
**இரவு பயிற்சிகள் முடிந்து போராளிகள் படுக்கைக்குப் போவார்கள்.**
**சுட்டாவின் விடுதியில் மட்டும் வெளிச்சம் தெரியும்.**

அவன் முகாமில் நிற்கும் நாட்களில்கூட அப்படித்தான். சுட்டாவின் விடுதி எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். பக்கத்து விடுதியில் உள்ள போராளிகள்கூட அவனுடன் இருப்பார்கள். சுட்டாவின் இந்தத் திறமையை யாராலும் மிஞ்சிவிட முடியாது. அது அவனுக்கே உரியது. இனி போராளிகளுக்கு சுவையான சாப்பாடு செய்து கொடுப்பதில் சுட்டா முன்னணியில் நிற்பான். இவற்றோடு மற்றப் போராளிகள் எடுக்கும் அத்தனை பயிற்சிக்கும் தானும் செல்வான். இரவு பயிற்சிகள் முடிந்து போராளிகள் படுக்கைக்குப் போவார்கள். சுட்டாவின் விடுதியில் மட்டும் வெளிச்சம் தெரியும். சுட்டாவிற்கு நன்றாக தைக்கத் தெரியும் என்பதால் போராளிகள் சுட்டாவை சூழ்ந்துகொள்வார்கள். அந்தவேளையில் அவர்கள் சுட்டாவை பொறுப்பாளனாகப் பார்ப்பதில்லை. சுட்டாவும் அப்படித்தான். தனக்கேன் இந்தவேலை என ஒதுங்கிக்கொள்வதுமில்லை. முழு மனதோடு ஆசையாக கண் தூங்கத் தூங்க விழித்திருந்து ஆயுதங்களுக்கான 'கோல்சர்கள்' தைத்துக் கொடுப்பான். போராளிகளுக்கு இதற்கென தனியிடமிருந்தாலும் சுட்டாவின் தையலில் அவர்களுக்கு விருப்பம்.

சண்டைக் களத்திலிருந்து சுட்டா முகாம் திரும்பிவிட்டால் அங்கு நிற்கும் பொறுப்பாளரை போராளிகள் கரைச்சல் படுத்துவார்கள். சுட்டா அண்ணை எப்ப வருவார்? சுட்டாண்ண வந்திட்டாராம் என்றால் போராளிகள் மீண்டும் கூடிவிடுவார்கள்.

சுட்டாவின் இந்த அற்புதமான இயல்புதான் சமர்க்களத்தில் நின்ற அவனை ஆரம்ப இராணுவ பயிற்சிக் கல்லூரிக்கு அனுப்ப வழிவகுத்தது. அது புதிதாக போராட்டத்தில் தங்களை இணைத்தவர்கள் பயிற்சிபெறும் இடம். அவர்கள் இந்தத் தேசத்தின் தேவையை உணர்ந்து போராளியானாலும் நீண்டகாலம் குடும்பச் சூழலுக்குள் வாழ்ந்ததால் அந்தப் பிரிவும் புதிய வாழ்க்கை முறையும் ஆரம்பத்தில் மனச் சஞ்சலத்தை ஏற்படுத்தும். இது தவிர்க்க முடியாத ஒன்று. இந்த நாட்களில் இவர்களை வழிநடத்தும் போராளிகள்தான் இதை சரிவரப் புரிந்து செயற்படவேண்டும். சுட்டா இதற்கு மிகவும் பொருத்தமானவன். அவனிற்கு இதைப்பற்றி சொல்லிக் கொடுக்கவேண்டிய தேவையில்லை. அவன் இயல்பே அப்படித்தான். போராளிகளுக்குத் தாய் தந்தையரைப் பிரிந்திருந்த இடைவெளி சுட்டாவினால் இல்லாமல் போனது. சுட்டா போராளிகள் தங்கும் ஒவ்வொரு விடுதியாகச் சென்று போராளிகளுடன் கதைத்து அவர்களின் தேவையைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வான். புதிய போராளிகளுக்கு இயக்கம் பற்றிய பழைய வரலாற்றுச் சம்பவங்களை சொல்லிக் கொடுப்பான். எங்காவது ஒரு விடுதியில் கலகலப்புச் சத்தம் கேட்டால் சுட்டா அங்கேதான் நிற்கிறான் என்பது எல்லோருக்கும் தெரியும்.

இந்த நாட்களில்தான் சுட்டாவிற்கு திருமணம் நடந்தது. ஆனால் சுட்டா வீட்டில் நிற்பது குறைவு. சுட்டாவிடம் குடும்பம் என்ற பாச உணர்வு நிறையவே இருந்தபோதும், அவன் தன் குடும்பமான போராளிகளுடனேயே அதிக நேரத்தை செலவிடுவான். எப்போதும் தனக்குக்கீழ் இருக்கும் போராளிகளுக்காக, இந்தத் தேசத்திற்காக எதையாவது செய்ய வேண்டும் என்ற எண்ணம்தான் அவனிடம் மேலோங்கியிருந்தது. இதனால் சுட்டாவிற்கும் போராளிகளிற்குமான உறவு மிக நெருக்கமானதாக இருந்தது. ஆரம்பத்தில் ஒரு பயிற்சி முகாமின் பொறுப்பாளனாக இருந்து செயற்பட்ட சுட்டா பின்னர் ஆரம்ப இராணுவப் பயிற்சி முகாம்கள் அனைத்திற்கும் நிர்வாகப் பொறுப்பாளனாக நியமிக்கப்பட்டான்.

இந்தக்காலம் வன்னியின் சமர்களமெங்கும் சண்டை நடந்துகொண்டிருந்த காலம். சுட்டாவிற்கு வாகனம்கூட இருக்கவில்லை. அவன் எதையும் எதிர்பார்க்கவுமில்லை. அப்போது அவனிற்கு கொடுக்கக்கூடியவாறு இயக்கத்திடம் ஒரு பச்சைநிற துவிச்சக்கர வண்டியே இருந்தது. அவன் சந்தோசமாகவே அந்த துவிச்சக்கர வண்டியில் வன்னியில் வெவ்வேறு இடங்களில் இருந்த முகாம்களுக்கெல்லாம் சென்றுவருவான். சிலவேளை துவிச்சக்கர வண்டி பழுதென்றால் நடையில்கூட போய்விடுவான். எப்போதும் சாதாரணமாகவே இருக்க விரும்புபவன். இயக்கத்திடம் இருந்து தனக்காக எதிர்பார்ப்பதை விட எங்கள் தலைவர் எதிர்பார்ப்பதைச் செய்ய வேண்டும் என்பதே அவனது கொள்கையாக இருந்தது. அதனால் மிகுந்த ஆர்வத்தோடு சண்டைக் களங்களில் நின்று ஈடுபட்ட அவன் இயக்கத்தின் வேண்டுதலை ஏற்று மனப்பூர்வமாகவே இந்தப் பணியை மேற்கொண்டான்.


சுட்டாவின் இந்த அரவணைப்பான வளர்ப்பில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட போராளிகள் உருவாகினார்கள். சுட்டா நின்ற பயிற்சி முகாம்களில் போராளிகள் விலகுவதென்பது மிகவும் குறைவாகவே இருந்தது. ஏனென்றால் போராளிகள் அவனுடன் ஒன்றித்துப் போனார்கள்.

இப்போது சண்டை நிறுத்தப்பட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியிருந்தது. இந்த நாட்களில்தான் சுட்டாவிற்கு புதிய பணிக்கான அழைப்பு வந்தது. அது லெப்.கேணல் நவம் அறிவுக் கூடம். சமராடி விழுப்புண்பட்ட போராளிகளுக்கான கல்விக்கூடம். அவர்களிற்கு முக்கியம் தேவையானது அன்பும் அரவணைப்பும்தான். சுட்டா இதில் நன்கு கைதேர்ந்தவன். ஏற்கனவே சமர்க்களத்தில் விழுப்புண் பட்டவன். அதைவிட தனக்கு மிச்சமாயிருந்த ஒரு ஆண் சகோதரனையும் சண்டைக்களத்திலே பிரிந்தவன். தன் சகோதரனான கப்டன் இனியவனின் நினைவுகளும், அந்த இழப்பின் வேதனையும் அவனிடம் இருந்தது. அவனால் இவர்களின் மனதை இலகுவாகப் புரிந்துகொள்ள முடிந்தது. அவனுக்கும் இந்தப் பணி விருப்பமானதாக இருந்தது.

லெப்.கேணல் நவம் அறிவுக்கூடத்தின் நிர்வாகப் பொறுப்பாளனாக சுட்டா நியமிக்கப்பட்டான். இங்கு சுட்டாவிற்கு நிறையப்பணிகள் இருந்தன. ஒவ்வொரு விழுப்புண்பட்ட போராளியும் ஒவ்வொரு விதமான தாக்கங்களுக்கு உள்ளானவர்கள். அவர்களுக்கான அடிப்படை வசதிகள், மருத்துவம், உணவு என எந்த விடயத்திலும் கண்ணும் கருத்துமாகச் செயற்படவேண்டும். சுட்டாவிற்கு இது புதுமையான விடயமல்ல. தன் நீண்டகால அனுபவ வாழ்வினை வைத்துக்கொண்டு இந்த விழுப்புண்பட்ட போராளிகளுக்காக கடினப்பட்டு உழைத்தான். எல்லா வேலைகளிலும் அவனும் ஒருவனாகவே நின்று செயற்படுவான். போராளிகளின் தேவைகளை நிறைவு செய்வதிலிருந்து அவர்களுக்கு நல்ல உணவு வழங்குவது, அவர்களுடன் சென்றிருந்து கதைப்பது என அவன் எந்தநேரமும் இயங்கிக் கொண்டிருப்பான். முகாமில் சுட்டாவிற்கென்று ஒரு இடமே இருக்காது. ஒன்றில் சமயற்கூடத்தில் நிற்பான் அல்லது போராளிகளுடன் நிற்பான் அல்லது போராளிகளின் உணவுத் தேவைக்காக போடப்பட்டிருந்த பண்ணையில் நிற்பான். இப்படி எப்போதும் இயங்கிக் கொண்டிருப்பான்.

அவனது முகம் எப்போதும் கலகலப்பாகவே இருக்கும். அவனது முகத்தில் கடுமையைக் காணமுடியாது. அதனால் போராளிகள் அவனுடன் ஒன்றித்துப் போனார்கள். ஆண், பெண் என்ற பேதமின்றி எல்லோரும் அவனை செல்லமாக 'சுட்டா அப்பா' என்றே அழைப்பார்கள். சுட்டா போராளிகள் யாராவது தவறிழைத்து பேசினால்கூட அவனது பேச்சைக்கேட்டு திருந்துவார்களே தவிர, அவனில் யாருக்குமே கோபம் வராது. அவனது அன்பான அரவணைப்பில் அவனது தண்டிப்பு மறந்துபோகும். எந்தப் போராளிகளும் மனம் தயங்காது சுட்டாவிடம் எதுவானாலும் கேட்பார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அவன் அப்பாதானே.

**(14ஆம் பக்கம் பார்க்க)**



# இலங்கை: இனப்பிரச்சினையின் போக்கும் நீதிமன்றங்களின் நோக்கும்

சென்ற இதழில் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி.



## அரச சேவைகளில் தமிழர் புறக்கணிப்பு

தமிழ்த்தேசிய இனத்துவப் பிரச்சினையின் மற்றுமொரு பரிமாணம் அரச உத்தியோகங்களுக்கு பரீட்சைகள் மூலம் ஆட்கள் சேர்த்துக்கொள்ளப்பட்ட போது அத்தகைய ஆட்சேர்ப்பில் தமிழ்ப் பரீட்சார்த்திகள் தமிழர்கள் என்ற காரணத்திற்காக புறக்கணிக்கப்பட்டமையாகும். அத்தோடு அரசசேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட தமிழர்கள் அச்சேவைகளில் பெற்ற அனுபவம், சேவைமுதிர்ச்சி, திறமை, சேவைக்காலப் பயிற்சி என்பனவற்றைப் புறம்தள்ளி அவர்களது பதவி உயர்வின்போதும் சம்பள உயர்வுகளுக்காகவும் அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக ஒரங்கட்டப்பட்டார்கள். பேரினவாத இன ஒடுக்குமுறைகள் தமிழர்களது தொழில் வாய்ப்புக்களுக்கான கதவுகளை இறுக மூடிவைத்தன. இதனால் அவர்கள் புலம்பெயரத் தொடங்கினார்கள்.

**- நேதாஜி -**

1960களிலேயே தொடங்கப்பட்ட இந்த இன ஏதுக்கள் படிப்படியாக விஸ்தரிப்புப் பெறலாயிற்று. அரச சேவைகளில் ஆட்சேர்ப்புத் தொடர்பாக 1988ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் மூலம் தெரிவாகிய ரணசிங்க பிரேமதாசாவின் அரசாங்கம் அரச சேவைகளுக்கு ஆட்களைச் சேர்ப்பதில் தேசிய மட்டம், மாகாண மட்டம், மாவட்ட மட்டம் என மூன்று நிலைகளில் ஆட்சேர்ப்புக்களையும், பதவியுயர்வுகளையும் இன விகிதாசார அடிப்படையில் பின்பற்றுமாறு அறிவித்து அதனை உடனடியாகவே அமுல்படுத்துமாறு ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சரவைக்கும், உயர் அதிகாரிகளுக்கும் உத்தரவு பிறப்பித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் இந்த அறிவிப்பின் காரணமாக அரச உயர்சேவையில் இருந்த பல தமிழர்கள் திறமை, சேவை முதிர்ச்சி, ஆற்றல், அனுபவம், சேவைக்காலப் பயிற்சி என்பன இருந்தும் பதவியுயர்வுகளில் அவர்களுக்குரிய இடம் வழங்கப்படாது மறுக்கப்பட்டபோது தகுதி குறைந்த சேவை அனுபவம் குறைந்த பலர் ''பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்'' என்ற ஒரே காரணத்திற்காக உயர் பதவிகளில் அமர்த்தப்பட்டார்கள். இத்தகைய அரசசேவை நியமனங்களில் காட்டப்பட்ட இனவிகிதாசார முறையிலான பாரபட்சத்திற்கு எதிராக இலங்கை உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு இராமுப்பிள்ளை எதிர் பெங்டஸ் பெரேரா என்ற வழக்காகும். இவ்வழக்கின் நிகழ்வு பின்வருமாறு :-

இவ்வழக்கின் வாதியான இராமுப்பிள்ளை இலங்கையின் சுங்க இலாகாவில் அதிகாரியாகக் கடமையாற்றினார். இலங்கையின் சுங்க இலாகாவில் கடமையாற்றியவர்களுக்குப் பதவியுயர்வு வழங்கப்பட்டபோது இன விகிதாசாரம் தேசிய மட்டத்தில் பின்பற்றப்பட்டமையால் கூடியகால சேவை அனுபவம் இருந்தும் தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக இராமுப்பிள்ளை என்பவருக்கு பதவி உயர்வு மறுக்கப்பட்டது. இராமுப்பிள்ளையிலும் பார்க்க குறைந்தகால சேவை அனுபவம் உடையவர்கள் சிங்களவர்களாக இருந்தபடியால் அவர்களுக்கே பதவியுயர்வு வழங்கப்பட்டது. இந்த இன ஒதுக்கல் காரணமாக இராமுப்பிள்ளையின் கனிக்ஷ்ட அதிகாரியாக விருந்த ஒருவர் சிங்களவர் என்ற காரணத்தால் இராமுப்பிள்ளையின் சிரேக்ஷ்ட அதிகாரியாக பதவியுயர்வு பெற்றார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் இனவாரியான இத்திட்டத்தால் பாதிக்கப்பட்ட இராமுப்பிள்ளை இலங்கை உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். இவ்வழக்கு இலங்கை உயர்நீதிமன்ற நீதியாளர்களாக இருந்த தமிழரான தம்பையா முன்னிலையிலும் சிங்கள பௌத்தர் அல்லாத மார்க் பெர்ணான்டோ முன்னிலையிலும் இடம்பெற்றமையால் இராமுப்பிள்ளைக்கு பதவியுயர்வு வழங்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு அளிக்கப்பட்டாலும் இவரைப்போல் தமிழர் என்ற காரணத்தால் பாதிக்கப்பட்ட ஏனைய தமிழர்களுக்கு எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படவில்லை என்பதோடு இன விகிதாசார முறைமையைச் சிங்கள பௌத்த தத்துவவாக்க கோட்பாட்டுக்குள் நின்றுகொண்டமையால் உயர் நீதிமன்ற நீதியாளர்களாலும் அதனை அகற்ற முடியவில்லை.

## கல்வித்துறையில் தமிழர் புறக்கணிப்பு:

கல்வித்துறையில் பேரினவாதிகளால் கடைப்பிடிக்கப்பட்ட இனரீதியான தரப்படுத்தல் முறைமையே தமிழர்களது அகிம்சை வழியிலான உரிமைப் போராட்டத்தை ஆயுதரீதியான விடுதலைப் போராட்டமாக மாற்றமடையச் செய்தது என்பது இன்று வரலாற்று நிகழ்வாகக் கணிப்பீடு செய்யப்படுகின்றது.

1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் மூலம் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் மொழிரீதியான தரப்படுத்தல் முறைமையை அறிமுகம் செய்துவைத்தது. இதனால் தமிழ் மாணவ சமுதாயமே பரந்தளவில் பாதிக்கப்பட்டது. தமிழ் மாணவர் பேரவை, இளைஞர் பேரவை, விடுதலை அமைப்புக்கள் என பல இளைஞர்களைக் கொண்ட அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. பலவித கிளர்ச்சிகள் ஏற்பட்டன.

இக்கிளர்ச்சிகள் காரணமாக தமிழ் அரசியலில் கல்வியில் தரப்படுத்தல் பற்றிய விடயம் இனரீதியான பாரபட்சங்களுக்கு எதிரான ஒரு பலமான பிரச்சார ஆயுதமாகப் பயன்படுத்தப்படலாயிற்று.

1970ஆம் ஆண்டு இடம் பெற்ற பொதுத்தேர்தல் மூலம் பிரதமராகப் பதவியேற்ற சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசுதான் கல்வியில் இனரீதியான தரப்படுத்தல் முறைமையை அறிமுகப் படுத்தியதாயினும் அதன் பின்னர் 1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர் அரசும் 1989ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஆர்.பிறேமதாசா அரசும் சிற்சில மாற்றங்களுடன் தரப்படுத்தல் முறையை அமுல்படுத்தி தமிழ் மாணவர்களது உயர் கல்விக்கு தடைபோட்டது. இன்று சந்திரிக்கா அம்மையாருடைய அரசு பின்பற்றி வரும் "இசற்கோர்" முறையால் தமிழ் மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

1978ஆம் ஆண்டு ஜே.ஆர் அரசு அறிமுகப்படுத்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் பற்றிய அத்தியாயத்தில் இன ரீதியான, மொழிரீதியான பாரபட்சங்களுக்கு எதிரான சட்ட ஏற்பாடுகள் காணப்படுகின்றபோதும் அவை நடைமுறையில் பின்பற்றப்படுவதில்லை. இதற்குத் தக்க சான்றாக அமைந்த விடயம் 1990ஆம் ஆண்டு 2ஆம் கட்ட ஈழப்போர் காலத்தில் இடம்பெற்றது.

1990ஆம் ஆண்டு ஜுன் மாதம் நடுப்பகுதியில் இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்நாட்டுப்போர் மீண்டும் ஆரம்பமானது. இப்போரின் காரணமாக 1990ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நடைபெறவேண்டிய கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை வடகிழக்கு மாகாணத்தில் நடைபெறவில்லை. இலங்கையின் ஏனைய மாகாணங்களில் திட்டமிட்டபடி இடம் பெற்றது. வடகிழக்கில் இப்பரீட்சை பின்னர் 1991ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் தான் நடைபெற்றது.

மேற்படி பரீட்சை காலம் தாழ்த்தி தனியான பரீட்சை வினாத்தாளின் அடிப்படையில் தமிழ் மாணவர்களுக்கு நடைபெற்றமையால் அப்பரீட்சைக்குத் தோற்றிய தமிழ் மாணவர்கள் நன்றாகக் கற்று அதிக புள்ளிகளைப் பெற வாய்ப்பு அளிக்கப்பட்டு விட்டதாகப் பேரினவாதிகள் வெகு தீவிரமாக இனவாதப் பிரசாரத்தில் ஈடுபடலாயினர். எதிர்பாராமல் பேரினவாத அரசினால் தமிழ்மக்கள் மீது அந்தக் கொடிய யுத்தம் வலிந்து திணிக்கப்பட்டமை பற்றியோ அந்த அர்த்தமற்ற கொடிய யுத்தம் காரணமாக பல லட்சக் கணக்கான மக்கள் தமது பாரம்பரிய இருப்பிடங்களையும், தொழிலையும் இழந்தமை பற்றியோ தமிழ் மாணவர்கள் தமது உயர்கல்விக்கான பரீட்சைக்கு தம்மைத் தயார்ப்படுத்தும் சந்தர்ப்பத்தை முழுமையாக இழந்து அகதிமுகாம்களில் அல்லல்படுவதைப் பற்றியோ எந்தச் சிங்களவரும் எதுவும் பேசவேயில்லை.

இலங்கையில் க.பொ.த. உயர் தரப் பரீட்சை எப்போதுமே ஒரு போட்டிப் பரீட்சையாகவே நடாத்தப்படுகின்றது. ஏனெனில் இப்பரீட்சையில் மாணவர்கள் பெறும் பெறுபேற்றின் அடிப்படையிலேயே பல்கலைக் கழகத்திற்கு உயர்கல்வி கற்பதற்காக மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றார்கள். தமிழ் மாணவர்கள் தெரிவு செய்யப்படக் கூடாது என்பதற்காகவே பேரினவாதிகள் ஒரு பக்கம் அரசாங்கத்திற்கு நெருக்குதல்களையும், மறுபக்கம் மோசடிகளையும் மேற் கொண்டார்கள். இதனால் அக்கால கட்டத்தில் உயர்கல்வி அமைச்சராக விருந்த ஜனாப் ஏ.சி.எஸ்.ஹமீத் பேரினவாதிகளின் கூச்சல், குழப்பங்களுக்கும் நியாயமற்ற கோரிக்கைகளுக்கும் அடிபணிந்தார். இதனால் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் ஒரே பாடவிதானத்தின் அடிப்படையில் இருவேறு காலப்பகுதியில் நடாத்தப்பட்ட இந்தப் பரீட்சைகள் இரண்டும் வெவ்வேறானவையாகக் கருதப்பட்டு அதன் அடிப்படையிலேயே வெட்டுப் புள்ளிகளும் வழங்கப்பட்டன. அரசின் இந்த இனவாத அணுகுமுறையால் திறமையும், ஆற்றலும் வாய்ந்த தமிழ் மாணவர்கள் பலர் உயர் கல்விகற்கும் வாய்ப்பை இழந்தார்கள். இதனால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் தம்மை ஒரு அமைப்பாக்கிக் கொண்டு இலங்கை உயர்நீதிமன்றத்தில் ஒரு அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கைத் தாக்கல் செய்தனர்.

சுரேந்திரன் எதிர் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு என்ற இந்த வழக்கை இலங்கை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்தது. ஆனால் வழங்கப்பட்ட தீர்ப்பு வித்தியாசமாகவும், விநோதமாகவும் இருந்தது. மனுச்செய்த சுரேந்திரன் என்ற மாணவனுக்கு மட்டும் மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் இயந்திரவியல் பீடத்திற்கு அனுமதி வழங்கும்படியும் வேறு யாராவது இந்தப் பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்து பாதிக்கப் பட்டிருந்தால் அவர்களுக்கும் அனுமதி வழங்கும்படியும் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஏனைய கலைப்பீடம், மருத்துவபீடம், முகாமைத்துவபீடம், சட்டபீடம், விவசாயபீடம், பல்மருத்துவ பீடம், விலங்கு மருத்துவ பீடம், பௌதிகவியல் போன்ற பல பீட மாணவர்களுக்கோ அல்லது தமிழ் மாணவ சமுதாயத்துக்கோ ஏற்பட்ட பாதிப்புக்கள் பற்றி எதுவுமே எடுத்துச் சொல்லப்படவில்லை. ஏதோ ஒருசில பொறியியல்பீட மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பாகத்தான் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு அமைந்திருந்ததே தவிர ஒட்டுமொத்தத் தமிழ் மாணவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்பை இந்தத் தீர்ப்பு எந்த வகையிலும் மாற்றியமைக்கவில்லை. மாறாக ஏனைய பீடங்களின் தமிழ்மாணவர்கள் இத்தீர்ப்பு வெளிவந்த பின்னர் இலங்கை உயர் நீதிமன்றிற்கு மனுச்செய்தபோது வெட்டுப் புள்ளி வெளியாகி ஒரு மாதத்திற்குள் உயர்நீதிமன்றுக்கு மனுச்செய்யவேண்டும் என்ற 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பின் 125ஆம் உறுப்புரையை சுட்டிக் காட்டி ஏனைய தமிழ்மாணவர்களது கோரிக்கைகள் யாவும் நிராகரிக்கப்பட்டன. இத்தீர்ப்பினால் தமிழ்மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு எதுவித நன்மையும் கிடைக்கவில்லை.

இவ்வாறாக இலங்கையின் உயர்நீதிமன்றமானது இலங்கையின் இனச்சிக்கல் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் எல்லாம் ஒருவித நழுவல் போக்கையே கடைப்பிடித்து வந்திருக்கிறது. இலங்கையின் நிறைவேற்று அதிகாரம், சட்டவாக்க அதிகாரம், நீதித்துறை அதிகாரம் என்பன எங்கும் பேரினவாதப் போக்கே வியாபித்துள்ளது. இதிலிருந்து இவை இலகுவில் விடுபட முடியாமையால் இலங்கையின் இனச்சிக்கல் என்பது என்றுமே உறைபனி நிலையில் இறுகிப்போயுள்ளது.

**1970ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தல் மூலம் பிரதமராகப் பதவியேற்ற சிறிமாவோ பண்டாரநாயக்கா அரசுதான் கல்வியில் இனரீதியான தரப்படுத்தல் முறைமையை அறிமுகப் படுத்தியதாயினும் அதன் பின்னர் 1977ஆம் ஆண்டு பதவிக்கு வந்த ஜே.ஆர் அரசும் சிற்சில மாற்றங்களுடன் தரப்படுத்தல் முறையை அமுல்படுத்தி தமிழ் மாணவர்களது உயர்கல்விக்கு தடைபோட்டது. இன்று சந்திரிக்கா அம்மையாருடைய அரசு பின்பற்றிவரும் ''இசற்கோர்'' முறையால் தமிழ்மாணவர்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.**





# மீண்டுமொருமுறை வாடா திலீபா

## திலீபா

குடல் கொடுத்தாய்
குரல் கொடுத்தாய்
உயிர் கொடுத்தாய்
உடல் கொடுத்தாய்
உனைக் கொடுத்தாய் - அட
எத்தனை ஈகமடா
முடித்தாய் - அத்தனைக்கும்
கட்டணமாய்
விடுதலையே நீ
விதித்தாய் மீண்டுமொருமுறை
வாடா திலீபா
வானத்தில் நின்று நீ
வாழ்த்தும் தமிழீழம்
வந்துசேரும் அந்தநேரம்
வரும் வரைக்கும்
வந்திறங்கி ஒரு வரம் தா

நாங்கள் விடுதலை நீர்குடிக்க
உணர்வுக் கடப்பாரையால்
உனது வயிற்றிலே
கிணறு வெட்டினாய்
பசியின் கரங்களை
முறித்துச் சிறகாக்கி
சுதந்திரப் பசிக்கு நீ
இரைதேடிப் பறந்தாய்
மீண்டுமொருமுறை
வாடா திலீபா

விடுதலைத் தென்றல் நீ
வெந்துகொண்டிருந்தாய்
தாயகத் திசைகளெங்கும்
புயல் அடித்துக்கொண்டது
வானைத் துளைத்துந்தன் ஈகமும்
எங்கள் சோகமும் உயர உயர
நேசித்த மனங்களெங்கும்
பூகம்பம் நடந்தது.
சாவு வந்துன்னைக்
காவு கொள்ளுமெனக்
காத்துக் கிடந்தவர்கள்
பார்த்துக்கொண்டிருக்க
சாவுந்தன் காலடியில்
வாழ்விழந்து விழுந்தது...
அது ஆயிரம் ஆயிரம்
வீரர்களாய்ப் பிறந்தது
மீண்டுமொருமுறை
வாடா திலீபா
வந்திறங்கி ஒரு வரம் தா.

உரிமைப் பசியெடுத்து நாங்கள்
உயிரைக் கொடுக்கையில்
உணவுப்பொதி விழுத்தி
உள்ளே நுழைந்தவர்கள்
உதவிக் கரங்களிற்குள்
ஒளித்து வருவது
குரல்வளை நெரிக்கும்
குறடுகள் என்பதைப்
பறையடித்தவன் நீயடா
வல்லரசொன்றின் வஞ்சகம்
உடைத்து - தனியொரு
வீரனாய் களத்தினில் ஆடினாய்
நீ ஒரு மாபெரும் படையடா
உன் ஈகத்திற்கேது
உலகில் எல்லையடா - உன்
உறுதிக்குவமை தேடித்
தோல்வியடா - நாம்
யாருக்கும் பணியும் இனம்
இல்லையடா - அதைப்
புரியவைத்தது உன் வலிமையடா
மீண்டுமொருமுறை
வாடா திலீபா...

ஈழதாகம் நெஞ்சில் ஏற
நீரின் தாகம் நீ வெறுத்தாய்
அட வானமாகி எங்கள்
கண்கள் நீர் சரிக்க - இந்தியன்
ஏனடா பார்க்க மறுத்தான் -
அந்த
வஞ்சகச் சதியரின் வலையினைக்
கிழிக்க வீழ்ந்ததைத்
தாங்கிடா வீரமா வேந்தன்
வேரறுத்தல்லவா
அவர்களைக் கலைத்தான்
ஒரு காலமும் கலங்காப்
பிரபாகரன் படை முடங்கா -
இதை
புரியாதவன் சரிவான்
அடிவாங்கியே பகைவன்
உயிர் மடிவான்
மீண்டுமொருமுறை
வாடா திலீபா...

கோட்டைக்கு முன்னால்
நீ குரல் எழுப்பியபோது
காற்சட்டையோடு
நின்றவர்
எல்லாம் - வேட்டைக்குப்
புறப்பட்டுவிட்டார்கள் -
எதிரிக்குச்
சாட்டையடி கொடுக்காது -
அவர்கள்
சரியமாட்டார்கள் -
வெட்டரிவாளோடு
எங்கள் வீதி வந்தவர் எவரும் -
தங்கள்
வீட்டினிற்குத் திரும்பிப்
போகமாட்டார்கள்.
மீண்டுமொருமுறை
வாடா திலீபா
வந்திறங்கி ஒரு வரம் தா

- செந்தோழன் -

கரைந்துகொண்டிருந்தபோது
உனக்கு முன்னே தங்கள்
கண்களைக்
கரைத்துக்கொண்டிருந்த
உறவுகளின் உதிரப்பூக்கள்
இப்போ
எங்கள் உயிர் எடுத்தவரின்
உயிர் எடுப்பதற்காய்
உயிர் கொடுப்பதற்காய்
பெயர் கொடுக்கிறார்கள்
மில்லரின் பல்லவிக்கு இங்கே
ஏராளம் சரணங்கள்
காத்திருக்கின்றன - ஓய்விலுள்ள
போர்ப்பாட்டு ஒருநாள்
ஒலிக்கும்போது மீதியுள்ள
பாசறைகள் மீதெரியும்
நெருப்பாக
இந்த வரிப்புலிகள்
வளர்கிறார்கள்.
மீண்டுமொருமுறை
வாடா திலீபா
வந்திறங்கி ஒரு வரம் தா

நீ முழங்கிய குரலின்
எதிரொலியாய்
தமிழரின் தாகம்
தமிழீழத் தாயகம்
எங்கள் மண்ணில் ஒலிக்கிறது.
மக்கள் படை - அது
வெல்லும் தடையென்று உனது
மந்திரம் வலுக்கிறது - அட
பகையே உனக்கென்ன வேலை
எங்கள் மண்ணில் கிடக்கிறது
ஓயாத அலைகளிற்கு
வலுக்கொடுத்த அந்தச்
சாயாத படை இதைக்
கேட்கிறது.
பாயாது புலி எனும்
நப்பாசை ஆகாது
எம்மண்ணில் வாழ்வது வாயாது
பகையே தப்பாசை அதுவென்று
உன் தாக உணர்வேற்று
உரம்கொண்ட பெருஞ்சேனை
திரண்டிங்கே எழுகின்றது
மீண்டுமொருமுறை
வாடா திலீபா...

கொழும்புதான் எமை
ஆளுமாம் - அட இதற்கா
எங்கள் குழந்தைகள்
செத்தார்கள் - நீயுருகிய
மேடையில் காசி பாடிய
வரிகள் தூசிபடியாமல்
இன்னும் துடிப்போடு
இருக்கிறது.
கொழும்புதான் எமை
ஆளுமென்ற கொழுப்பு
இப்போதும்
இருக்குமென்றால்
எலும்புதான் அவர்
படைகளிற்கு
மிஞ்சும் என்பதை
எப்போதோ தலைவன்
எழுதி வைத்துவிட்டான்
வெறுங்கையோடு வரும்
வேங்கைகளைச் சுட்டுவிட்டு
சண்டைக்கு நாம்
அஞ்சமாட்டோமெனச்
சண்டித்தனம்
விடும் சண்டாளர்களை
எங்கள் முதல்வனின்
மூச்சுக் காற்றே சுட்டெரிக்கும்
என்பதை
பேச்சுக்கள் சொல்லாது
வாள்வீச்சுக்களே சொல்லும்
மீண்டுமொருமுறை
வாடா திலீபா...

எரிமலைக் குழம்பாய் குமுறிக்
குமுறி
ஏற்றிய மெழுகாய் உருகி உருகி
பணிந்திடாப் புலியாய் உறுமி
உறுமி
பார்த்தீபன் தந்தது உறுதி உறுதி.

# பகிரப்படாத பக்கங்கள்



## கந்தகப் பொதியுடன் கடுகதிப் பயணம்


ஆ.ந.பொற்கோ

அவர்களின் முகாம் இரவுபகலாக ஆரவாரப் பட்டுக்கொண்டிருந்தது. போர்க்களத்தின் முக்கிய பணிகளில் ஒன்றான வெடிபொருள் வழங்கல் பணி அவர்களுடையது. வெடிபொருட்களும் எறிகணைகளும் பாரவூர்திகளில் ஏற்றப்பட்டன. பாரவூர்திகள் போர்க் களத்தின் பின்னணியிலுள்ள அவர்களின் வெடிபொருள் வழங்கல் மையம் நோக்கி விரைந்தன.

வெடிபொருள் வழங்கல் மையம் விறுவிறுப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. ஒருபக்கம் புதிய பதுங்ககழிகள் வெட்டப்பட்டுக்கொண்டிருந்தன. இன்னொரு பக்கம் வெட்டப்பட்ட பதுங்ககழிகளுள் பாரவூர்திகளில் வந்த வெடிபொருட்கள் பக்குவமாக இறக்கப்பட்டு, பாதுகாப் பாக வைக்கப்பட்டுக்கொண்டிருந்தன.

அவன், வந்த வெடிபொருட்களை அவதானித் தான். அவை பெரும்பாலும் இராணுவத்தினருடனான சமர்களின்போது, அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டவை யாக இருந்தன. கைப்பற்றப்பட்ட வெடிபொருட்கள் முதன்மைக் களஞ்சியத்தில் சரியான முறையில் பரா மரிக்கப்பட்டு வழங்கல் மையத்திற்கு எடுத்துவரப் பட்டிருந்தன.

இராணுவத்தினரிடமிருந்து வெடிபொருட்களை கைப்பற்றும் போது சில போராளிகள் தங்க ளின் உயிர்களைத் தியாகம் செய்யவேண்டியிருந்தது. அவ னோடு கூடவே விடுதலைப்போராட்டத்தில் இணைந்த தோழன் ஒருவனும் வெடிபொருட்களைக் கைப்பற்றும் சம்பவமொன்றில் வீரச்சாவடைந்திருந்தான். அவனின் கண் முன்னே அந்தச் சம்பவம் நடந்தது.



ஓயாத அலைகள் மூன்று நடவடிக்கையின்போது இராணுவத்தினர் தமது முகாம்களைவிட்டு படிப்படியாகத் தப்பியோடிக்கொண்டிருந்தார்கள். அவர்களின் பீரங்கிப் படைமுகாமும் கைப்பற்றப்பட்டிருந்தது. ஒருபக்கம் சமர் தொடர இன்னொருபக்கம் வெடிபொருள் மீட்புப்பணி வேகமாக நடந்துகொண்டிருந்தது. எறிகணைக் களஞ்சியத் திலிருந்த எறிகணைகள் பாதுகாப்பான இடங்களுக்கு நகர்த்தப்பட்டுக்கொண்டிருந்தன.

எறிகணைக் களஞ்சியம் வெறுமையாக இன்னும் சில எறிகணைகளே களஞ்சியத்திலிருந்த வேளையில் இராணுவத்தினரின் பின்னணி முகாமிலிருந்து ஏவப்பட்ட எறிகணையொன்று எறிகணைக் களஞ் சியத்தில் விழுந்தது. ஏவப்பட்ட எறி கணையோடு எஞ்சிய எறிகணைகளும் வெடித்துச் சிதறின.

அவன் களஞ்சியத்துக்கு வெளியில் நின்றதால் வேகமாக நிலை யெடுத்திருந்தான். புகை மண்டலத் தூடே தோழனைத் தேடினான். தோழனின் உடல் நாலா புறமும் சிதறிப்போய்க் கிடந்தது. அந்தச் சம்பவத்தில் அவனும் விழுப்புண்ணடைந்திருந்தான்.

களமுனையிலிருந்து அவர்களின் வெடி பொருள் வழங்கல் மையத்துக்கு செய்தியொன்று வந்தி ருந்தது, அவனும் தோழர்களும் தயாரானார்கள்.

தேவையான வெடிபொருட்களும் எறிகணை களும் ஊர்தியொன்றில் ஏற்றப்பட்டன. அவன் களமுனை நோக்கி ஊர்தியை வேகமாகவும் எதிரியின் தாக்குதலுக்கு இலக்காகாமல் விவேகமாகவும் செலுத்திக்கொண்டிருந் தான். காட்டுவீதியில் கடுமையான தடைகள் ஏற்பட்ட போதும் அவனும் தோழர்களும் அவற்றைச் சமாளித்தபடி விரைந்தார்கள். உரியநேரத்தில் குறித்த இடத்தில் வெடி பொருட்களை இறக்கிவிட்டுத் திரும்பிக்கொண்டிருந் தார்கள்.

எதிரி ஏவிய எறிகணைகள் இலக்கற்று விழுந்து வெடித்துக்கொண்டிருந்தன. அவர்களுக்கு எதிரியின் செயற்பாட்டை நினைக்க அடக்கமுடியாத சிரிப்பு வந்தது. வேலையில் வியர்த்துக் களைத்திருந்தாலும் அட்டகாசமாய் சிரித்தபடி வழங்கல் மையத்தை நெருங்கினார்கள். அவர் களை வரவேற்றபடி எறிகணைகளோடு பாரவூர்தியொன்று வழங்கல் மையத்துள் நுழைந்தது.




# “சந்ததி காணாத நிம்மதி”

**A5** என்று குறியீட்டுப் பெயரையுடைய செங்கலடி - பதுளை பிரதான வீதியில் இலுப்படிச் சேனை சந்தியிலிருந்து நண்பகலை அண்மித்த பொழுதொன்றில் எங்கள் பயணம் தொடங்கியது.

முடிவின்றி காடுகளில் முடிவடையும் வயல்வெளிகளினூடும், வீதியை மூடும் காட்டு மரங்களினூடும், சிறு ஆறுகளைத் தாண்டி நீண்டு கொண்டிருந்தது அந்த வீதி. இடையிடையே வயல்களில் தெரியும் காவற்குடில்களும், திடல்களில் தெரியும் கிராமங்களையும் கடந்து, ஐந்தாம் கட்டைச் சந்தியின் ஊடாக நாங்கள் கூழாவடியினுள் பிரவேசித்தோம்.

சூழ்ந்த காட்டினுள் பரவிய வயல் வெளிகளைக் கொண்டிருந்தது கூழாவடிக் கிராமம். அந்தப் பிரதேசத்தில் எல்லாக் கிராமங்களையும் போல,

***இப்பொழுதுதான் அவர்களின் பிரதேசத்தில் அவர்களுக்கென ஒரு மருத்துவமனை ஆரம்பித்திருக்கின்றது. யாருக்கும் அஞ்சாமல் எந்த இராணுவத்தினரிடமும் வைத்தியசாலை செல்ல அனுமதி கேட்காமல் எங்கேயிருந்தாலும் சைக்கிளிலே வந்துவிடக்கூடிய தூரத்தில் அவர்களுக்கெனவோர் வைத்தியசாலை உருவாகியிருக்கிறது.***

நகரத்திலிருந்து வெகு தொலைவில் தனித்திருந்தது. மட்டக்களப்பு மாவட்டத்தில் வடக்கே, மட்டக்களப்பு வாவியில் பிரிக்கப்பட்டிருந்த படுவான்கரையில் அநேக கிராமங்களில் ஒன்றாக, அன்றாடம் தன் கிராம மக்களை மாத்திரம் தன் முற்றத்தில் கண்ட கிராமம் இன்று அந்தப் பிரதேசத்தில் எல்லோராலும் பேசப்படும், நாடிச்செல்லப்படும் கிராமமாகிவிட்டது.

கோறளை தெற்கு பிரதேச செயலர் பிரிவின் ஒரேயொரு முழுநேர வைத்தியசாலையாக, மட்டக்களப்பு வாவியின் கீழே அப்பிரதேசத்தில் சுற்றியிருக்கும் ஈரளைக்குளம், பெரிய கொட்டு, நடுக்காட்டுக் கிராமம், திகிலிவெட்டை, கோராவெளி, பள்ளத்துச்சேனை, சந்திவெளித் திடல், தரவை, குடும்பிமலை என முப்பதிற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கும் இரண்டாயிரம் வரையிலான குடும்பங்களுக்குமான ஒரேயொரு மருத்துவமனையாக விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவின் தியாக தீபம் திலீபன் மருத்துவமனை அங்கே நிமிர்ந்து நின்றது.

புலம்பெயர்ந்து வாழும் மக்களின் நிதி உதவியுடன் கடந்த 26.09.2005 அன்று ஆரம்பிக்கப்பட்ட இந்த வைத்தியசாலையில் வெளிநோயாளர் பகுதி, மகப்பேற்று விடுதி, ஆண் - பெண் நோயாளர் விடுதி, மருத்துவ விடுதி என எல்லாம் தனித்தனியே அமையப் பெற்றிருந்தது.

அந்தப் பகற்பொழுதில் அங்கே திரண்டிருந்த பலபத்து மக்களுடன் ஒருவராய் நானும் இணைந்துகொண்டேன். மருத்துவமனையின் வெளிநோயாளர் விடுதி இருக்கையில் இருந்தவாறே அருகிலிருந்தவர்களுடன் பேச ஆரம்பித்தேன்.

“இஞ்ச முந்தி பூச்சி சடிச்சா (பாம்பு) சாவுதான் தம்பி”

“வயல் வெட்டையுக்க, காடுகளுக்க, வேட்டைக்குப் போகேக்க ஏதாவது நடந்தா ஆறு தாண்டி மெயினில வாழைச்சேனைக்குத் தான் போகோணும்.”

“இடையில கிரான் பாலத்தில் ஆமிக்காரன் இரிக்கான்.”

“ஐஞ்சு மணியான, பிறகு அங்கால போகேலாது.”

“அவன் வந்து பாதையை திறக்க ஒரு மணித்தியாலமாவது செல்லும்”

“உப்பிடித்தான் தம்பி, ஒருக்கா வடமுனையில ஒராளுக்கு பூச்சி கடிச்சதெண்டு கொண்டுபோனாங்க”

“அங்கையிருந்து கிரான்பாலம் ஒரு முப்பது முப்பத்தைந்து கிலோமீற்றர் வரும்”

“ஒருமாதிரியா ஆளைக் கொண்டந்திட்டம், ஆமி பொயின்ர திறக்க ஒரு மணித்தியாலமாச்சு”

“அங்கால கிரானுக்கு போகவே ஆள் முடிஞ்சிச்சு தம்பி”

பழைய நினைவுகளுடன், ஏதோ விசஜந்து தீண்டி வீங்கிப்போயிருந்த தனது மருந்திட்ட காலொன்றைத் தடவியவாறு அந்த நடுத்தர வயது உழைப்பாளி எனக்கு சொல்லிக்கொண்டிருந்தார்.

எந்த மருந்துவ வசதியுமற்று நீண்ட தூரம் பயணித்த பின்னும் இராணுவத்தினரின் அலட்சியங்களினால் மருத்துவமனை செல்லமுடியாமல் இப்படி எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்ததாக அவர் சொன்னார்.

நீண்டதூரம் நடந்த களைப்புடன் கர்ப்பிணிப் பெண்ணொருவரை தாயொருவர் கூட்டி வந்திருந்தார். அவர்கள் இருக்கைக்கு அருகில் சென்று அவர்களுடன் கதைக்கத் தொடங்கினேன். தூரத்தே மியான்குளத்திலிருந்து அவர்கள் ‘கிளினிக்’ வந்ததாகச் சொன்னார்கள்.

“முந்தியெல்லாம் நாம இப்படி ஓரிடமும் போறதில்லை தம்பி”

“எங்களுக்கு போக றோட்டுமில்லை, வருந்தங்காட்ட ஆஸ்பத்திரியுமில்லை”

“மியாங்குளத்தில் இருந்து வெட்டைக்கு, வாழைச் சேனை போறதெண்டா முடியாத காரியம்”

“இப்படித்தான் தம்பி என்ர மூத்த மகளுக்கு பிரசவம் கஸ்டமாப் போச்சு”

“அப்ப சரியான மழைக்காலம், ஆறுகள் எல்லாம் றோட்டை குறுக்கறுத்து ஓடிச்சு. ஒரே வெள்ளக் காடு. ஒருமாதிரியா புலிபாய்ஞ்சகல் கொண்டத் திட்டம்”

“பெருவெள்ளம் தம்பி தோணியள் ஒண்டும் கரையில இல்லை. பிரசவ வலி எடுத்திட்டுது”

“பிறகு ஆம்பிளையள் கொஞ்சப்பேர் காட்டுக்க போய் பட்டமரம் கொண்டுவந்து தோணிகட்டித்தான் அங்கால போனனாங்கள்”

“அதுக்கிடையில் பிரசவமாயிற்று. அனா தாயை காப்பாற்றேலாமப் போச்சு”

தனது மகளை நினைத்து கண்ணீர் விட்ட அந்தத் தாயின் முகத்தில் கவலை ரேகையுடன் தாங்கள் இதுவரை அனுபவித்த துன்பத்தின் வடுவும் முகத்தில் தெரிந்தது.

காடுகளின் நடுவே ஆங்காங்கே காணப்பட்ட ஊர்களிலெல்லாம் அவர்களுக்கு மருத்துவ வசதிகள் ஏதுமே அப்போது இருக்கவில்லை. வேட்டைக்குப் போகும்போது வயல்களில் வேலை செய்யும்போதும் விலங்குகளால் தாக்கப்பட்டவர்கள் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிக்குள் மருத்துவத்திற்குச் செல்லும்போது விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் எனச் சொல்லி கைதுசெய்யப்பட்டும் இருந்தனர்.

“இப்படித்தான் ஒருநாள் தம்பி, முறுத்தானையில வயல் வெட்டைக்க வேலைசெய்யேக்க ஒராளுக்கு நெஞ்சுக்குத்து வந்திட்டிது,

“கொண்டுபோக என்ன இரிக்கி, ஒண்டில் சைக்கிள் எடுக்கணும் அல்லாட்டி வண்டில் கட்டணும்.

ஒருமாதிரி கிரானுக்கு கொண்டுபோக முன்ன ஆள் முடிஞ்சிது”.

“இஞ்ச இவ்வளவு நாளும் இரிக்கம், அநேகமா சின்னதா ஒரு வருத்தமோ, நெஞ்சுக் குத்தோ வந்தா, பூச்சி குத்தினா, காட்டில ஆனையடிச்சு, பண்டிவெட்டி காயப்பட்டால் பொடிதான் கிரானுக்கு வரும். ஆள் தப்பியிராது.”

அவர்களது பிரதேசத்தில் எங்கேயுமே, எப்போதுமே ஒரு முழுநேர வைத்தியசாலை இருந்ததில்லை.

“சந்திவெளிக்கு போகவேணும் தம்பி, பத்து பதினைஞ்சு கட்டை தாண்டி, அங்கதான் மருந்து கொடுக்கிற ஓர் இடம் இரிக்கி”

“அதுகும் இடைக்கிடை தான் மருந்து கொடுப்பார்கள்”

“வருத்தம் இடைக்கிடையா வரும் தம்பி?” கூழாவடி வாசியொருவர் கூறினார்

இப்பொழுதுதான் அவர்களின் பிரதேசத்தில் அவர்களுக்கென ஒரு மருத்துவமனை ஆரம்பித்திருக்கின்றது. யாருக்கும் அஞ்சாமல் எந்த இராணுவத்தினரிடமும் வைத்தியசாலை செல்ல அனுமதி கேட்காமல் எங்கேயிருந்தாலும் சைக்கிளிலே வந்து விடக்கூடிய தூரத்தில் அவர்களுக்கெனவோர் வைத்தியசாலை உருவாகியிருக்கின்றது.

ஒரு வைத்தியருடனும் ஐந்து மருத்




துவ தாதிகளுடனும் இயங்கிய தமிழீழ விடுதலைப் புலிகளின் தியாக தீபம் திலீபன் வைத்தியசாலையைப் பார்த்தபொழுது பெருமையாக இருந்தது. அங்கிருந்து நான் புறப்படும்போது இறுதியாக பெண்டுகள்சேனையில் இருந்து வந்திருந்த முதியவர் ஒருவர் என்னுடன் வாசல்வரை கதைத்துவந்தார்.

“எனக்கு என்ர அப்பற்ற அப்பருக்கு அறிந்த காலம் முதல் எங்களுக்கு வைத்தியசாலை ஒண்டுமே இல்ல தம்பி.”

“மருந்தெடுக்க ஏலாமலே, இஞ்ச எத்தனை பேர் சேத்துப்போச்சின”

“இப்ப இந்த திலீபன் வைத்தியசாலை தான் முதலா எங்களுக்கு வந்திரிக்கி”

“இப்பதான் தம்பி என்ர சந்ததியிலேயே முதலா நான் ஒரு வைத்தியசாலையை எங்கட சுற்று வட்டாரத்தில காணுகிறன்”

“எவ்வளவு நிம்மதியா இரிக்கி”

நீண்ட அவர்களின் நெருக்கடி வாழ்வின் சுமைகளை நினைத்து நடந்துகொண்டிருந்தேன் “எவ்வளவு நிம்மதியா இரிக்கி” அவர்களுடைய வார்த்தை என்னுள் ஒலித்துக்கொண்டிருந்தது.

**~ அன்புமாறன் ~**

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்படி எதையும் பார்க்காது செயற்படும் அவன், கொஞ்ச நாளாய் சுகயீனமுற்றிருந்தான். மருத்துவமனையில் அவனை பரிசோதித்ததில் அவனது சிறு நீரகங்கள் செயலற்றுக்கொண்டிருந்தன. எல்லோர் மனதிலும் ஏக்கம். சுட்டா அண்ணை எப்ப சுகப்பட்டு வருவார்? அவரின் சிறுநீரகங்கள் மாற்றப்பட வேண்டும். அவரின் மூத்த சகோதரி முன்வந்தார். தன் ஒரு சிறுநீரகத்தை தன் சகோதரனுக்கு கொடுத்தார்.

சத்திரசிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது.

சுட்டாவிற்கு ஓய்வு தேவைப்பட்டது. சுட்டா இனி முன்னர்போல் வேலைசெய்ய முடியாது. அவன் ஓய்வாக இருக்கவேண்டும். அவனுக்கென்று குடும்பம் இருந்தது. பிள்ளை இருந்தது. அவன் முன்னர்கூட வீட்டில் நிற்பது மிகவும் அரிது. அப்படி அரிதாக அங்கு நிற்கும் நாட்களில்கூட சும்மா இருந்ததில்லை. தனது வீட்டுவளவைப் பண்படுத்தி பயன்தரும் கன்றுகள் வைப்பான், நிலத்திற்கு சீமெந்து போடுவான், கதிரை பின்னுவான். எஞ்சிய நேரத்தில் பிள்ளையையும் பார்த்துக்கொள்வான். சுட்டா வீட்டில் நிற்கும் நாட்களில் குழந்தைக்கு சோறு தீத்துவது சுட்டாதான். ஏனென்றால் அவனுக்கு அவ்வளவு பொறுமையிருந்தது.

அயலவர்களுக்கு ஏதாவது பிரச்சினை என்றால்கூட நிற்கும் நேரங்களில் தன்னால் தீர்க்கக் கூடியவற்றை தீர்த்து வைப்பான். தனது வீட்டிற்கு அயலில் இருந்த பாலர் பாடசாலை நிலம் சீமெந்து போடப்படாமல் உள்ளதை அறிந்து அங்கு கற்கும் சிறுசுகளுக்காக, ஒருநாள் அந்த சிறுசுகளின் பெற்றோரை அழைத்து அவர்களுக்கு அதைப்பற்றி எடுத்துச்சொல்லி அவர்களை நிதி சேர்க்கவைத்து தன்னால் இயன்ற உதவிகளையும் செய்து அந்தப் பாலர்பாடசாலை நிலத்திற்கு சீமெந்து போட்டுக் கொடுக்கவும் சுட்டா காரணமாய் இருந்தான்.

கொஞ்சநாள் ஓய்வில் இருந்த சுட்டா தன்னால் இயங்கக்கூடிய நிலை வந்ததும் மீண்டும் நவம் அறிவுக்கூடம் வந்துவிட்டான். போராளிகள் எல்லோருடைய மனதிலும் மகிழ்ச்சி. ஆனால் சுட்டா முன்புபோல் இயங்கமுடியாது. அவன் கொஞ்சம் கவனமாக இருக்க வேண்டும். அவனை கடினவேலைகள் செய்யவேண்டாமென பொறுப்பாளர் சொல்லியிருந்தார்.

ஆனால் கொஞ்சம் கொஞ்சமாகவே சுட்டா முன்புபோல இயங்கத் தொடங்கினான். எப்போதுமே போராளிகளுள் ஒருவனாக நின்று தன்னை மறந்து வேலைகள் செய்தவன், அவனால் ஏனைய விழுப்புண்பட்ட போராளிகள் வேலை செய்யும்போது பார்த்துக்கொண்டிருக்க முடியவில்லை. போராளிகள் அவனைத் தடுப்பார்கள். ஆனால் “எனக்குப் பிரச்சினையில்லை என்னால செய்யமுடியும்” என்ற வார்த்தைதான் அவன் வாயிலிருந்து வரும். அவன் மீண்டும் பழைய சுட்டாவாகவே மாறியிருந்தான். அவன் எப்போதுமே தன் உடலின் வேதனையை மற்றவர்களுக்குக் காட்டியதில்லை. தான் இந்தத் தேசத்திற்காக நிறையச் செய்யவேண்டும் என்றே சொல்லிக்கொண்டிருப்பான்.


தமிழீழத் தேசியத் தலைவருடன் லெப்.கேணல் பிறையாளன்/சுட்டா

24.09.2005 அன்றய நாளின் காலைப்பொழுதில் லெப்.கேணல் நவம் அறிவுக்கூடத்தின் அப்பா எங்களை விட்டுப் பிரிந்த நாள். எல்லோரும் துடிதுடித்துப் போனோம். சுட்டா அப்பா இனி வரமாட்டாரா என்று எல்லாப் போராளிகளும் அழுதார்கள். அவனது வித்துடல் நவம் அறிவுக்கூடத்தில் வைக்கப்பட்டது. சுட்டா அப்பா, சுட்டா அப்பா என்று எல்லோர் வாய்களும் அவன் பெயரை உச்சரித்தபடி அழுதது. அவன் இல்லாதபோதுதான் அவனின் பெருமை புரிந்தது.

அதனால்தான் அவன் பத்து வருட காலமாகப் பணிபுரிந்த இம்ரான் பாண்டியன் படையணியின் அன்றைய நாள் சிறப்புத் தளபதியாக இருந்த கேணல் ஆதவன் அவரது நினைவுகளைச் சொல்லும்போது “இக்கட்டான சூழ்நிலைகளில் கடும் கஸ்ரங்களை எதிர்நோக்கி திறமையாக உழைத்த நல்லதொரு அணித்தலைவன்” என்று குறிப்பிட்டார்.

உண்மையும் அதுவே. அவன் நல்லதொரு வழிநடத்துனன், போராளிகளை மகிழ்விக்கும் திறன் வாய்ந்த கலைஞன், வீரம்மிக்க போர்வீரன், நல்ல தையலாளன், சிறந்த சமையலாளன், பாசம் செலுத்துவதில் வல்லவன். நிச்சயமாக அவன் ஒரு புதுமையான மனிதன். சாவு அவனது உயிரைப்பறித்தது உண்மைதான். ஆனால் எங்கள் நெஞ்சங்களில் அவன் உணர்வாய் என்றைக்குமே வாழ்ந்துகொண்டிருப்பான்.





# சமாதானகால முற்றுகைக்குள் சிக்கவைக்கும் முயற்சி

ஈழத்தமிழர்களாகிய எமது சனநாயக உரிமைகளை மீட்டெடுப்பதற்கான தேசிய விடுதலைப் போராட்டம் இன்று மிகப்பெரும் நெருக்கடி நிலையையும் அனைத்துக் குடிமக்கள் மீதும் விடுக்கப்பட்ட மாபெரும் சவாலையும் எதிர்கொண்டு நிற்கிறது. அதாவது சர்வதேச சமூகத்தை மீண்டும் ஒருமுறை ஏமாற்றியபடி தமிழர்களின் விடுதலைப் போரை முறியடிப்பதற்கான இறுதி முயற்சியில் சிங்களதேசம் தீவிரமாக இறங்கிவிட்டது.

2002.02.22 அன்று சிங்களதேசத் தலைமைக்கும் எமது தேசியத் தலைமைக்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியது. இவ் ஒப்பந்தம் சர்வதேச கண்காணிப்பாளர்களால் நடுநிலைமையோடு கண்காணிக்கப்படும், அதனால் சிங்கள தேசத்தின் எதேச்சதிகாரப்போக்கு தடுத்து நிறுத்தப்படும் என்ற நம்பிக்கையோடு அனைத்துத் தமிழ்மக்களும் சற்று நிம்மதியடைந்திருந்தனர். ஆனால் இவையனைத்தும் சிங்கள பேரினவாதத் தலைமைகளினால் படிப்படியாகத் தகர்த்தெறியப்பட்டன. புரிந்துணர்வு ஒப்பந்தம் என்ற உடலிலிருந்து ஒவ்வொரு அங்கங்களாக அகற்றப்பட்டு அகற்றப்பட்டு இறுதியில் அதன் தொண்டைக்குழியிலும் கத்தி வைக்கப்படும் நிலை உருவாகி வருகிறது.

தற்போதைய நிலையோ மிகவும் அபாயகரமானது. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மீளுயிர்ப்புச் செய்யவும் மனமின்றி அதன் இறுதி மூச்சை எடுக்கவும் திராணியற்று நாடகமாடிக் கொண்டிருக்கிறது சிங்கள அரசு. ஏனெனில் தமிழர்களுக்கு ஏதாவது சலுகைகளைக் கூட கொடுப்பதற்கு அவர்கள் தயாரில்லை. அதுபோல தமிழர் சேனையுடன் தற்போதைய நிலையில் நேரடிப் போர் புரிவதற்கும் அவர்கள் தயாராகவில்லை. சேடமிழுத்துக் கிடக்கும் சமாதானத்தை வைத்தபடியே அதன் பெயரால் அல்லது அதனது மறைப்பில் நின்றபடி தமிழர்மீது ஒரு முற்றுகை யுத்தத்தை நடத்தி அவர்களை பலவீனப்படுத்திவிடவே சிங்கள தேசம் திட்டமிட்டுச் செயலாற்றி வருகின்றது.

இந்நிலையை நாம் எம்மீது கட்டவிழ்த்து விடப்பட்ட மிகக் கொடுமையான யுத்தங்களின் காலகட்டங்களை விடவும் மோசமானதாகக் கருதமுடியும். அதாவது 1990களின் முற்பகுதியில் அப்போது எமது விடுதலைப் போராட்டத்தின் பிரதம செயற்பாட்டுத் தளமாக விளங்கிய யாழ்.குடாநாட்டில் சந்தித்த முற்றுகைக் காலத்தை விடவும், பின்னர் வன்னியில் மையங்கொண்டபோது 'ஜயசிக்குறு' கால முற்றுகையை விடவும் தற்போதைய நெருக்கடிநிலை வீச்சு மிக்கதாகும்.

அத்தகைய கால கட்டங்களிலெல்லாம் சர்வதேச மனிதநேய விதிமுறைகள் எல்லாவற்றையும் மீறியதொரு காட்டுமிராண்டித் தனமான யுத்தமே தமிழர்கள் மீது திணிக்கப்பட்டது. அதே வேளை தமிழர் தாயகத்தின் குரல்கள் நசுக்கப்பட்டு, செய்தித்தணிக்கைச் சட்டங்கள் விதிக்கப்பட்டு, சர்வதேச பிரதிநிதிகளின் வருகைகள் தடுக்கப்பட்டு அக்கொடூர யுத்தம் நீதிக்கானது என சர்வதேசப் பரப்புரை செய்யப்பட்டது. இருந்தபோதும் கூட எத்தகைய ஒடுக்குமுறைக்குள்ளிருந்தும் தனது மக்களைத் திமிறியெழச் செய்யும் வல்லமை படைத்த தமிழர் தலைமையால் அனைத்துத் தடைகளும் தகர்த்தெறியப்பட்டன.

உண்மையில் சிங்களதேசத்தின் படைகள் அண்மையில் ஜே.வி.பியினர் கூறியபோல நாட்டைக் காப்பாற்றுவதற்கு வக்கற்ற படைகளாக, தேல்வி கண்ட படைகளாக மாற்றப்பட்டன. அதனால்தான் சிங்கள தேசம் இத்தகையதொரு பேச்சுவார்த்தை நாடகத்திற்கு முன்வந்தது. அன்றி மனமாற்றத்தினால் அல்ல.

பேச்சு மேசைகளில் இருந்தபடியே சமாதானத்திற்கான வழிவகைகள் பற்றிச் சிந்திப்பதற்கு மாறாகத் தமிழர் தரப்பை வீழ்த்துவதற்கான சூழ்ச்சிகள் பற்றிச் சிந்திப்பதற்கே சிங்களத் தலைமைகள் முற்பட்டன. படிப்படியாக அந்நிலை நோக்கிப் பேச்சுக்களை அவர்கள் திசைதிருப்பிச் சென்றார்கள். இறுதியில் பயங்கரவாத நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டிருக்கும் சர்வதேச மனநிலையை இலகுவாக ஏமாற்றிவிடவல்ல வழிமுறைகளைக் கண்டுகொண்டார்கள். தமிழர்களின் நீதிக்கான போராட்டத்தை அந்த ஆயுதத்தை வைத்தே தோற்கடித்து விடலாம் என அவர்கள் எண்ணிக்கொண்டு, தீர்வுநோக்கிய திசையிலிருந்து பேச்சுக்களை முடக்கநிலைக்குக் கொண்டு வந்தார்கள்.

இவ்வாறாகச் சமாதானகால முற்றுகை தமிழர்கள்மீது தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான இறுதியாக மேற்கொள்ளப்பட்ட நகர்வுகளே ஐரோப்பிய நாடுகளுக்கான தமிழர் பிரதிநிதிகளது பயணத்திற்கான முட்டுக்கட்டையும், இராணுவ ஆக்கிரமிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ள தமிழர் தாயகப் பகுதிகளிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளது அரசியல் போராளிகள் தீவிர தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளமையுமாகும்.

இவற்றின்மூலம் இந்த மூன்றரை வருட சமாதான முயற்சிகள் முற்றாகப் பின்னோக்கிச் சென்று தொடங்கிய இடத்திற்கே மீண்டும் வந்துள்ளன. தற்போதைய நிலைமைகளில் தமிழர்கள் சமாதான வழிமுறையில் நம்பிக்கை கொள்வதற்கு ஏதுமில்லை என்றாகிவிட்டது. எதிர்பார்த்திருப்பது என்பதற்குப் பதிலாக எதிர்த்துச் செயலாற்றித் தற்காத்துக் கொள்வது என்ற நிலைக்கு அனைத்து தமிழீழக் குடிமக்களும் தள்ளப்பட்டுள்ளார்கள்.

குறிப்பாகப் புரிந்துணர்வு உடன்படிக்கைகளுக்கு விரோதமாக ஆயுதக் குழுக்களை வளர்த்தெடுத்து அவற்றை மக்கள் மீதும் போராளிகள் மீதும் செயற்பட வைத்ததன் மூலம் எமது அரசியற் போராளிகள் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அரசியற்பணி செய்யமுடியாதபடி முடக்கப்பட்டு, வெளியேற்றப்பட்டார்கள். இதன் பின்னாலுள்ள நாசகாரச் சதித்திட்டம் அனைத்துத் தமிழ்பேசும் மக்களாலும் புத்திபூர்வமாகவும் விழிப்புடனும் எதிர்கொண்டு முறியடிக்கப்பட வேண்டியதாகும்.

**மேற்படி நடவடிக்கையின் பின்னாலுள்ள சதித்திட்டம் என்னவெனில் தமிழ்பேசும் மக்களின் தேசியத்தைச் சிதறடிப்பதுடன் அதனுள்ளான தனது ஊடுருவலை மேலும் வலுப்படுத்துவதாகும். சாதி, சமயம், பிரதேசம் என்றிருந்த வேற்றுமைகளை முறியடித்து எவ்வாறு தமிழீழ விடுதலைக்கான போராட்டம் வீச்சுப்பெற்றதோ அவ்வாறே அவற்றை மீண்டும் வளர்த்தெடுப்பதன் மூலம் அப்போராட்டத்தை பலவீனப்படுத்திவிட முடியும் என சிங்களத் திட்டமிடலாளர்கள் திட்டம் தீட்டியுள்ளனர். இதற்கெனவே சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் கீழ் சிறப்புப்பிரிவு ஒன்றும் உருவாக்கப்பட்டு செயற்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.**



மேற்படி நடவடிக்கையின் பின்னாலுள்ள சதித்திட்டம் என்னவெனில் தமிழ்பேசும் மக்களின் தேசியத்தைச் சிதறடிப்பதுடன் அதனுள்ளான தனது ஊடுருவலை மேலும் வலுப்படுத்துவதாகும். சாதி, சமயம், பிரதேசம் என்றிருந்த வேற்றுமைகளை முறியடித்து எவ்வாறு தமிழீழ விடுதலைக்கான போராட்டம் வீச்சுப் பெற்றதோ அவ்வாறே அவற்றை மீண்டும் வளர்த்தெடுப்பதன் மூலம் அப்போராட்டத்தைப் பலவீனப்படுத்திவிட முடியும் என சிங்களத் திட்டமிடலாளர்கள் திட்டம் தீட்டியுள்ளனர். இதற்கெனவே சிறீலங்கா இராணுவப் புலனாய்வுப் பணியகத்தின் கீழ் சிறப்புப் பிரிவு ஒன்றும் உருவாக்கப்பட்டுச் செயற்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது.

இந்த நடவடிக்கைகளைப் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழும் நாடுகள் எங்கணும் விரிவாக்கிச்செல்லும் நோக்கையும் ஒரு காரணமாகக் கொண்டே புலிகள் மீதான ஐரோப்பிய நாடுகளுக்கான பயணத்திற்கான முட்டுக்கட்டை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளின் பிரதான செயற்பாடுகளாகவே தென் தமிழீழப் பகுதிகளில் வலுவடைந்து வரும் தமிழ் - முஸ்லீம் உறவைச் சீர்குலைப்பதற்கான முயற்சிகளும், யாழ்.குடாநாட்டில் சாதிக் கலவரங்களை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றின்போது விட்டுச் செல்லப்பட்ட தடயங்களும், விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்ட உண்மைகளும் இராணுவப் புலனாய்வாளர்களின் இத் திட்டமிட்ட நாசகரச் செயலை அம்பலப்படுத்தியுள்ளன.

தென்தமிழீழப் பகுதிகளில் தமிழ் - முஸ்லீம் கலவரத்தைத் தூண்டிவிடுவதற்காக இராணுவ புலனாய்வுப் பிரிவினரால் திட்டமிட்ட முறையில் பல முஸ்லீம்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இருந்தபோதும் இரு பகுதியினருக்குமிடையேயிருந்த வலுவான தொடர்பாடல்கள் மூலம் இச் சதித்திட்டம் முறியடிக்கப்பட்ட நிலையில் உள்ளது. அதுபோலவே யாழ்.குடாநாட்டில் சாதிக் கலவரங்களை உருவாக்குவதற்கு இராணுவ புலனாய்வுப் பிரிவினர் சில கொலைகளை மேற்கொண்டமையும், தனது முகவர்களுக்கு ஆயுதங்களை வழங்கி ஊக்குவித்தமையும் தற்போது அம்பலத்திற்கு வந்துள்ளன.

இவ்வாறு தமிழ்மக்கள் மீது இன்று தொடுக்கப்பட்டிருக்கும் இச் சமாதானகால யுத்தம் இன்னும் இன்னும் சூழ்ச்சிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கான ஏதுநிலைகள் தோன்றியுள்ளன. இதற்குச் சர்வதேச சமூகமும் ஏதுமறியாதது போலச் சந்தர்ப்பம் வழங்க முன்வந்துவிட்டதா என தமிழ்மக்கள் ஐயங்கொள்ளத் தொடங்கியுள்ளனர். எனவேதான் தமிழர்கள் எப்போதும்போலத் தீவிர விழிப்புநிலையைத் தம்மிடம் ஏற்படுத்துவதற்கான காலத்தேவை தற்போது ஏற்பட்டுள்ளது. ●

- தீபன் -

உலைக்களம்

வியாசன்

# ஆத்தாள் கண் திறப்பாள் வீரவாளுடன் வெளியே வா

நம்பிக்கை நிலவில் முகில் கவிய
இருள் விளைந்து கிடக்கிறது எம் நிலம்.
இருந்த வழி யாவும் அடையுண்டு போக
சுவரில் மோதுகிறது தலை.
பேச்சுக்காய் வாங்கிய முகமூடி அகற்றி
போருக்கான சொந்த முகத்துடன் சிங்கள அரசு.
பொய்யாய் சோடித்த சிரிப்புதறி
இயல்பான மெய்யுடுத்திக் கொண்டது
அதிகாரக் கொடிமரம்.
'கெமுனு புத்தாக்கள்' போருக்கு அணிவகுத்து
'எல்லாள பிள்ளைகளை' எதிர்பார்க்கின்றனர்.
அமைதிக்கென வந்திறங்கிய வெள்ளைப் புறாவை
அவர்கள் கறிசமைத்து அதிக நாட்களாயின.
இப்போ புறாவின் இறகுகளில் தொப்பிதைத்து
உலக ஒப்பனைக்கு ஊர்வலம் வருகின்றனர்.
உலகமென்பதும் நாங்கள் நினைப்பதுபோல
உத்தமஅரசுகளால் நிரம்பியதல்ல.
எங்கும் 'அதிகாரக் கதிரைகளே' ஆளுகின்றன.
இனம் வேறாகி
மொழி வேறாகி
மதம் வேறாகிக் கிடக்குதன்றி
ஆணிவேர்களெல்லாம் அடக்குமுறையாளர்களே.
இப்போ புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு
பேதியும், வாந்தியுமாம்.
சமாதானப் பேச்சுக்கு சலரோகமாம்
ஊசி மருந்துக்கு ஓடித்திரிகிறது உலகு.
மூன்று வருடங்களாகப் பிள்ளையையும் கிள்ளி
தொட்டிலையும் ஆட்டியவர்கள்
இன்று சிங்களதேசம் அம்மணமானதும்
மறைப்புக்கட்ட
மாராப்புச் சேலை விரிக்கின்றனர்.
கட்டுநாயக்காவின் கராஜ்சிலும்
சூனியப் பிரதேசத்தின் மரத்தடியிலும்
பேச வருமாறு கேட்பதின் அர்த்தமென்ன?
தொடர்ந்தும் இப்படி இழிவோமெனில்
அடுத்தது வவுனியா பஸ் நிலையமென்றாலும்
ஆச்சரியப்படுவதற்கில்லை.
நேற்று ஒளியுடுத்திய பயணிகளாக
நேர்வழியில் நடந்தோம்.
அனற்காற்று வீசியதென்னவோ உண்மைதான்.
ஆயினும் நெடிய நெருப்பாயல்லவோ இருந்தோம்.
நமக்கென்றோர் வழி தேடி நடந்து
நமக்கென்றோர் குழி தேடிக் குளித்து
சந்தனம் பூசிய மார்பினராய் இலங்கினோம்.
சூரியனே இறங்கி வந்து சுகம் கேட்டதாய்
நிலவு உருகி வந்து திலகமிட்டதாய்
எந்த இழிவுமற்று
எவரும் உரசமுடியா உயரத்திலிருந்தோம்.
பார்ப்பவர் கண்ணில் பிரகாசமாய் ஒளிர்ந்தோம்.
வடிவனைத்தையும்
வந்தவரிடம் கொடுத்துவிட்டு
கிடக்கிறோம் கிழிந்த பாயாய் இன்று.
தெற்கில் மீண்டும் திருவிழா தொடங்கியது.
கொடியேற்ற உபயம் மகிந்தாவுக்கு
பூங்காவன உபயம் ரணிலுக்காம்.
எங்களையும் சாமிதூக்க அழைக்கின்றனர்.
தமிழரை வெட்டித்தள்ள ஒருவன்
சுட்டுச் சரிக்க மற்றொருவன்.
ஐம்பது வருட அனுபவத்தின் பின்னும்



பூசைக்குப்போக ஆசைப்படலாமா?
கால் மிதித்த சேற்றையே கழுவமுடியவில்லை
கையையுமா நரகலில் நனைப்பது?
அவர் வருவார் இவர் தருவாரென்று
காத்திருப்பதிலும் யாசிப்பதிலும் கழிக்காமல்
கொற்றவைக் கிழவிக்கு மடைபரவிக் கூத்திடு.
அவள் கையிருக்கும் வாள்கேட்டுத் தவமிரு.
ஆத்தாள் கண்திறப்பாள்
வீரவாளுடன் வெளியே வந்து
ஆர்ப்பரிக்கும் கடல் நோக்கி விரை.
அங்கே 'ஓயாத அலை' உறுமிக்கொண்டிருக்கும்
அலைமீதேறிப் பயணம் போ.
இடைமறிக்கும் தடைசரிய நடப்பாயானால்
எம் இலக்கு எட்டும்.
காலம் எமக்காகத்தானே காத்துக்கிடக்கிறது.
பறந்து பறந்து திசைகளைக் கடந்து
ஈழத்தமிழரின் சோகம் சொன்னோம்.
தாகம் சொன்னோம்
பாதி உலகம் நம்மைப் பற்றியுள்ளன.
அழுத கண்ணீரை அளவெடுத்துள்ளன.
இனிப் போரைத் தொடங்கப் பிந்தக்கூடாது.
சின்ன வட்டத்துள் சிலிர்ப்போமெனில்
பெரிய வட்டம் போட்டுப் பொத்த முயல்வார்கள்.
முன்னே நடக்கும் முதல்வன் இன்றியும்
குறிகாட்டும் நட்சத்திரம் இன்றியுமே
பயணங்கள் பல பாதியில் முடிந்தன.
எம் சேனைக்கில்லையே இந்த இழிவு.
தலைவனே முன்ரதத்தின் சாரதியாய் வருகின்றான்.
அணிவகுப்பின் முதல் வரிசையிலல்லவா
தலைவன் கொடியேந்தி நிற்கிறான்.
காற்றாய் விரையுமெம் தேரிடை நசிந்து
சேறாய்க் கரையும் பகைச்சேனை.
விடுதலையென்பது கடையினில் இல்லை
சனநாயகமென்ற போர்வை போர்த்திய
பாராளுமன்றுக் கதிரையில் இல்லை.
விடுதலை:பறித்தவனிடமிருந்து எடுப்பதிலும்
அடக்குமுறையை உடைப்பதிலுமே கிட்டும்.
தமிழீழம் என்ற சொல்
உதடுகள் நோகாமல் உச்சரிப்பதற்கல்ல.
கைமாறிக் கம்பு கொண்டோடும்
அஞ்சலோட்டத்துக்கானதும் அல்ல.
எடுத்த தலைமுறை முடிக்கும் போதே
உண்மைவிடுதலையை உணரமுடியும்.
கட்டுகள் அனைத்தும் உடைய
நுகத்தடிகள் யாவும் பொடிபட
நமக்கானதை நாமேஎடுப்பது
விடுதலை எனப்படும்.
போராட்டமென்பதும்; புரட்சியென்பதும்
அகராதியிலிருந்து அழியும் சொற்களல்ல
அது உயிரில் கலக்கும் உன்னதம்.
எல்லோரும் ஒன்றாகி இணையும் போது
குருதி வழிய நடக்கிறது புதிய பிறப்பு.
பிரவசம் போல போராடக் கிடைக்கிறது.
தமிழீழம் இப்படித்தான் மலரும்.
வரலாறு எம்மை எழுதாதுவிடினும்
வரலாறொன்றை நாமே எழுதுவோம்.
இப்போது எமக்கு வேண்டுவதெல்லாம்
விடுதலை உணர்வு
வெல்வோமெனும் நம்பிக்கை
படையாகும் பலம்
பயமற்ற நெஞ்சு
இருந்தால் வெல்வோம்
இல்லையேல் வீழ்வோம்.